



அறைவு 03 இயம் 12 October 18-24 , 2014

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு

MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பக்கங்கள் : 16 விலை : 30.00

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்







# மட்டக்களப்பைத் தத்தெடுப்பேன்



தேர்தலில் வென்றால் மட்டக்களப்பைத் தான் தத்தெடுக்ப்பபோவதாக கனேடிய வேட்பாளர் ஒருவர் கனடியத் தமிழர்களிடம் வாக்குறுதியளித்துள்ளார். கனடாவின் தெற்கு ஒன்றாரியோ மாநில மிச்சிச்சுகா (Mississauga) மாநகர சபை மேயர் 13

# அம்பாறை கரையோர மாவட்டம்!!!



அம்பாறையைத் தனியான கரையோர மாவட்டமாக உருவாக்காவிட்டால் கிழக்கின் முதலமைச்சர் பதவியை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் குரலெழுப்பியுள்ளது.


கிழக்கு மாகாண சபையின் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் குழுத் தலைவர் ஏ.எம். ஜமீல் தமது கட்சி இவ்விடயத்தில் இறுக்கமாக இருக்கும் எனத் தெரிவித்துள்ளார். 13

# "மக்கள் மடக்கிப்பிடித்த கொள்ளையர்" உணவுக்கடையின் உரிமையாளருக்கும் தொடர்பா?

## காவல்துறை நடவடிக்கை டுெக்க அஞ்சுவதாக மக்கள் சந்தேகம்!

அன்புவழிபுரத்தில் கொள்ளை நடவடிக்கையில் ஈடுபட்ட ஒருவரை மக்கள் கடந்த 14ம் திகதி இரவில் மடக்கிப் பிடித்துள்ளனர். கடந்த சில மாதங்களாகக் கொள்ளை நடவடிக்கைகள் அன்புவழிபுரத்தில் தீவிரம் அடைந்ததைத் தொடர்ந்து மக்கள் விழிப்புடன் செயற்படத் தொடங்கியிருந்தனர். அதன் பேறாகவே இக்கொள்ளையன் கைதாகியுள்ளான். 13





# "மு" என்றாள் முட்டாள் அல்ல -டக்ளஸ்-

# "மு.அ" என்றாள் முதுகெழும்பில்லாத அடிமை அல்ல -ஸ்ரீதரன்-



மு.அ. டக்ளஸ் தேவானந்தா என்றால் முதுகெலும்பில்லாத அடிமை என்று நான் சொல்ல வரவில்லை. முக்கிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா என்றே கூறுகின்றேன் என சிறீதரன் நா.உ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுடன் சேர்ந்து வடககிற்கு வருகை தந்திருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கிளிநொச்சியில் பேசியபோது 13

# மேலதிக ஆசிரியர்களை மாற்றித் தாருங்கள்


## முதலமைச்சரிடம் சேனையூர் மத்திய கல்லூரி வேண்டுகோள்



மேலதிகமாக நகரப் பிரதேசங்களில் உள்ள ஆசிரிய ஆளணியினை வளப்பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ள பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யவேண்டும் என்ற கோரிக்கை கிழக்கின் முதலமைச்சரிடம் வைக்கப்பட்டுள்ளது. 13

# வடமாகாணம் தனிநாடா?

## அரியம் எம்பி கேள்வி



2009 க்குப் பின்னர் நாட்டில் எந்தப் பாகத்திற்கும் யாரும் செல்ல முடியும் என்று கூறிய அரசாங்கம் இன்று வட மாகாணத்திற்கு மாத்திரம் தடை விதிப்பதற்கான நோக்கமென்ன என்று கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

வடக்குக்கு செல்லும் வெளிநாட்டவர்கள் முன்கூட்டிய அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டுமென இராணுவப் பேச்சாளர் பிரிக்கேடியர் ரூவான் வணிகசூரிய தெரிவித்த கூற்று தொடர்பாக கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
malaimurasu@hotmail.com 075-4252042

## வைக்கோல் பட்டறை நாய்!!!!

வடக்கிற்குப் பயணித்திருந்த சனாதிபதி அங்கு கிளிநொச்சியில் நடைபெற்ற கூட்டமொன்றில் வடமாகாணசபையையும் அதன் அங்கத்தவர்களையும் வைக்கோல் பட்டறை நாய்கள் எனத் தெரிவித்திருந்தார். அதன் போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களும் 'மு' விக்னேஸ்வரன் எனத் தெரிவித்திருந்ததும் பெரும் சர்சைகளைக் கிளப்பியுள்ளது.

ஒரு நாட்டின் சனாதிபதி அந்நாட்டின் மாகாணங்களில் ஒன்றில் ஆட்சி நடாத்திவரும் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட சனநாயக அமைப்பொன்றை நோக்கி இவ்வாறான வார்த்தைப் பிரயோகத்தை மேற்கொண்டிருப்பது மிகவும் அதிர்ச்சியை அம்மக்களிடையே ஏற்படுத்திவிட்டுள்ளது என்பதில் ஐயமில்லை.

மக்கள் சிறுகச் சிறுக தமது இழப்புக்களை மறந்து தேசிய அரசியல் நீரோட்டத்தில் தம்மை ஈடுபடுத்திக்கொள்ள முயற்சி மேற்கொண்டு வரும் வேளையில் சனாதிபதி இவ்வாறு தெரிவித்திருப்பது ஒட்டுமொத்த அரச வர்க்கத்தின் எண்ணத்தை பிரதிபலித்திருப்பது போலத் தோன்றுகின்றது.

போரில் ஈடுபட்ட மக்கள் புறந்தள்ளப்பட வேண்டியவர்கள் என்ற அதிகார வர்க்கச் சிந்தனையில் ஆண்டுகள் ஐந்து கடந்தும் மாற்றங்கள் வரவில்லையா? மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் ஏன்? அரச விழாக்களைப் புறக்கணிக்கின்றார்கள் என்பதை நியாயத்தராசில் போட்டுப்பார்க்கும் நிலையில் அரச வர்க்கம் இல்லையா?

ஆசியாவின் அதிசயமாக இலங்கையை மாற்றுவோம் என்ற அரசின் உன்னதமான கனவில் வடக்கும் கிழக்கும் உள்வாங்கப் படவில்லையெனில் அது வெறும் கனவாகவே இருக்கும் என்பது வெள்ளிடைமலை...

சொந்த நிலத்தில் குடியேற முடியாத நிலைமை, தொடரும் அத்து மீறிய குடியேற்றங்கள், வடக்கிலும் கிழக்கிலும் இன்னும் நிலைத்திருக்கும் இடைத்தங்கல் முகாம்கள் என்பவற்றுக்கிடையே யாழ் நோக்கிச் சென்ற தொடருந்துடன் தமிழர்களின் அவல நிலை ஓய்ந்துவிடும் எனக் கொள்வது தகுமா? அதனைச் சரியாகப் புரிந்துகொண்டு அவ்விழாக்களை தார்மீக வழியில் தவிர்த்திருப்பதை வைக்கோல் பட்டறைக்கு ஒப்பிட்டமை உகந்ததா? என்ற கேள்விகள் எழுகின்றன.

அண்மையில் திருமலையில் நடைபெற்ற இலக்கியச் சந்திப்பில் மேடையில் கனவான்கள் கீழ்த்தரமான வார்த்தைகளைப் பாவித்தபோது எழுந்த அதிர்வுகள் தற்போது மேடையில் சனாதிபதியும் அமைச்சரும் பாவித்த வார்த்தைகளால் தூசாகிப் போய்விட்டன.

விழாக்களுக்குச் செல்வதைத் தவிர்த்து விடுவதால் மட்டும் தமது தாரமீக எதிர்ப்பை வெளியிட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நினைத்துக்கொண்டிருப்பது தவறானதே.

சனாதிபதி வருகை தந்த விழாவொன்றுக்குச் செல்லாமைக்கான சரியான காரணங்களைச் சரியாகவும் தெளிவாகவும் மக்களுக்கு விளக்க வைக்கி வேண்டிய பொறுப்பும் அவர்களுக்கு உண்டு என்பதுடன் உலகெங்கும் வாழும் மக்களுக்குத் தெரியப்படுத்தவும் வேண்டும் என்பது முக்கியமானது தானே..

வடக்கிற்கு வரும் சனாதிபதி கட்டாயம் வடமாகாணசபையின் அமர்வொன்றுக்கு வரவேண்டும் என்ற பிரேரணையை ஏன் அவர்கள் வடமாகாண சபையில் நிறைவேற்றாது விட்டார்கள்?

இவற்றையெல்லாம் சரியாகச் செய்யுமிடத்து உலகெங்கும் வாழ்பவர்களுக்கு 'வைக்கோல் பட்டறை நாய்' என்பதை அர்த்தப்படுத்த தேவை இருக்காது என்பதே உண்மை......!

## சனாதிபதிக்கே 'செக்' வைத்த சுமந்திரன்

பொது மக்களின் பொக்கிசங்களை அரச தலைவர் சூறையாடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் தங்கங்களை கொள்ளையடித்த, சொந்த நோக்கில் செலவு செய்த குற்றச் சாட்டினை ஜனாதிபதிக்கு முன் வைக்கின்றோம் என தெரிவித்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசியல் அமைப்பில் தனக்கிருக்கும் அதிகாரத்தினை தவிர்த்து விட்டு இந்த குற்றச்சாட்டிற்கு ஜனாதிபதி முகம் கொடுக்க வேண்டும் எனவும் சவால் விடுத்துள்ளது.

அதிகாரத்தினை பகிர்ந்து ஐக்கியப்படுத்தும் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்துக் கொண்டு கருத்து தெரிவித்த போதே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனே இக்குற்றச்சாட்டினை முன்வைத்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

அவை அனைத்தும் மக்களின் ஆபரணங்கள் ஒவ்வொருவரது பெயர்களும் குறிக்கப்பட்டு பகுதி பகுதியாக வைக்கப்பட்டிருந்த தங்க ஆபரணங்கள் அவற்றில் சிலவற்றினை ஜனாதிபதி தற்போது மக்களுக்கு கொடுக்கின்ற நிலையில் ஏனைய மக்களும் தமது ஆபரணங்கள் தொடர்பில் கேள்வி எழுப்பியுள்ளனர். அரச வங்கிகளில் வைக்கப்பட்டிருந்த தங்க ஆபரணங்களை அரசாங்கம் எடுத்துக்கொண்டது. இத்தனைக்காலமும் அவை எங்கே என்ற கேள்வி இருந்தபோது தற்போது ஐந்தரை ஆண்டுகள் கழிந்து ஒருசிலரின் ஆபரணங்களை ஜனாதிபதி கொடுத்திருக்கின்றார். இது எப்படி சாத்தியமாகும் என்பது மக்களுக்கும் எங்களுக்கும் புரியாத புதிராக உள்ளது. நாங்கள அரசாங்கத்திடம் கேட்கின்றோம். இப்போது நீங்கள் கொடுத்த தங்கம் இத்தனை நாட்களாக யாருடைய கைகளில் இருந்தது? எமது மக்களின் தங்கத்தை ஜனாதிபதியின் வீட்டிலேயே வைத்திருந்தீர்களா? இவ்வளவு காலமும் இந்த தங்கத்தை எவ்வாறு உபயோகித்தீர்கள்? இது மிகவும் பாரதூரமான தண்டனைக்குரிய குற்றமாகும். இவ்வாறு பொது மக்களின் பொக்கி'ங்களை வெள்ளையடிப்பதும், சொந்த நோக்கில் உபயோகிப்பதும் தண்டிக்கப்பட வேண்டிய குற்றம். அந்த குற்றச்சாட்டினை ஜனாதிபதிக்கு முன்னாள் வைக்கின்றோம். முடிந்தால் அவர் அரசியல் அமைப்பில் இருக்கும் தனது பாதுகாப்பினை தவிர்த்து விட்டு இந்த குற்றச்சாட்டிற்கு அவரால் முகம் கொடுக்க முடியுமா என நாம் சவால் விடுக்கின்றோம்.

இது ஒரு சாதாரண விடயம் அல்ல. ஐந்தரை ஆண்டுகளாக ஒருவர் தங்கப் பொக்கிசத்தினை தன்வசம் வைத்துள்ளார் எனின் அது சாதாரண விடயம் அல்ல. ஏன் இதைத்திருப்பி கொடுக்கவில்லை. இன்றும் எத்தனை பேரின் தங்கங்களை இவர் வைத்திருக்கின்றார் இதற்கான கணக்கு எங்கே இருக்கின்றது. என பல கேள்விகள் எழுகின்றன என சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

## நாடாளுமன்றில் பதிலடி........

கிளிநொச்சியில் நடைபெற்ற கூட்டத்தில் வடமாகாண சபை முதல்வரையும் வடமாகாணசபையையும் கீழ்த்தரமாக விமரிசித்த சனாதிபதியின் கூற்றுக்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் என்ற அடிப்படையில் பதிலடியை நாடாளுமன்றத்திலேயே வழங்கவுள்ளதாக தலைவர் சம்பந்தன் குமுரைத்துள்ளார்.

## விடுதலைப்புலிகளின் தடை விலகியது 3 மாதம் காத்திருக்க வேண்டும்

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை ரத்து செய்து ஐரோப்பிய யூனியன் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் மீது. ஐரோப்பிய யூனியன் பல கட்டுப்பாடுகளை விதித்ததோடு, தனிநபர்கள் மீதும் இந்த கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்தது.

விசாரணையின் பின் விடுதலைப் புலிகள் இயக்கம் மற்றும் சில தனிநபர்கள் மீதான கட்டுப்பாடுக்ளை ரத்து செய்துள்ள நீதிமன்றம், விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தற்போதைய கட்டுப் பாடுகள் பொருத்த மற்றவை என்று தீர்ப்பளித் துள்ளது.

கட்டுப்பாடுகள் அவசியம் என்றால் அது பற்றி 2 மாதங்களுக்குள் யோசனைகளை வழங்கலாம் என்றும். கட்டுப்பாடுகள் ரத்து செய்யப்பட்டது 3 மாதங்களுக்கு பின் நடைமுறைக்கு வரும் என்றும் நீதிமன்றம் கூறியுள்ளது. மேலும், விடுதலைப்புலிகளின் வழக்கு செலவை ஐரோப்பிய யூனியன் செலுத்தவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## 2015 புதிய பாடத்திட்டம்

2015 ஆம் ஆண்டில் புதிய விஞ்ஞான பாடத்திட்டத்தினை அறிமுகம் செய்வதற்கான நடவடிக்கைகளை கல்வி அமைச்சு மேற்கொண்டு வருகின்றது.

தரம் 6 முதல் 10 வரையான மாணவர்களின் நலன் கருதி இப்புதிய விஞ்ஞான பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இதற்கிணங்க நாடு தழுவிய ரீதியில் விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கு இப்புதிய பாடத்திட்டம் தொடர்பான செயலமர்வுகளை கல்வி அமைச்சு முன்னெடுத்து வருகின்றது.

## வன்புணர்வு முயற்சி

திருகோணமலை, வடலிக்குளம் பகுதியில் இரண்டு சிறுமிகளை துஸ்பிரயோகத்திற்கு உட்படுத்திய சந்தேக நபரை காவல்துறை கைது செய்துள்ளனர்.

சம்பவத்தில் 12 வயது மற்றும் 13 வயதுடைய சிறுமிகளே துஸ்பிரயோகத்திற்கு உட்படுத்தப் பட்டுள்ளனர்.

## கோளைக்கொலை

மட்டு - சின்ன ஊறணியில் 57 வயதுடைய சுந்தரநாதன் சந்திரகுமார் என்பவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குடும்ப பிரச்சினை காரணமாகவே இவர் கோழைக்கொலை செய்து கொண்டுள்ளதாகவும் இது தொடர்பான விசாரணை நடைபெற்று வருவதாகவும் மட்டக்களப்பு காவல்துறையினர் தெரிவித்தனர்.

## மின்தாக்கி மரணம்

நல்லதம்பி ஜேசுதாஸ் (46 வயது) எனும் குடும்பஸ்தர் மின்தாக்குதலால் உயிரிழந்துள்ளார்.

கல்முனை மாதவன் வீதியிலுள்ள தனது தாயின் வீட்டிலுள்ள மாமரத்தில் ஏறி வழமையை போன்று இரும்பு கம்பி ஒன்றினால் மாங்காய் பறிக்க முனைந்த போது தவறுதலாக குறித்த இரும்பு கம்பி அருகிலுள்ள அதிசக்தி வாய்ந்த மின் கம்பியில் பட்டதால் மின்சாரம் தாக்கியுள்ளது.

## பேருந்துக்குத் தாக்குதல்

கிளிநொச்சியிலிருந்து திருகோணமலை நோக்கிச் சென்று கொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பே'ருந்தின் மீது 14ம் திகதி அதிகாலை மாங்குளத்தில் வைத்துத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக சாரதி மாங்குளம் காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

## தடம் மாறிய டாங்கர்



திருகோணமலையை நோக்கி வந்துகொண்டிருந்த மசகு எண்ணைப் பாரஊர்தியொன்று உப்புவெளிச்சுற்று வட்டத்தில் கட்டுப்பாட்டை இழந்து மினமாற்றிக் கோபுரங்களைத் தகர்துதுள்ளது

சாரதி அச்சத்தில் அங்கிருந்து ஓட்டமெடுத்திருந்தார். உடனடியாகவே பாரஊர்தியை வெளியே எடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்தவார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதான பார்வை

## the Sunday Observer

### வடக்கின் நலன்புரிச் சேவை நிகழ்வுகளைத் தவிர்த்தால் கண்டனத்தில் – த.தே.கூ

வடக்கின் முதல்வர் மற்றும் த.தே.கூ வின் மீது சிரேட்ட அமைச்சர் டியூ குணசேகர கண்டனங்களை வெளியிட்டுள்ளார். சமூக நலத் திட்டங்கள் மற்றும் யாழ்தேவியின் யாழ் வருகை போன்றவற்றில் ஈடுபட சனாதிபதி யாழ்ப்பாணத்திற்குச் சென்ற வேளையில் அந்நிகழ்வுக்குச் செல்ல வடக்கின் முதல்வரும், த.தே.கூவும் மறுத்திருந்தனர். அவற்றைக் கருத்திற் கொண்டே அமைச்சர் இக் கண்டனத்தை வெளியிட்டு இருந்தார். 'நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளான காணி உறுதிப்பத்திரம் வழங்குவது, இழப்புக்களுக்கு நட்டஈடு வழங்குவது போன்றவற்றுக்காகவே சனாதிபதி அங்கு சென்றார்.' என அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.



### பகிடிவதை ஒழிக்கப்படும் – பல்கலைக்கழகங்களில் மாற்றம்



பகிடிவதை ஒழிக்கப்பட்டமையானது பல்கலைக்கழகங்களில் பாரிய மாற்றத்தை உருவாக்கியுள்ளதுடன் புதிய மாணவர்கள் அச்சமின்றி உள்நுழையவும் வழி ஏற்படுத்தப்பட்டுள்ளதாக உயர் கல்வி அமைச்சர் ஞ்.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இருப்பிட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக முன்மொழியப்பட்டுள்ள 60 விடுதிகளை கட்டும் திட்டத்தில் தற்போது வரை 30 இருப்பிடக் கட்டிடத் தொகுதிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அடுத்த 9 மாதங்களுக்குள் 30 கட்டிட தொகுதிகள் கட்டிமுடிக்கப்பட்டவுடன் சுமார் 24,000 மாணவர்கள் இருப்பிட வசதியைப் பெற்றுக்கொள்வர். மேலும் புதுமுகமாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி 30 பயிற்சி முகாம்களில் நடைபெறுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

### குழுவன் முறையில் சப்ரகமுவ மாணவர்கள் காயம்

உணவுத் தவிர்ப்புப் போராட்டப் பந்தல் மீது அடையாளம் தெரியாத காடையர்களால் மேறடகொள்ளப்பட்ட தாக்குதலில் 12இற்கு மேற்பட்ட சப்ரகமுவ மாணவர்கள் காயமடைந்துள்ளதாக காவல்துறை தெரிவித்துள்ளது. மாணவர் இருப்பிட வசதி தொடர்பாக எழுந்த சர்ச்சையை அடுத்து மாணவர்கள் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட பந்தல் மீதே வாள், பொல்லுகள் மற்றும் பெற்றோல் குண்டுகளால் காடையர்கள் தாக்குதல் நடாத்தியிருந்தனர்.

### சாட்சிகள் பாதுகாப்புச் சட்டமூலம் – பாதிக்கப்பட்டோருக்கு நட்டஈடு வழங்கப்படும்

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு ஏற்ப உருவாக்கப்பட்டுள்ள சாட்சிகள் பாதுகாப்புச் சட்டமூலம் குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நட்டஈட்டை வழங்கவுள்ளது. நட்டஈட்டுக்கான ஒதுக்கீட்டைப் பெற்றுக் கொள்வதற்காக இச்சட்டமூலம் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இச்சட்ட மூலமானது அரசியலமைப்புச் சட்டத்தின் 121ம் சரத்தை மீறுவதாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்ட போதும் அதனை மீயுயர் நீதிமன்றம் விசாரித்து திருத்தி வெளியிட்டுள்ளது.

### ஒய்வூதிய சம்பளத்தை கையடக்க தொலைபேசியில் வழங்க மொபிடெல் நடவடிக்கை

ஓய்வூதியத் திணைக்களத்துடன் இணைந்து எம் - காஸ் எனும் புதிய முறையொன்றை உருவாக்க தேசிய தொடர்பாடற் சேவை வழங்குனர் மொபிடெல் நடவடிக்கை எடுத்துள்ளது. இம்முறை மூலம் ஓய்வூதியப் பணம் ஓய்வூதியதாரரின் எம் - காஸ் கணக்கிற்கு நேரடியாக வைப்பிடப்படும் அதனைப் பெற்றுக்கொண்டு மொபிடெல் வாடிக்கையாளர் தமது இருப்பித்திலேயே சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

### உலகத் தமிழ்ப் பேரவையை நிராகரித்தது பிரித்தானிய அரசு

இலங்கைக் கழுவுடன் பேச்சுக்களை நடாத்தக் கூடாது என உலகத் தமிழர் பேரவை மேற்கொண்ட கோரிக்கையை பிரித்தானிய அரசு நிராகரித்து இலங்கைக் குழுவுடன் பேச்சுக்களை நடாத்தியுள்ளது.

## the Sunday Leader

### தடுப்பிலுள்ளோரை சந்திக்க விரும்பும் யு.என்.எச்.சீ.ஆர்

அகதித் தஞ்சம் கோரிப் பயணித்து கைதாகித் தடுப்பில் இடப்பட்டுள்ளவர்களை சந்திக்க யு.ஏ்.எச்சீ.ஆர் அனுமதி கோரியுள்ளது. குடிவரவு, குடியகழ்வு கட்டுப்பாட்டு திணைக்களத்திடமே இவ் அனுமதி கோரப்பட்டுள்ளது. யு.ஏ்.எச்சீ.ஆர்க்குத் தெரியாமல் எந்தவொரு அகதிக் கோரிக்கையாளரும் நாடுகடத்தப்படவில்லை எனத் தெரிவித்துள்ள குடிவரவு, குடியகழ்வு கட்டுப்பாட்டுச் சபை கடந்த ஆகஸ்ட் 1ம் திகதி முதல் நாடுகடத்தப்பட்ட தஞ்சக் கோரிக்கையாளர்கள் 312 எனவும் அவற்றுள் 274 பாகிஸ்தானியர்களும் 38 ஆப்கானியர்களும் இருந்தனர் எனத் தெரிவித்துள்ளது.

### விமானதளத்தில் எபோலா தொற்றுப் பரீட்சிப்பு இல்லை.



ஆபிரிக்க நாடுகளில் இருந்து வந்து சேரும் பயணிகளை குடிவரவு, குடியகழ்வுத் துறை அதிகாரிகள் பரீட்சிப்பிற்காக மருத்துவத் துறையிடம் அனுப்புவதில்லை என விமானதள மருத்துவப் பிரிவு குற்றஞ்சாட்டியுள்ளது. குடிவரவுத் துறை அதிகாரிகளுக்கு விளக்கம் வழங்கப்பட்டுள்ள போதிலும் அவர்கள் ஆபிரிக்கநாடுகளில் இருந்து வருகைதரும் பயணிகளிற் சிலரைத் தவறவிட்டு விடுகின்றனர் என மருத்துவத் துறை குற்றஞ்சாட்டியுள்ளது.

லைபிரியா, நைஜீரியா, குனியா, சியராலியோன், கொங்கோ, செனகர் ஆகிய ஆபிரிக்க நாடுகளில் இருந்து வருபவர்கள் கட்டாயம் எபோலா தொற்று தொடர்பாக பரீட்சிப்புக்கு உட்பட வேண்டும் என மேலும் அச் சுகாதாரப்பிரிவு அறிவித்துள்ளது.

### SAITM க்கு எதிராக போராட முஸ்தீபு

...்தியசாலையில் வைத்தியப் பயிற்சியளிக்கும் அரசின் முடிவை எதிர்த்துப் போராட இலங்கை ஆசிரியர் சங்கம், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மற்றும் உள்வாரிப் பல்கலைக்கழக மாணவர் பேரவை ஆகியன போராட்டத்தில் ஈடுபடவுள்ளன. அரச பல்கலைக்கழகங்களின் மருத்துவக் கல்வி கற்றுப் பயிற்சிக்கு வரும் மாணவர்களுக்கு இம் முடிவு மிகப் பாதகமானது எனத் தெரிவித்த இலங்கை ஆசிரியர் சங்க செயலாளர் ஸ்டதலின், SAITM ஆரம்பம் முதலே பொய்த் தகவல்களை வழங்கி வருவதாகவும் டொக்டர் நெவில் பெர்ணாண்டோ வைத்தியசாலையை SAITM கொண்டுள்ளது என்றால் ஏன் அவர்களால் அரச வைத்தியசாலைகளின் பயிற்சிக்கு வரவேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

# விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்க தீர்ப்பு:

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது விதிக்கப்பட்ட தடையை ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் நீக்கி தீர்ப்பளித்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் பிரிவானது ஐரோப்பிய ஒன்றியம் விதித்த தடையை எதிர்த்து 2011-ல் லக்சம்பர்க்கில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. இந்த வழக்கில் விடுதலைப் புலிகள் சார்பாக நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த வழக்கறிஞர் விக்டர் கோப் ஆஜராகி வாதாடி வந்தார். இந்த வழக்கு கடந்த 2014 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் விசாரணை நடைபெற்று வந்தது. இந்த விசாரணையின் போது 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதம் ஏந்தவில்லை, தங்களது மக்களுக்காக வன்முறையற்ற வழிகளில்தான் தமிழீழ விடுதலைப் புலிகள் போராட விரும்புகின்றனர் என்று வாதிடப்பட்டது.

மேலும் விக்கிபீடியாவை அடிப்படையாகக் கொண்டு விடுதலைப் புலிகள் மீது ஐரோப்பிய ஒன்றியம் தடை விதித்திருப்பது அதிர்ச்சியளிக்கிறது. இலங்கையில் இனப்படுகொலை என்று கூறுமளவிற்கான ஒரு ஒடுக்குமுறை ஆட்சிக்கு எதிராகத்தான் நியாயமான போராட்டத்தை விடுதலைப் புலிகள் நடத்தினர் என்றும் புலிகளின் வழக்கறிஞர் கோப் வாதிட்டார்.

தற்போது இந்த வழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது விதிக்கப்பட்ட தடையை நீக்கி தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. இது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஐரோப்பிய ஒன்றியத்தில் சட்ட ரீதியாக கிடைத்த அங்கீகாரமாக கருதப்படுகிறது. தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை ரத்து செய்ய ஐரோப்பிய யூனியன் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தமிழீழ விடுதலைப்புலிகள் மீது ஐரோப்பிய யூனியன் பல கட்டுப்பாடுகளை விதித்ததோடு, தனிநபர்கள் மீதும் இந்த கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்தது.

விடுதலைப்புலிகள் இயக்கம் மற்றும் சில தனிநபர்கள் மீதான கட்டுப்பாடுகளை ரத்து செய்துள்ள நீதிமன்றம், விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தற்போதைய கட்டுப்பாடுகள் பொருத்தமற்றவை என்று தீர்ப்பளித்துள்ளது. மேலும், விடுதலைப்புலிகளின் வழக்கு செலவை ஐரோப்பிய யூனியன் செலுத்தவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதனையடுத்து இந்தியாவும் புலிகள் மீதானத் தடையை நீக்க வேண்டும் என கி.வெங்கட்ராமன் கோரிக்கை விடுத்துள்ளார். விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கி ஐரோப்பிய நீதிமன்றம் வரலாற்று சிறப்பு மிக்கத் தீர்ப்பு வழங்கியுள்ளது. அதேபோல் இந்தியாவும் புலிகள் மீதானத் தடையை நீக்க வேண்டும் என தமிழ்த் தேசியப் பேரியக்கப் பொதுச் செயலாளர் தோழர் கி.வெங்கட்ராமன் கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்ட அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் மீது, ஐரோப்பிய ஒன்றியம் விதித்துள்ள தடை நடவடிக்கைகள் அனைத்தும் சட்ட விரோதமானவை என, இன்று லக்சம்பேர்க்கில் அமைந்துள்ள ஐரோப்பிய ஒன்றியப் பொது நீதிமன்றம் வரலாற்றுச் சிறப்பு மிக்கத் தீர்ப்பு வழங்கியுள்ளது.

2001ஆம் ஆண்டு செப்டம்பரில் அமெரிக்காவின் நியூயோர்க் நகர இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்குப் பிறகு, "பயங்கரவாதத்திற்கு எதிரானப் போர்" என்ற பெயரில், பல அமைப்புகள் உலக நாடுகளால் தடை செய்யப்பட்டது. இதனை தமக்குச் சாதகமாக்கிக் கொண்ட, இலங்கை – இந்தியா போன்ற நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சகங்கள், தமிழீழ விடுதலைப் போராட்ட அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகளையும் "பயங்கரவாத அமைப்பு" என முத்திரைக் குதித்தினர். அமெரிக்கா – ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட எந்த அயல் நாடுகளிலும், புலிகள் ஆயுதம் தாங்கிய நடவடிக்கைகளில் ஈடுபட்டதில்லை என்ற போதிலும், இலங்கை மற்றும் இந்தியாவின் வெளியுறவுத்துறை அமைச்சகங்களின் அழுத்தங்களுக்கு ஏற்ப, அமெரிக்கா – ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட பல நாடுகளில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தடை விதிக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு, இத்தடை மிகப்பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது. இதன் உச்சமாக, 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் தமிழீழ மக்களை கூட்டம் கூட்டமாகக் கொன்ற இனக்கொலைப் போர், "பயங்கரவாதத்திற்கு எதிரானப் போர்" என்று ஞாபகப்படுத்தப்பட்டது. அதற்கு இந்தத் தடை உதவியாக இருந்தது.

இந்நிலையில் தான், போர் முடிந்ததாகவும், தமிழீழ விடுதலைப்புலிகள் முழுவதுமாக அழித்தொழிக்கப்பட்டு விட்டதாகவும் இலங்கை அரசே அறிவித்த பிறகும், தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும் என உலக நாடுகளில் பரவி வாழும் தமிழீழத் தமிழர்களும், தமிழ்நாட்டுத் தமிழர்களும் கோரிக்கை வைத்தனர்.

இதன் விளைவாக, 2011ஆம் ஆண்டு அக்டோபர் 11 அன்று, டச்சு நாட்டு நீதிமன்றம், தமிழீழ விடுதலைப்புலிகள் "பயங்கரவாத அமைப்பு" அல்ல எனத் தீர்ப்பு வழங்கியது. இந்நிலையில், 2011ஆம் ஆண்டு தொடுக்கப்பட்ட வழக்கு ஒன்றில் தீர்ப்பளித்துள்ள, ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் விடுதலைப்புலிகள் மீதான தடை சட்டவிரோதம் என்று தீர்ப்பளித்துள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியம், விடுதலைப் புலிகள் மீதானத் தடையை நீக்கக் கூறும் காரணங்கள் இந்தியாவிற்கும் பொருந்தும். தமிழ் நாட்டையும் சேர்த்து விடுதலைப் போராட்டம் நடத்துவதாக, தமிழீழ விடுதலைப்புலிகள் எப்பொழுதும் சொன்னது கிடையாது.

தமிழீழ விடுதலைப்புலிகளை ஆதரிக்கும் தமிழக அமைப்புகளும், அவ்வாறு சொன்னது கிடையாது. எனவே, ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்தத் தீர்ப்பைப் பின்பற்றி, இந்தியாவும் தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை உடனடியாக நீக்க வேண்டும் என தமிழ்த் தேசியப் பேரியக்கம் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறோம். என குறிப்பிட்டுள்ளார்.

**நன்றி**

**தமிழ் நாதம் (www.eelanatham.net)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிலங்காவின் அதிபர் தேர்தலும், ஆட்சி மாற்றத்திற்கான சாத்தியப்பாடும்

அரசியல் ஆய்வு



2010 ஜனவரியில் நடைபெற்ற சிறிலங்காவின் அதிபர் தேர்தலின்போது, அதுதொடர்பாக 'பொங்குதமிழ்' இணையதளத்தில் ஒரு கட்டுரையொன்றை எழுதியிருந்தேன். மகிந்த இராஜபக்சவே தேர்தலில் வெல்லவேண்டும், அதுவும் தனித்து சிங்கள மக்களின் வாக்குப்பெரும்பான்மையால் வெல்ல வேண்டும் என்ற கருத்துப்பட அக்கட்டுரை அமைந்திருந்தது. இக்கட்டுரையை, திரு. நடேசன் சத்தியேந்திரா தனது tamilnation.org இணையதளத்தில் மீள் பிரசுரம் செய்திருந்தார்.

பின்னர், தேர்தல் முடிவுகள் வெளியான தினத்தில் 'வணக்கம் மாமன்னரே' என்ற தலைப்பில் இன்னொரு கட்டுரையை அதே இணையத்தளத்திற்காக எழுதியிருந்தேன். போரில் தமிழர்களை வென்றமைக்காக மகிந்த இராஜபக்சவை மாமன்னராக உருவகித்து பாடும் 'ஆயுபோவெவ மகரஜனாய் ...' என்ற சிங்களப் பாடலின் தலைப்பினையே பின்னைய கட்டுரைக்கு தலைப்பாக இட்டிருந்தேன். (அப்பாடலின் உள்ளடக்கத்துடன் முற்றாக முரண்பட்டாலும், இளம் சிங்களப்பாடகி சகலி ரோச்சனா கமகேயின் இனிமையான குரலுக்காக அப்பாடலை ஒருமுறையாவது கேட்கலாம்)

மகிந்த இராஜபக்ச ஏன் வெற்றி பெறவேண்டும் என்பதற்கான காரணங்கள் எனது கட்டுரையில் தெளிவாக விளக்கப்பட்டிருந்தும், அக்கட்டுரைக்கு சில தமிழ்த் தேசியவாதிகள் கண்டனம் தெரிவித்தார்கள். சிலர் மின்னஞ்சல் மூலம் அவதூறுகளை அள்ளி வீசியிருந்தார்கள். மகிந்த இராஜபக்ச தோற்கடிப் பதனைக்காட்டிலும், அவரது வெற்றி தமிழ் மக்களுக்கு சில நன்மைகளைப் பெற்றுத்தருமானால் அவரது வெற்றிக் குதூகலிப்புகளை பொறுத்துக் கொள்ள வேண்டியிருக்கும்.

தமிழர்களின் அரசியல் உரிமைப் போராட்டம் ஓரளவிற்காவது வலுப்பெறுவதற்கு இலங்கைத் தீவின் அரசியல் சூழ்நிலை எவ்வாறு இருக்கவேண்டும் என்பதையிட்டு அறியாதவர்கள் அல்லது அது தொடர்பில் கரிசனை அற்றவர்களே மகிந்தவை தோற்கடித்துவிட்டு இன்னொரு 'பசாசை' ஆட்சிக்கு கொண்டு வர முனைகிறார்கள். இதில் இராஜதந்திர முறையில் போராடுகிறோம் என்கிறவர்கள் உங்கள் இராஜதந்திரம் யாருடைய நலன் நோக்கியதாக இருக்க வேண்டும் என்பதை ஒரு தடவை மீளாய்வு செய்துகொள்ளுங்கள்.

மகிந்த தெரிவு செய்யப்படும் பட்சத்தில் அவரினால் சிறிலங்காவை மேற்குலக தாராண்மைவாத ஒழுங்கிற்குள் கொண்டு வரமுடியாது, அவர் மேற்குலகுடன் முரண்பட வேண்டியிருக்கும் என்ற எதிர்பார்ப்பிலேயே மகிந்தவின் வெற்றி தமிழ் மக்களுக்கு அனுகூலமான நிலையை ஏற்படுத்தும் என எனது கட்டுரையில் குறிப்பிட்டிருந்தேன். கடந்த ஐந்து வருடகாலத்தில் அது ஓரளவு உறுதிபடுத்தபட்டுள்ளது எனலாம். குறைந்தபட்சம் ஒரு அரைகுறையான சர்வதேச விசாரணை வரையிலாவது வந்து நிற்கிறது என்றால் அதற்கு மகிந்த இராஜபக்சவின் தெரிவு உதவியிருக்கிறது.

கடந்த தேர்தலில், மகிந்த தவிர வெற்றி பெறக்கூடிய நிலையில் இருந்த வேறெந்த வேட்பாளரும் மகிந்த அளவிற்கு மேற்குலகுடன் முரண்பட்டிருக்க முடியாது. இவ்விடத்தில், மகிந்த ஒரு ஏகாதிபதித்திய எதிர்ப்பாளர் என்றோ, இடதுசாரி முற்போக்குவாதி என்றோ யாரும் கருதி விடவேண்டாம். மாறாக, போரில் கிடைத்த வெற்றியை மூலதனமாக வைத்து தனது குடும்ப ஆட்சியை தக்கவைக்க முயலும் மகிந்தவால் வெளிச்சகத்திகளின் நெறிப்படுத்துலுக்கு வளைந்து கொடுப்பது முடியாமலிருக்கிறது என்பதுவே யதார்த்தம். அதே சமயத்தில் இவ்வெளிச்சக்திகளைக் காட்டியே உள்ளூரில் தனது வாக்கு வங்கியை அதிகரிப்பதில் அவர் குறிப்பிட்டளவு வெற்றி பெற்றுள்ளார்.

கடந்த தேர்தல் காலத்தில் பல தமிழர்களிடம் தமிழின அழிப்பினை நடாத்திய ஒருவரை எவ்விதத்திலும் தோற்கடிக்க வேண்டும் என்ற குறுகியநோக்கமே இருந்தது. ஆனால் கூட்டமைப்பினரோ வெளித்தரப்புகளின் வேண்டுதலுக்கு இணங்கவே பொதுவேட்பாளரான சரத் பொன்சேகா விற்கு ஆதரவளிக்க முன்வந்தார்கள். தங்களது ஐக்கிய இலங்கை நிலைப்பாட்டையும், இலங்கைத் தீவில் ஜனநாயகத்தை ஏற்படுத்துவதில் தமக்குரிய விருப்பையும் வெளித்தரப்புகளுக்கு காட்டுவதற்காக அத்தேர்தலை வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். இதைத்தான், கூட்டமைப்பு ஒவ்வொரு தேர்தலிலும், தேர்தல் முடிவுகள் மூலம் தாங்கள் சர்வதேசத்திற்கு ஒரு செய்தியை சொல்ல விரும்புவதாகக் கூறிவருகிறது.

இனப்படுகொலையை நடாத்தி முடித்த இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கு ஆதரவாக கூட்டமைப்பினர் வாக்குக் கேட்டபோது, அவருக்கு வாக்களிக்க தமிழ் மக்களும் முன்வந்தார்கள். மகிந்த மீதான எதிர்ப்பினைத் தெரிவிக்க தமிழ் மக்கள் வழங்கிய வாக்குகள் பொன்சேகாவிற்கு ஆதரவாக வழங்கிய வாக்குகள் எனவும், அதன் எண்ணிக்கை 2010ம் ஆண்டு பொதுத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு கிடைத்த வாக்குகளின் எண்ணிக்கையை விட அதிகமானது என அண்மையில் சுமந்திரன் கூறியிருந்ததாக ஊடகங்களில் செய்தி வந்திருந்தது. தாம் ஒரு பொது வாக்காளரை அடையாயப்படுத்தினால் தமிழ் மக்கள் அவர்களுக்கு வாக்களிப்பார்கள் என்ற அர்த்தத்திலேயே சுமந்திரன் இவ்வாறு கூறியிருந்தார். ஆகவே எதிர்வரும் அதிபர் தேர்தலிலும் பொதுவாக்காளர் ஒருவரை முன்னிறுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ள தரப்புகளுடன் கூட்டமைப்பும் கைகோர்த்துள்ளது.

சிறிலங்காவின் அடுத்த அதிபர் தேர்தல் வரும் ஜனவரி மாதத்தில் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. எவ்வளவு விரைவில் தேர்தலை நடாத்த முடியுமோ அவ்வளவு விரைவில் நடாத்துவதன் மூலமே தனது வெற்றி வாய்ப்பினை தக்க வைக்க முடியும் என்பதனை இராஜபக்ச அறிந்து வைத்திருக்கிறார்.

சிறிலங்கா அரசியலமைப்பின் பதினெட்டாம் திருத்தச் சட்டமூலத்தின் பிரகாரம் ஒருவர் எத்தனை தடவையும் அதிபர் தேர்தலில் போட்டியிடலாம் என்ற போதிலும், எத்தனை தடவை போட்டியிட்டாலும் வெற்றி பெறுவார் என்ற நிலையில் மகிந்த இல்லை. (முன்னாள் தமிழக முதல்வர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவ்வாறான நிலையிலிருந்தார்). பொருளாதாரச் சுமை, இராஜபக்ச குழாமினதும் அதன் ஆதரவாளர்களினது அத்துமீறிய நடவடிக்கைகள் என்பன அவரது செல்வாக்கினை வீழ்ச்சியடையச் செய்திருக்கிறது. இந்நிலையில் இன்னும் எத்தனை காலத்துக்கு தான் புலிகளை வென்ற கதையைக்கூறி அவர் வாக்குக் கேட்கலாம்? இதனை இராஜபக்ச அறிவாரோ என்னவோ அவரது ஆலோசகர்கள் நன்கறிந்து வைத்திருக்கிறார்கள்.

அதேசமயம், வெளித்தரப்புகள், குறிப்பாக மேற்குலக சக்திகள், ஒரு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தத்தருணம் பார்த்துக் கொண்டிருக்கின்றன என்பதனையும், காலம் செல்லச்செல்ல அதற்கான வாய்ப்புகள் அதிகரித்துச் செல்லும் என்பதனையிட்டும் இராஜபக்சவின் ஆலோசகர்கள் கவலைப்பட ஆரம்பித்துள்ளார்கள்.


வரும் ஜனவரியில் அதிபர் தேர்தல் நடைபெறுமானால் அதற்கு முன்பதாக வேறொரு தேர்தலும் நடைபெறமாட்டாது. இந்நிலையில் வாக்காளர்களின் மனநிலையை அறியும் ஒரு தேர்தலாக ஊவா மாகாண சபைத் தேர்தல் அமைந்திருந்தது. இத்தேர்தலில் இராஜபக்சவின் ஐக்கிய சுந்திர முன்னணி வெற்றி பெற்ற போதிலும் 40 விழுக்காட்டிற்கு சற்று அதிகமான வாக்குகளைப் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி பற்றியே இலங்கை தீவின் அரசியல் விடயங்களில் அக்கறை கொண்டவர்கள் மத்தியில் பேசப்படுகிறது.

குறிப்பாக தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை துறந்து ஐக்கிய தேசியக் கட்சியின் முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறங்கிய இளைஞர் ஹரின் பெர்ணான்டோ விடயத்தில் இராஜபக்சவின் விசுவாசிகளே சிறிது அச்சப்படுகிறார்கள். ஐக்கிய தேசியக்கட்சியில் இத்தகைய இளைஞர்கள் முன்னணிக்கு வந்தால், அது இராஜபக்சவின் அரசியல் செல்வாக்கினை வீழ்ச்சியடையச் செய்யலாம் என கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது. ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் சேடம் இழுத்துக் கொண்டிருந்த ஐக்கிய தேசியக்கட்சிக்கு இந்த இளைஞர்கள் ஒட்சிசன் கொடுக்கிறார்கள் என்பதனை ஐக்கியதேசியக் கட்சியும் உணரத் தொடங்கியிருக்கிறது. ஆதலால் ஊவா தேர்தல் முடிவடைந்து ஒரு வாரத்திற்குள்ளாகவே சஜித் பிரேமதாச அக்கட்சியின் பிரதித் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இப்புறச் சூழலில், முன்னர் சரத் பொன்சேகாவிற்கு வாக்களிக்குமாறு தமிழ் மக்களைக் கோரிய கூட்டமைப்பும், தமிழர்களில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களான சிறுமுதலாளிகளும் மகிந்தவை தோற்கடிக்க வேண்டும் என்றகோசத்துடன் தமிழ் மக்களிடம் வாக்குக் கோரி வரலாம். ஆனால், மகிந்தவை தேர்தலில் தோற்கடித்துவிட்டால், ஒரு அரசாங்க மாற்றம் ஏற்பட்டால் என்ன நடைபெறும் என்பதனை கவனத்தில் எடுக்க வேண்டியவர்களாக தமிழர்கள் இருக்கிறார்கள்.

இன்றைக்கு, சர்வதேச விசாரணை, ஐ.நா மனிதவுரிமைச் சபையில் தீர்மானம் என்றளவில் மந்த கதியிலாவது இயங்குகிற மேற்குலகம். ஆட்சி மாற்றத்துடன் இவற்றை உடப்பில் போட்டு விடுவதற்கான சந்தர்ப்பங்களே அதிகமாகவுள்ளது. இல்லாவிடினும், புதிய அரசாங்கத்திற்கு சந்தர்ப்பம் வழங்குகிறோம் என்று இன்னமும் கால அவகாசம் வழங்கப்படும். மகிந்த இராஜபக்சவினைப் போலன்றி, ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் தாராண்மைவாத ஒழுங்கிற்குள் உடனடியாகவே வந்துவிடும்.

சிங்கள அரசை (sinhala state) மேற்குடன் தொடர்ந்து முரண்பாட்டுக்குள் வைத்திருக்க மகிந்த இராஜபக்சவே மீண்டும் அதிபராகத் தெரிவு செய்யப்படவேண்டும். இதனை மேற்குலகை பகைக்காதவகையில் செய்து முடிக்கவேண்டும் என்பதனை தமிழ் வாக்காளார்கள் புரிந்துகொள்வார்கள் என நம்புவோமாக.



நன்றி
ஒரு பேப்பர் (www.orupaper.com)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தேகம் யாரைத்தான் நிம்மதி கொள்ள வைத்தது!

...நாட்டு நடப்பு...

இந்தியாவை சார்ந்த நாகபட்டிணம் மீன்பிடித் தொழிலுக்கு மிக பிரசித்தம் பெற்றதாக விளங்குவதுடன் அது கடலோரப் பிரதேசம் என்பதால் அங்குள்ளவர்களின் பிரதான ஜீவனோபாயம் மீன்பிடியாகும். இந்திய மீனவர்களின் பிரச்சினை கூட இலங்கைத் தமிழ் பிரச்சினை போன்று புரயோடிப் போய் இருக்கும் தீர்வு காண முடியாத நீண்டகால பிரச்சினையாகும். அங்குள்ள மத்திய அரசோ, மாநில அரசோ இதுவரை எந்தவித ஆரோக்கியமான தீர்வை காணாதது கவலைக்குரியதே.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை உள்நாட்டு விவகாரமென தட்டிக்கழிக்கப்பட்டாலும், இந்திய மீனவர்களின் பிரச்சினை இரு நாடுகயும் முறையாக பேசி தீர்த்து வைக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும். இப்பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படாதமைக்கு ஏற்றுக் கொள்ளக்கூடிய பல காரணங்கள் இல்லாமலல்ல. அரசியல் ஆய்வாளர்களின் கருத்தின் படி சகலதும் அரசியலின் வாய்ப்பு வசதிகளுக்காகவே இழுத்தடிக்கப் பட்டு வருகின்றன.

எது என்னவாக இருப்பினும் அவஸ்த்தைக்கு உள்ளாகுபவர்கள் அப்பாவி மக்கள் என்பதை இருநாட்டு அரசியல் வாதிகளும், அரசாங்கங்களும் புரிந்து கொள்ளும் வரை குறித்த பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்கு எள்ளளவும் வாய்ப்பே இல்லை என்பதை தெளிவாக நெறிப்படுத்தலாம்.

சூசை நாகபட்டிணத்தை சார்ந்தவன் என கூறப்பட்டாலும் அப் பிரதேசத்திற்கு எப்படி வந்தான்? எப்பொழுது வந்தான்? என்பது அவனுக்கே தெரியாது. பெற்றோர், சகோதரர், உறவினர் என்ற சொந்த பந்தங்களைப் பற்றி அவனுக்கு ஒன்றுமே தெரியாது. காரணம் அவன் ஒரு வீதியோர பையன்.

நாகபட்டிணக் கடற்கரை எப்படியோ அவனுக்கு வாழ வழிசமைத்துக் கொடுத்தது. மீன் வாடிகளிலும், படகுகளிலும், வள்ளங்களிலும் உரியவர்களால் வழங்கப்படுகின்ற அன்றாட கூலி வேலைகளை புரிந்துவிட்டு அவர்கள் வழங்கும் கூலி, உணவு ஆகியவற்றை பெற்று தனது ஜீவனோபாயத்தை தானாகவே வழி நடத்திச் சென்றான்.

அவன் இருபது வயதடைந்ததும், ஏனைய மீனவர்களுடன் படகில் ஏறி கடலில் மீன் பிடிக்கச் சென்று கொண்டிருந்தான்.ஒரு நாள் அவ்வாறு தொழிலுக்கு சென்ற வேளையில் இந்திய கடல் எல்லையை மீறி இலங்கை கடல் பரப்புக்குள் சென்றதால் அங்குள்ள கடற்படையினர் சுடுகலன்களாலும், கடல் பீரங்கிகளினாலும் தமது நாட்டு கடல்பரப்புக்குள் அத்துமீறி புகுந்த அத்தனை படகுகள் மேல் குண்டுகளை பொழிந்தனர். சில படகுகள் நீரில் மூழ்கின. சில அகப்பட்டுக் கொண்டன. சில தப்பித்துக் கொண்டன.

தெய்வாதீனமாக சூசை பயணித்த படகு தப்பித்துக்க கொண்டது. அது மாத்திரமல்ல அவனுடன் பயணித்த அத்தனை பேரும் ஆபத்துக்கள் இல்லாது தப்பி மன்னார் பிரதேசத்திற்குள் சுமார் ஆறமாத காலம் ஒழிந்து வாழ்ந்தனர். எப்படியோ சூசை உட்பட ஏனையவர்கள் அங்குள்ள அதிகாரிகள் உதவியுடன் இலங்கை பிரஜைகளாகி சூசையை தவிர ஏனையோர் வெவ்வேறு மாவட்டங்களுக்கு தொழிலின் நிமித்தம் பிரிந்து சென்றனர். சூசை மன்னாரில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்தான். சூசை தற்பொழுது இந்தியன் அல்ல இலங்கையன்.

தொழிலின் நிமித்தம் வருடா வருடம் தனது இருப்பிடத்தை மாற்றிக் கொள்வான். கரையோர மீனவ சமூகம் அவனை முழுமனதுடன் ஏற்றுக் கொள்வதற்கு காரணம் குறித்த தொழிலில் நல்ல திறமையும், அனுபவமும் அவனிடம் சிறப்பாக அமைந்திருந்தது. இலங்கையில் மொழிப் பிரச்சினை அவனுக்கு எந்தத் தடையையும் ஏற்படுத்தவில்லை. நாடுபூராகவும் சுற்றி திரிவதால் அவனது தாய் மொழியான தமிழைப் போன்றே சிங்கள மொழியையும் மிக சரளமாக பேசும் திறனை பெற்றிருந்தான். வடக்கு, தெற்கு கரையோர பிரதேசங்களில் வாழ்நாளை கழித்த அவன் இம்முறை கிழக்கு மாகாணத்தின் மீன்பிடி பிரதேசமான குச்சவெளிக்கு சென்றிருந்தான்.

தொழிலில் நல்ல முயற்சியும், அனுபவமும் இருந்ததால் அங்கு வில்சன் முதலாளியின் வாடியில் அவனுக்கு வேலை கிடைத்தது. மீன்களை ஐஸ் இட்டு பெட்டியில் அடைத்து லொறியில் ஏற்றுவதும், கொழும்பு சந்தைக்குச் சென்று மீன்களை உரிய வியாபாரிகளிடம் ஒப்படைப்பதுமே அவனுக்கு வழங்கப்பட்ட முக்கிய வேலையாகும். பல இடங்களில் குறித்த தொழில் பற்றி நன்கு அறிந்து நீண்டகால அனுபவத்தையும், அது தொடர்பான பரந்த அறிவையும் அவன் பெற்றிருந்ததால் வில்சன் முதலாளியின் மனதிலும் ஆழமாக இடம்பிடித்துக் கொண்டான்.

ஒவ்வொரு கடலோர பிரதேசங்களில் தொழில் புரியும் பொழுது புதிய, புதிய நண்பர்கள் அவனுக்கு கிடைக்கத் தவறுவதில்லை. அவ்வாறே அவனுக்கு நெருக்கமான நண்பன் ஒருவன் குச்சவெளியிலும் கிடைத்தான். அவனின் பெயர் சகாயம். சூசையை போன்றே கடும் உழைப்பாளி.

சகாயமும், சூசை போன்றே தொழிலில் நல்ல அனுபவம் பெற்றவன். அவனும் ஓர் உள்ளூர் அனாதை. அத்துடன் சூசை போன்று குடும்ப பின்புலம் அற்றவன். சிறுவயதில் குச்சவெளி கடற்கரையே தஞ்சமென்று கிடந்தவன். வில்சன் முதலாளி அவனை தனது கையாளாக வைத்துக் கொண்டார். மேலும் வில்சன் முதலாளி சிங்கள இனத்தவராக இருந்தாலும் சகாயம் மேல் நம்பிக்கை வைத்திருந்தார். அவ்வாறே சகாயமும் அவருக்கும், செய்யும் தொழிலுக்கும் விசுவாசமாக நடந்து கொண்டான்.

அவன் செய்த ஒரே ஒரு தவறு என்னவெனில் வில்சன் முதலாளிக்கு தெரியாமல் யோகம் எனும் பெண்ணை திருட்டுத்தனமாக திருமணம் செய்ததே. வில்சன் முதலாளியின் மீன் வாடிக்கு சற்றுத் தூரத்தில் சகாயமும் அவன் மனைவி யோகமும் அங்குள்ள கொட்டில் ஒன்றில் குடித்தனம் நடத்தி வந்தனர்.

பொதுவாக மீனவர்கள் தங்கள் எதிர்காலத்தைப் பற்றி யோசிப்பதே இல்லை. அன்றாடம் கிடைக்கும் வருவாயில் முக்கால் வாசியை உணவுக்கே செலவழித்து விடுவார்கள். அதைவிட குடிப்பழக்கத்திற்கு அடிமையானவர்களைப் பற்றி அதிகம் கூறத் தேவையில்லை.

ஒரு சிலரே எதிர்காலத்தை நன்கு திட்டமிட்டு வீடு வாசல், பொருள் பண்டத்துடன் வாழ்பவர்களாக காணப்படுவார்கள். நகர்புறங்களை அண்டியவர்கள் சற்று வித்தியாசமானவர்களாக, ஏனைய சமூகத்தினரை பார்த்து தத்தமது வாழ்க்கை நிலையை உயர்த்திக் கொள்வார்கள். பின்தங்கிய கரையோரப் பிரதேசங்களில் வாழும் மீனவர்கள் இன்னும் அதே நிலையில் வாழ்வதால் அவர்களின் வாழ்க்கை இருண்டு மங்களாகவே காணப்படுகின்றது.



சூசை வில்சன் முதலாளியின் மீன் வாடியில் தங்கினாலும் மூன்று வேளை உணவுக்காக சகாயத்தின் கொட்டிலுக்கு சென்று விடுவான். சகாயத்திடம் இருக்கும் குடிப்பழக்கம் சூசையிடமும் இருந்து வந்தது. யோகம், தனது கணவனின் நண்பனை நன்கு கவனித்து வந்தாள்.

'உன்னைப்பற்றி கூறுமன் உன் நண்பனைப் பற்றி கூறு, நான் உன்னைப் பற்றி அறிந்து கொள்கிறேன்' என்று தத்துவஞானி பெர்னாட்ஷா அறியாமலா கூறி வைத்துள்ளார்.

சூசையிடம் குடிப்பழக்கம் அரம்பத்தில் சற்று குறைவாக இருந்தாலும், சகாயத்துடன் சகவாசத்தை வைத்துக் கொண்டபின் அவன் குடியில் முற்று முழுதாக மூழ்கி விட்டான். சகாயம் யோகத்தை திருமணம் செய்து சுமார் ஐந்து வருடங்களுக்கு மேலாகியும் அவர்களுக்கு குழந்தை பாக்கியம் இல்லை. அதற்கு சகாயத்தின் எல்லையற்ற மதுபாவனையே காரணமென ஊரார் பேசிக் கொண்டனர்.

எப்பொழுதும் கசிப்பு, சாரயம் என்பவற்றை மாத்திரம் சூசையும், சகாயமும் குடிப்பதால் அன்று ஞாயிற்றுக் கிழமை ஒரு மாற்றத்திற்காக நிலாவெளிக்குச் சென்று கள்ளுக் குடிப்பதற்கு தீர்மானித்திருந்தனர். அதனால் குச்சவெளியிலிருந்து வள்ளம் ஒன்றிலே நிலாவெளிக்குச் சென்றிருந்தனர். சகாயத்திற்கு நிலாவெளியில் பல நண்பர்கள் இருப்பதால் ஏற்கனவே தேவையான கள்ளு அவர்கள் இருவருக்கும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

அன்று வயிறு நிறைய இருவரும் கள்ளை குடித்துவிட்டு மீண்டும் குச்சவெளிக்கு வந்த வள்ளத்திலே திரும்பிச் சென்றனர். வள்ளத்தை விட்டு இறங்கி புதர்கள் நிறைந்த வழி ஒன்றின் ஊடாக சகாயத்தின் வீட்டுக்கு செல்ல வேண்டியிருந்தது. நேரம் இரவு 8 மணியாகி விட்டதால் யோகம் இருவரின் வருகை பார்த்து கொட்டிலுக்கு முன்னால் நின்று கொண்டிருந்தாள்.

சகாயம் மாத்திரமே அங்கு வந்ததைக் கண்ட யோகம் எங்கே சூசை? என்று கேட்டாள். சூசைக்கு சரியான வெறி அவன் வாடியிலே படுத்துவிட்டான் என்று பதிலளித்தான் சகாயம். பொழுது விடிந்தது. சுமார் பத்து மணி போல் ஊரில் ஒரே பதட்டம். பல வதந்திகள் சிறகடித்து பறந்தன. சகாயம் பொலிசாரால் கைது செய்யப்பட்டு திருகோணமலை நீதவான் நீதிமன்றுக்கு ஆஜர்படுத்தப்பட்டான்.



அவனுக்கு நீதவான் பிணை வழங்க மறுத்ததால் யோகமும், முதலாளியும் மனமுடைந்து காணப்பட்டனர்.

திருமணமாகி சுமார் ஐந்து வருடங்களுக்குப் பின் யோகம் கர்ப்பமுற்றிருந்ததாலே சகாயம் அவன் மேல் சந்தேகம் கொண்டு சூசையை திட்டமிட்டு தீட்டிக் கட்டியிருந்தான். சூசையின் உடம்பில் சுமார் இருபத்தி நான்கு கத்திக் குத்து காயங்கள் இருந்துள்ளதாகவே திடீர் மரண விசாரணை அதிகாரியும், அரசாங்க மருத்துவரும் தங்கள் அறிக்கையை சமர்ப்பித்ததை அடுத்து சூசை படுகொலை செய்யப்பட்டுள்ளதாக காவல் துறையின் கடும் குற்றப்பிரிவு மேலதிக அறிக்கை ஊடாக சகாயத்திற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்திருந்தது. இந்திய மண்ணில் அனாதையாக இருந்த சூசையின் இறுதிக் கிரியைகள் இலங்கை மண்ணில் இடம்பெற்றது மாத்திரமல்ல சகலரினது கண்களிலிருந்தும் கண்ணீரை பெருக்கெடுக்கச் செய்தது. சில மாதங்களுக்குப் பின் வில்சன் முதலாளி யோகத்திற்கு பிறந்த அந்த ஆண் குழந்தையை தனது செலவில் மரபணு பரிசோதனை (DNA) மூலம் பரீட்சித்துப் பார்த்த போது அக்குழந்தை சந்தேகப் பேர்வழியான சகாயத்தின் வாரிசு என உறுதிப்படுத்தப்பட்டது.

**- பாலையூற்றான் -**



## விநோதங்கள்

### அதி உயர பசு


அமெரிக்காவில் மாட்டுப்பண்ணை நடத்தி வரும் Patty Hanson என்ற பெண், தான் வளர்த்து வரும் பசுக்களில் ஒன்று மட்டும் 13 வருடங்களில் 6 அடி 4 இன்ச் அளவுக்கு வளர்ந்துவிட்டது. அதாவது அவரைவிட உயரமாக அவர் வளர்க்கும் பசுமாடு வளர்ந்துவிட்டது. இதையடுத்து கின்னஸ் சாதனை நிறுவனத்திற்கு தன்னுடைய பசுமாடு குறித்த தகவல்களை கொடுத்தார். கின்னஸ் சாதனை நிறுவனர்கள் நேரில் வந்து பசுமாட்டை பார்வையிட்டு அதன் உயரத்தை அளந்து, அதன்பின்னர் இந்த மாடு உலகிலேயே உயரமான மாடு என்பதை உறுதி செய்து அதற்கான சான்றிதழையும் Patty Hanson அவர்களிடம் அளித்தனர்.



### ஏன் இந்த தண்டனை

கனடாவில் வசித்து வந்த தம்பதியினருக்கு 4 வயதில் சிறுவன் உள்ளான். சிறுவன் தவறு ஒன்றை செய்துள்ளான் என்றும் அதை கண்டிக்கும் வகையில் நாள் முழுவதும் அவனது பெற்றோர் அவனை நிற்க வைத்ததால் இறந்தான் எனவும் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக சிறுவனின் பெற்றோரை கைது செய்த பொலிசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

### விளம்பரம் விபத்துக்காகவா



ரஷ்யாவில் உள்ள Sarafan Advertising Agency, என்ற விளம்பர நிறுவனம் பெண்ணின் மார்பை மிகப்பெரிய அளவில் வரைந்து அந்த படத்தை 15 வேன்களின் பக்கவாட்டு பகுதியில் வைத்தது. வேனின் பக்கவாட்டு பகுதியில் இதுபோன்று உங்கள் நிறுவனத்தின் விளம்பரங்களை வைத்தால் அதிக மக்களை சென்றடையும் என்ற கருத்தை சொல்வதற்காகத்தான் இந்த விளம்பரம் என்று கூறுவதற்காக இந்த ஏற்பாட்டை அந்த நிறுவனம் செய்துள்ளது. ஆனால் பலர் டிரைவிங் செய்துகொண்டே இந்த விளம்பரத்தை பார்த்ததால், விபத்தில் சிக்கியுள்ளனர். ஒரே நாளில் இந்த விளம்பரத்தால் 14 விபத்துக்கள் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

### நல்ல முன்னேற்றம்



ஜேர்மனி தலைநகரான பேர்லினில் 18 வயது இளைஞரை சூழ்ந்து கொண்ட மூன்று திருடர்கள், கத்தியை காண்பித்து மிரட்டியதுடன் பணப்பை மற்றும் கைப்பேசியை திருடியுள்ளனர். பின் அந்த இளைஞர், பொலிசாருக்கு தகவல் தெரிவிக்கவே, விரைந்து வந்த அதிகாரிகள் திருடர்களை கைது செய்துள்ளனர். இவர்களில் இரண்டு பேருக்கு 17 வயது, மற்றொரு நபருக்கு 18 வயது ஆகிறது.

### 63 வயதில் கண்பார்வை

கடந்த 33ஆண்டுகளாக பார்வையில்லாமல் இருந்த அமெரிக்காவை சேர்ந்தவர் லார்ரி ஹெஸ்டர் என்ற 66 வயது முதியவருக்கு பயோனிக் ஐ என்ற தொழில்நுட்பத்தின் மூலம் மீண்டும் பார்வை கிடைத்துள்ளது. 30வது வயதில் கண் பார்வையை இழந்த இவர் தற்போது வெளி யுலகத்தை முதன் முதலாக செயற்கை கண் மூலம் பார்த்து மகிழ்ந்து வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டில் ஒரு மான்

## தொடர்கதை

அம்பை

அந்த இரவுகளை மறப்பது கடினம். கதை கேட்ட இரவுகள். தங்கம் அத்தை தான் கதை சொல்வாள். காக்கா - நரி, முயல் - ஆமை கதைகள் இல்லை. அவளே இட்டுக் கட்டியவை. கவிதைத் துண்டுகள் போல சில. முடிவில்லா பாட்டுக்கள் போல சில. ஆரம்பம், நடு, முடிவு என்றில்லாமல் பலவாறு விரியும் கதைகள். சில சமயம், இரவுகளில் பல தோற்றங்களை மனதில் உண்டாக்கி விடுவாள். அசுரர்கள், கடவுளர்கள் கூட அவள் கதைகளில் மாறி விடுவார்கள். மந்தரையைப் பற்றி உருக்கமாக சொல்வாள். சூர்ப்பனகை, தாடகை எல்லோரும் அரக்கிகளாக இல்லாமல் உணர்ச்சிகளும், உத்வேகங்களும் கொண்டவர்களாக உருமாறுவார்கள். காப்பியங்களின் பக்கங்களில் ஒட்டிக் கொண்டவர்களை வெளியே கொண்டு வருவாள். சிறகொடிந்த பறவைகளை வருடும் இதத்தோடு அவர்களை வரைவாள் வார்த்தைகளில். இரவு நேரமா, அந்த பழைய வீட்டுக் கூடமா, கூடப்படுத்த சித்தி, மாமா குழந்தைகளின் நெருக்கமா



என்னவென்று தெரியவில்லை. அந்த கதைகள் வண்டின் ரீங்காரமாய் மனதில் ஒரு மூலையில் ஒலியுடன் சுழன்றவாறிருக்கின்றன.

தங்கம் அத்தை அழகுக் கறுப்பு. நீவி விட்டாற் போல் ஒரு சுருக்கமும் இல்லாத முகம், முடியில் நிறைய வெள்ளி. தங்கம் அத்தையைச் சுற்றி ஒரு மர்ம ஓடு இருந்தது. ஏகாம்பர மாமா தங்கம்மா என்று தான் விளிப்பார். முத்து மாமாவின் பெண் வள்ளி தான் இந்த மர்மத்தை உடைத்தாள். வள்ளியின் அம்மாவின் கூற்றுப்படி அத்தை பூக்கவே இல்லையாம்.

ஒரு பட்டுப்போன பெரிய மரத்தைத் தோட்டத்தில் வெட்டினார்கள். கோடலியின் கடைசி வெட்டில் அது சரசரவென் இலைகளின் ஒலியோடு மளுக்கென்று சாய்ந்தது. குறுக்கே வெட்டிய போது உள்ளே வெறும் ஓட்டை, வள்ளியின் அம்மா கூறினாள் இது தான் பொக்கை என்று. உள்ளே ஒன்றுமில்லாமல் வான் நோக்கிக் கிடந்த மரத்துடன் அத்தையின் மினுக்கும் கரிய மேனியை ஒப்பிட முடியவில்லை.

அப்படி எந்த இரகசியத்தை ஒளித்திருந்தது? அவள் மேனி. அவளை எந்நேரத்தில் பார்த்தாலும் எந்த ஒரு வித்தியாசமும் தெரிவதில்லை. அத்தை நட்ட விதைகள் முளைவிட்டன. அவள் கை பட்டால் தான் மாடு பால் சுரக்கும். அவள் கை ராசியானது என்பாள் வள்ளியின் அம்மா. தங்கச்சி பிறந்தபோது அத்தை வந்திருந்தாள். அக்கா! என் பக்கத்திலேயே இருக்கா அப்ப எனக்கு வலி தெரியாது என்றாள் என் அம்மா. அறையை விட்டு நாங்கள் அனைவரும் வெளியே வரும் போது கதவருகே வந்து திரும்பிப் பார்த்தபோது, தங்கமத்தை அம்மாவின் உப்பிய வயிற்றை மெல்ல வருடியபடி இருந்தாள்.

'ஒன்றும் ஆகாது, பயப்படாதே' என மெல்லக் கூறினாள்.

'அடியக்கா, ஒனக்கொரு ...' என்று முடிக்காமல் விம்மினாள் அம்மா.

'எனக்கென்ன? ராசாத்தியாட்டம் என் வீடெல்லாம் பிள்ளைங்க' என்றாள் அத்தை. ஏகாம்பர மாமாவின் இளைய மனைவிக்கு ஏழு குழந்தைகள்.

'இப்படி ஓடம்பு திறக்காம..' என்று மேலும் விசும்பினாள் அம்மா. அம்மா அவள் கையைப் பற்றி கன்னத்தில் வைத்துக் கொண்டாள்.

அத்தையின் உடம்பில் ஏறாத மருந்தில்லை என்று வள்ளியின் அம்மா கூறியிருக்கிறாள். தமிழ் வைத்தியம், இங்கிலீஸ் வைத்தியம் என்று எல்லாம் அத்தைக்குச் செய்தார்களாம். திடீரென பயந்தால் ஏதாவது நேரலாம் என்று ஒரு முன்னிரவு நேரம் அத்தை பின்பக்கம் போனபோது கரிய போர்வை போர்த்திய உருவம் ஒன்று அவள் மேல் பாய்ந்ததாம். வீரிட்ட அத்தை துணி துவைக்கும் கல்லில் தலை இடிக்க விழுந்து விட்டாளாம். அவள் நெற்றி முனையில் இன்னமும் அதன் வடு இருக்கிறது.

ஏகாம்பர மாமாவுக்கு வேறு பெண் பார்த்த போது அத்தை அன்றிரவு அரளி விதைகளை அரைத்துக் குடித்துவிட்டாளாம். முறி மருந்து தந்து பிழைக்க வைத்தார்களாம். 'உன் மனசு நோக எனக்கு எதுவும் வேண்டாம்' என்று மாமா கண் கலங்கினாராம். அதன் பின் அத்தையே அவருக்கு ஒரு பெண்ணைப் பார்த்தாள். அப்படித்தான் செங்கமலம் அந்த வீட்டுக்கு வந்தாள். எல்லாம் வள்ளி சேகரித்த தகவல்கள்.

ஊருக்கு ஒரு முறை போன போது தான் அத்தை அந்தக் கதையை சொன்னாள்.

அன்று சமையலறை அலம்பி விடும் ஓசை கேட்டது. துடைப்பம் வைக்கப்படும் சொத்தென்ற சத்தமும் கேட்டது. பின் அடுப்பில் கோலம் ஏறும். அதன் பின் சமையலறைக் கதவை அடைத்துவிட்டுக் கூடத்தின் வழியாகத் தான் அத்தை வருவாள். யாரும் தூங்கவில்லை காத்திருந்தனர். 'அத்தை கதை சொல்லுங்களன்' என்றனர்.

தொடரும்.. .. ..

# அன்பு

டேய் எழும்புடா! தண்டசோறு: தூங்கிட்டே இருப்பான். எழும்பு, எழும்பு.. ... என்று சித்ரா காலையிலே கத்தியபடி பாபுவை எழுப்பினாள். பாபு வேறு யாருமில்லை. அம்மா! என்று பாபு கூறிய வார்த்தையை கேட்டு செருப்பால அடிப்பன்டா, என்னைய அம்மான்னு கூப்பிட்டா. நா ஒன்னும் உன் அம்மா இல்ல. எத்தினை வாட்டி சொல்லி இருக்கன் அப்பிடி கூப்புடாத என்டு. வேலைக்கு லேட் ஆகுது போ. என்று பல்லைக் கடித்த படி முகத்தை கோபமாக வைத்து ஊருக்கே கேட்கும் அளவுக்கு கத்தினான். பாபு கண்கலங்கிய படி தலையை குனிந்த படி அங்கிருந்து கிணற்றடிக்கு போனான்.

தன் ஆடைகளை கழுவி விட்டு தானும் குளித்து வேலைக்கு புறப்பட ஆயத்தமாகிவிட்டு 'சாப்பாடு' என்று மெல்லிய குரலில் உமாவிடம் கேட்டான். நீ தின்ன நாங்க சமைச்சி கொட்டனுமா? சாப்பாடெல்லாம் ஒன்னும் இல்ல என்று கேவலமாக சிரித்தாள். உமா, இவன் சித்தியின் மகள் தான். பாபுவின் அம்மா இறந்தவுடனே பாபுவ பார்த்துக் கொள்ள பாபுவின் அப்பா இரண்டாவது திருமணம் முடித்தார். பாபுவிற்கு சித்ரா செய்யும் கொடுமையை பார்த்தே பாபு அப்பா இறந்துவிட்டார். பதினாறு வயதில் இருந்து பாபு தான் உழைத்து தன் குடும்பத்தை கரை சேர்க்கின்றான்.

பாவம் கூலி வேலை செய்து சம்பளம் முழுவதையும் வீட்டுக்கே கொடுப்பான். ஆனால் அந்த வீட்டிலே மரியாதை இல்லை. மரியாதை இல்லாவிட்டாலும் சாப்பாடு கூட இல்லை அவனுக்கு. பாவம் பாபு ஒரு வேளை சாப்பிடுவதும் கஷ்டம்தான்.

பாபு மிகவும் அன்பானவன். அவன் அன்புக்காக ஏங்குபவன். அவனுக்கு யார் அன்பு காட்டினாலும் அவர்களுக்கு உயிரையே கொடுப்பான். பொய்யாய் அன்பு காட்டினாலும் கூட நம்பிவிடுவான். சிறு வயதில் இருந்தே அன்பை இழந்தவன். யார் பெரியவர்களைக் கண்டாலும் அம்மா, அப்பா என்றழைத்து சொந்தம் கொண்டாடுவான். இவனுக்கும் அன்பு காட்ட இருப்பவன் அவனது உயிர் நண்பன் ஸ்ரீதரன் தான். பாபு சாதாரண தரம் படிக்கும் போதுதான் அவன் அப்பா இறந்தார். அவர் இறந்தவுடனே பாபு வேலைக்குச் சென்றுவிட்டான். ஸ்ரீ படித்து கணனி நிலையத்தில் வேலை செய்கின்றான்.



ஸ்ரீ இருப்பதால் தான் பாபு உயிரோடு இருக்கின்றான் என்றே சொல்லவேண்டும். பாபுவின் தேவைகளை நிறைவேற்றுவது, அன்பாக இருப்பது முக்கியமாக சாப்பாடு வாங்கிக் கொடுப்பது என்று நல்ல முறையில் பாபுவை கவனித்து வந்தான். இன்றும் அதே நிலை தான். பாபுவும், ஸ்ரீயும் வழமைபோல் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். பாபு அழுதான். 'ஏன்டா பாபு ஏன் அழுகிறாய்?' என்று பாபுவின் அருகில் சென்று கேட்டான் ஸ்ரீ. 'நான் எங்க சித்தியை என்ட அம்மாவா தான்டா பாக்குறன். ஆன அவங்க அம்மான்டு கூப்பிட வேண்டாம் என்கிறாங்கடா. ஏன்டா என் அம்மா என்னைய விட்டுட்டு போனாங்க! அல்லது போகும் போது என்னையும் கூட கூட்டிட்டு போயிருக்கலாம் தானே. நான் இந்த உலகத்துக்கு வரும் போது அவங்க என்னைய பார்க்காமலே போயிட்டாங்க. சித்தி என்னைய மகனாக பார்க்காட்டியும் ஒரு மனுசனாகவாவது பார்க்கலாமேடா. எனக்கென்டு இங்க யாருமே இல்லடா' என்று கதறி கதறி அழுதான். ஸ்ரீ அவனை கட்டிப்பிடித்து 'நா இருக்கன்டா. உனக்கு எல்லாமாயும் நான் இருக்கன்டா. உன் கூட எப்பவும் நான் இருப்பன்' என்றான் ஸ்ரீ. பின் ஸ்ரீ பாபுவை சமாதானப்படுத்தி வேலைக்கு அனுப்பி வைத்தான்.

சித்ராவுக்கு ஒரே மகள் தான் என்பதால் அவள் மீது உயிரையே வைத்திருந்தாள். ஆனால் உமா அவ்வளவு இரக்கமில்லை. அம்மா என்ற ஒரு உறவு மட்டும். சித்ரா பாபு கொடுக்கும் பணத்தில் மிச்சம் பிடித்து உமாவுக்கு தேவையானவற்றை செய்து கொடுப்பாள்.உமாவும் பணக்காரி போல் வளர்ந்தாள். ஒருவித திமிரோடும் வளர்ந்தாள்.

ஸ்ரீ பாபுவை தன்னோடு வந்திருக்கும் படி எவ்வளவோ கூறியும் அம்மாவையும், தங்கையையும் யார்ரா பாக்கிறது? நானும் இல்லாட்டி தனியா இருப்பாங்கடா. பாவம் அவங்க! என்று கூறி செல்ல மறுப்பான். விறகு விற்றான், வீதி வேலை செய்தான், சாக்கடையில் கூட வேலை செய்தான். ஒருமுறை உமாவுக்கு சரியான காய்ச்சல் என்று சித்ரா 'எங்கேயாவது போய் காசு கொண்டுவா' என அடித்துத் திறத்தினாள். அன்று அவசரத்தில் எந்த வேலையும் கிடைக்கவில்லை. குப்பை அள்ளும் வேலைதான் கிடைத்தது. அதை செய்து உமாவுக்கு மருந்து வாங்கிக் கொடுத்தான். எவ்வளவுதான் கஷ்டப்பட்டாலும், பாபு வீட்டில் ஒரு நேரம் கூட சாப்பிட்டதில்லை. நிம்மதியாக உறங்கியதும் இல்லை. அன்புக்கு எல்லை இல்லை என்று அவன் வாழ்கின்றான். அன்பா? அப்படி என்றால் என்ன, என்று அவர்கள் வாழ்கின்றார்கள். ஒரு நாள் சரி அம்மா, தங்கை என்ற உறவோடு வீட்டில் நிம்மதியாக சந்தோசமாக வாழ வேண்டும் என்று பாபுவுக்கு மிகவும் ஆசை. அது நடக்குமா என்று ஒவ்வொரு நாளும் ஏங்குவான்.

ஒரு நாள் ஸ்ரீயோடு பாபு கதைத்துக் கொண்டிருந்தான். பக்கத்தது வீட்டு பையன் பாபு அண்ணா! உங்கள உமா அக்கா வரட்டாம் என்று சொல்லி வாய் மூடல, ஸ்ரீயையும் தள்ளி விட்டுட்டு மின்னல் வேகத்தில் ஓடினான். சந்தோசம் அவனால் தாங்க முடியவில்லை. முதல் முறை தன் தங்கை கூப்பிட்டாள் என்று. சிரித்த முகத்தோடு 'என்னம்மா தங்கச்சி!' என்று பாசம் நிறைந்த குரலில் கேட்டான். 'தங்கச்சி, தொங்கச்சி என்டு சொந்தம் கொண்டாடினா நடக்கிறதே வேற. அம்மா ஹொஸ்பிடல்ல.. காசு வேணும் தா' என்று திமிரோடு கேட்டாள்.

ஏன்! என்ன நடந்தது? அம்மாக்கு என்ன ஆச்சு! என்று பதற்றத்துடன் கேட்டான் பாபு. 'பெத்த புள்ள நானே பதறல்ல. நீ என்ன நடிக்கிற? தேவையில்லாத கதைய விட்டுட்டு காசதா' என்று பணத்தை பறித்து சென்றாள். பாபு, ஸ்ரீயிடம் சென்று நடந்தவற்றை கூறினான். ஸ்ரீயையும் அழைத்துக் கொண்டு வைத்தியசாலைக்கு சென்றான். வைத்தியரிடம் கேட்ட போது, 'அவங்களுக்கு இரண்டு கிட்னியும் பழுது. ஒரு கிட்னியாவது இருந்தால் தான் அவங்க உயிர் வாழ முடியும். ஏதாவது சீக்கிரம் செய்யாவிட்டால், அவர்களை காப்பாற்றுவது கஷ்டம் என்றார். வைத்தியர் கூறியதைக் கேட்டு அதிர்ச்சியுற்ற பாபு, சித்ராவிடம் சென்று 'அம்மா பயப்படாதீங்க, நான் இருக்கன்மா' என்று தலையை தடவி அழுதான். கையை தட்டி விட்டு நீ இருப்பாடா, நான் இருக்க மாட்டன் தானே, உனக்கு ரொம்ப சந்தோசமாக இருக்குமே! போ, எங்கேயாவது போ! என்ட கண்ணுக்கு முன் நிக்காத! என்று வைத்தியசாலையே அலறும்படி கத்தினான். ஸ்ரீ பாபுவை அங்கிருந்து உடனடியாக கூட்டிச் சென்றான். 'நீ ஏன்டா அழுறா, இனியாவது உனக்கு சந்தோசம் கிடைக்கட்டும்' என்று பாபு சொன்னதைக் கேட்டு 'வாய மூடுடா! அம்மா, தங்கச்சி தான்டா என்ட உலகம், சந்தோசம். என்ன பெற்றெடுக்காட்டியும் அவங்க என்ட அம்மா தான்டா. இவங்களும் இல்லாட்டி நான் அனாதை ஆகிருவன்டா. இல்ல நான் விடமாட்டன். என்ட அம்மாவ காப்பாத்துவன்' என்று ஸ்ரீயை பிடித்து அழுதான்.

பாபு இரவெல்லாம் யோசித்துக் கொண்டே இருந்தான். விடிந்ததும் வைத்தியசாலைக்குச் சென்றான். உமாவும் சென்றாள். 'நா இல்லாட்டி நீ கவலை படுவியா அம்மா' என்று சித்ரா உமாவைப் பார்த்துக் கேட்டாள். 'ஒன்ட காலம் முடிஞ்சி நீ போறே அதுக்கு நா ஏ கவலைப்படனும்? அதெல்லாம் படமாட்டன்' என்று உணர்ச்சியற்ற ஜடம் போல் நின்றாள். சித்ராவுக்கு அப்போது விளங்கியது பாபுவின் அன்பு.

பெத்த மகளே என்னைய பாத்து ஒரு சொட்டு கண்ணீரும் விடல. நா பெறல, ஒரு நாள் கூட பாசமா பேசல, ஆனா அவன் என்னைய உயிரா நெனைக்கிறானே என்று சித்ரா அழுதாள்.

பாபு வந்து 'அம்மா' என்றான். 'என்னப்பா' என்று சித்ரா சொன்ன வார்த்தை பாபுவ ஆச்சரியப்பட வைத்தது. பாபு சந்தோசத்தில் அழுதுவிட்டான். 'அம்மா உங்களுக்கு ஒன்றும் ஆகாது. நான் இருக்கன்மா' என்றான் பாபு. 'நான் உன் அன்பை புரிந்து கொள்ள வில்லையே' என்று அவனை கட்டிப் பிடித்து அழுதான். உடனே ஓடிச்சென்று ஸ்ரீயிடம் நடந்தவற்றைக் கூறி சந்தோசப்பட்டான்.

சித்ராவுக்கு சிகிச்சை முடிந்தது. 'நீங்க குணமடைந்து விட்டீங்க. பாபு உங்ககிட்ட சொன்னமாதிரி அவன்ட கிட்னியை தந்துட்டான்' என்று வைத்தியர் சொன்னார். 'பாபு நல்லா இருக்கானா? என்று சித்ராவும், ஸ்ரீயும் கேட்டனர்.

'அப்ப உங்களுக்கு தெரியாதா?' வைத்தியர் கேட்க, சித்ராவும், ஸ்ரீயும் முளித்தனர். பாபுவுக்கு ஒரு கிட்னி தான் நல்லம். மற்ற கிட்னி பழுது. பிறந்ததிலிருந்து அவனுக்கு ஒரு கிட்னில பழுது. சாப்பிடாம இருந்தது அவனுக்கு இன்னும் பாதிப்பை ஏற்படுத்திட்டு. மாசா மாசம் கிளினிக் வருவாரே! தெரியாதா உங்களுக்கு? என்று வைத்தியர் கேட்க, 'என்ன டொக்டர் சொல்றீங்க?' என்று தலையில கை வைத்தான் ஸ்ரீ. 'அப்ப பாபு!?' என்று சித்ரா கேட்க. 'அவர் இறந்துட்டார்' என்றார் வைத்தியர். 'ஐயோ... ஐயோ!!' என தலையில் அடித்து அழுதாள் சித்ரா.

உன் அன்பை புரியாத நேரத்தில கூடவே இருந்தியே, இப்ப உன்ன புரிஞ்சி உனக்கு ஒரு நல்ல அம்மாவா இருக்க ஆசைப்படும் போது.... பாபு ஏம்பா இப்படி பண்ணின. நீ என்ட மகன் இல்லடா என் கடவுள்டா' என புலம்பிக் கொண்டிருந்தாள்.

'என் அம்மாவையும், தங்கச்சியையும் எப்பவும் பார்த்துக் கொள்ளுவியாடா ஸ்ரீ' என்று கேட்கும் போதே எனக்கு விளங்க வில்லையேடா! அடுத்த ஜென்மத்திலயும் நீ எனக்கு ஃப்ரெண்டாவே வேணும்டா என்று கூட சொன்னியே, அப்ப கூட இந்த மரமண்டைக்குப் புரியல்லையே டா! ஏன்டா என்னைய விட்டுட்டு போனா பாபு? என ஸ்ரீயும் அழுதான்.

சில நாட்கள் ஓடின. 'அம்மா' என்றொரு குரல் 'இந்தா வந்துட்டன்பா என்றது சித்ராவின் குரல். அவன் வேறு யாருமல்ல பாபுவின் நண்பன் ஸ்ரீ தான். பாபுவிற்காக பாபுவின் குடும்பத்தை ஸ்ரீ தான் பார்க்கிறான்.

பெற்றால் தான் பிள்ளையா? அன்போடு வாழ்தல் தான் உயிரோடு வாழ்வதற்கு அர்த்தம்!!!



முற்றும்.. .. ..

எஸ்.ஹமீதா
இக்பால் நகர், நிலாவெளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிமுரசு

## கால வாய்

காலம் எனக்காய்க்
காத்திருப்பதாய்..
என் பிறப்பின் போது எவருமே
சொல்லவில்லை...

நாட்கள் நகர நகர
ஆண்டுகள் கடந்தன
அகவைகள்
கொண்டாடப்பட்டன..

எனினும் காலம்
எனக்காய்க் காத்திருந்தது..

பாலர்
பலர் கூடி படிப்பு

அகவைகள் அதிகரிக்க
உயரம் அதிகரித்தது...
எண்ணமோ வானம் நோக்கியுயரப்
பறந்தது..

கனவுகளின் நிறங்கள்
எண்ணங்களைக் கொண்ட
காலைப் பொழுதொன்றில்
காதல் மனதமர்ந்தது...

காலமோ
காத்துக்கிடந்தது....

மணம்புரிந்து மலர்களாய்
மீண்டும் ஜனனம் பெருக்கி
உலகச் சுமையுயர்த்திப்
பணத்திற்காய் பிணமாய்
உழன்று.. .. ..

தோல் சுருங்கித்
தெருவோரத்திண்ணையில்

அனாதைப் பிணமாய்
நான் .. .. இறந்தபோது

காத்திருந்த
காலம்

என் கடைசிப்பாகத்தை
ஈவிரக்கமின்றி
எழுதிமுடித்தது.

- - மாயன் - -





## "ஒருவராம்"

மலையில் மூத்தது திருமலை,
மாந்தருள் மூத்தவரின் மலை!
அலையில் வல்லது வங்கமே,
அடியில் முழக்கம் கேட்கமே!

'குமரி' அழிவின் மீதியாம்,
கோணை நாதர் அருளிதாம்!
அமிர்ந்த வண்ணம் இயற்கையின்
அழிவைக்கண்ட ஒருவராம்!

துறைமுகத்தையும் காட்டுவார்,
சுடுநீர் ஊற்றும் காட்டுவார்!
இறைவி 'சல்லி' யும் காட்டுவார்,
எழுங் கதிரையும் காட்டுவார்!

மூவர் - நால் மதம் சம்பந்த
மூர்த்தி நாளினில் இல்லையாம்?
'யாவரும் கேளிரா' ய் ஆனதால்,
'யாதுமே ஊரெ' னக் கொள்ளுவோம்!

– தாமரைத்தீவான்–
[கூச்சந்தீவு, கிண்ணியா]

## இயேசு அல்ல இவர்கள்

நேற்றுப் பெய்த
மழைக்கு
நிலம் மட்டும்
நனையவில்லை
வாழ்க்கைப் பயணத்தைத்
தொலைத்து
வானத்தைக் குடையென
எண்ணி வாழ்ந்தவர்
மேனிகள் நடு நடுங்கின
காய்ந்து போன பூமியெல்லாம்
வற்றாத நதியிடம்
ஆறுதல் கேட்கும்
இங்கு
இறையெனும் இயற்கையே
கரைந்து போனால்
இவை எவரிடம்
ஆறுதல் கேட்பது

குடிசைகள் மாளிகைகளாகலாம்
ஆனால்
வசந்தங்கள் கோடையாகலாமா?
மாளிகையில் வாழ்ந்தவர்கள்
வறியவர்களாகினரே
இயற்கைகூட இவர்களை
ஏதிலிகளாக்குவதா?

நிலத்தைச் சேறாக்கி
நித்திரையை விளிப்பாக்கி
குழந்தைகளைக் குளிராக்கி
பாலகர்கள்
பரிதவிக்கின்றனரே
இவர்களெல்லாம்
இரட்சிக்கப்படட்டும்
மரணித்தவர் உயிர்த்தெழுந்தபோது
பாவிகள் மன்னிக்கப்படவில்லையா?

இனிமேலும்
சிலுவை சுமக்க முடியாது
இவர்களெல்லாம் இயேசுவல்ல

நூல் : பொன்னலவரை -
சேனையூர் இரத்தினா

## உடல் நலத்தோடு வாழ

போசாக்கு சத்துணவு
தேக சுகத்துக் குதவும்
தேக அப்பியாசம் செய்ய
தேக ஆரோக்கியம் பெறலாம்!

கோபத்தை அடக்கியாள
தேக நலம் பெறலாம்
சோகத்தை துரத்தி விட்டால்
சுக நலனைப் பெறலாம்!

மாசற்ற சூழலிலே
வசித்து வருவோமானால்
நாசம் விளைவிக்கும்
தொற்றுநோய் வந்தணுகா!

புகைபிடித்தல் மதுகுடித்தல்
புகையிலை சுண்ணாம்பு போடல்
சுகமிழக்க வைக்கும் வாழ்வில்
சோகத்தை ஏற்படுத்தும்!

உழைப்பில்லாத வாழ்க்கை
உள மகிழ்வைத் தராது
வளமாக வாழ்வதற்கு
மனம் அமைதி பெறவேண்டும்!

சேனையூரான்



# கப்பல்துறைக் காட்டினுள் கண்ணகி அம்மன் வழிபாடு



திருகோணமலையில் மிகவும் பின்தங்கியதும், யுத்தத்தால் பலமுறை முழுமையாகப் பாதிக்கப்பட்டதுமான கிராமங்களில் கப்பல்துறைக் கிராமமும் ஒன்றாகும். இது திருகோணமலைக்கும் தம்பலகாமத்திற்கும் மத்தியில் அமைந்துள்ளது. இங்குள்ள காட்டுப்பகுதியில் புராதான கண்ணகி அம்மன் வழிபாட்டு இடம் ஒன்று இருப்பதாக கப்பல்துறை இளைஞர் ஒருவர் மூலம் அறியக்கிடைத்தது.

இலங்கையில் கண்ணகி வழிபாடு பிரசித்தமான ஒரு புராதன வழிபாடாகும். திராவிடப் பண்பாட்டில் முக்கியத்துவம் பெற்ற சக்தி வழிபாட்டினையே கண்ணகியம்மன் வழிபாட்டில் நாம் காண்கிறோம். கண்ணகி அம்மனுக்கு இலங்கையில் ஆலயங்கள் அமைத்து வருடந்தோறும் பொங்கல் படைத்து குளிர்த்தி பாடி வழிபடுவதைக் காணலாம்.

கண்ணகி, தமிழில் எழுந்த ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தின் தலைவி. கற்பிற் சிறந்தவளாக காட்டப்பட்டுள்ள இவள், எவ்வித ஆராய்வுமின்றிப் பொய்க் குற்றச்சாட்டின் மீது கொலைத் தண்டனைக்கு உட்பட்ட தனது கணவனின் குற்றமற்ற தன்மையை பாண்டிய அரசன் நெடுஞ்செழியனிடம் வாதித்து நிரூபித்தாள். தன் பிழை கண்டு வேதனையடைந்த பாண்டியனும் அவனது அரசி கோப்பெருந்தேவியும் அவ்விடத்திலேயே உயிர் துறந்தனர். கோபம் அடங்காத கண்ணகி, மதுரை நகரை தன் கற்பின் வலிமையால் எரித்ததாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

சிலப்பதிகாரம் எழுதப்பட்ட வேளையில், சேர நாட்டு மன்னன் செங்குட்டுவன் கண்ணகிக்கு விழா எடுத்தான். இவ்விழாவில் இலங்கை மன்னன் கஜபாகுவும் கலந்துகொண்டதாக வரலாறு கூறுகிறது. இவன் மூலம் இலங்கையில் கண்ணகியை பத்தினித் தெய்வமாக வணங்கும் வழக்கம் ஆரம்பித்ததாகக் கூறப்படுகிறது.

பூம்புகாரைத் தலைநகராகக்கொண்ட சோழ நாட்டிலே பிறந்து, பாண்டியநாட்டிலே புரட்சி செய்து, சேரநாட்டிலே தெய்வமாகிய கண்ணகி கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் அநுராதபுரத்தை தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்த கஜபாகு மன்னன் காலத்தில் இலங்கைக்கு அறிமுகம் செய்துவைக்கப்பட்டு இன்றுவரை சிங்கள மக்கள் மத்தியில் பத்தினித்தெய்யோ என பக்தியுடன் வழிபட்டு வருவதைக் காணலாம்.

கஜபாகு மன்னன் வருடந்தோறும் ஆடி மாதத்தில் பத்தினி தெய்வத்திற்கு விழா எடுப்பித்தான். சிங்களத்திலே ஆடி மாதம் எசல எனப்படும். அதிலிருந்து இந்த விழா எசல பெரஹர என அழைக்கப்பட்டது. சுமார் 1800 வருடங்கள் பழைமையான இந்த வழிபாடு. இந்த அரசனை கடல்சூழிலங்கைக் கயவாகு வேந்தன் என சிலப்பதிகாரம் சிறப்பித்துக் கூறுகிறது.

கடல் சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும்
எம்நாட்டு ஆங்கண் இமய வரம்பனின்
நல்நாள் செய்த நாள் அணி வேள்வியில்
வந்து ஈக என்றே வணங்கினர் வேண்ட
(சிலப்பதிகாரம், வரந்தருகாதை: 160-163)

### கப்பல்துறை கண்ணகி அம்மன் வழிபாட்டு இடம்


கப்பல்துறை கண்ணகி அம்மன் வழிபாடு பற்றி அறிந்ததும் ஆர்வம் மேலிட்டது. அதுபற்றி அறியத்தந்த கப்பல்துறை நண்பர் திரு.ச.சதீஸ் உடன் கண்ணகி அம்மனைத் தரிசிக்க பயணிக்கத் தொடங்கினேன். நாங்கள் செல்ல இரு பயணப்பாதைகள் இருந்தது. கப்பல்துறை ஊடான நீண்டதூர காட்டுப்பாதை ஒன்று, மற்றையது முத்துநகர் ஊடான பாதை. எனது நேரமின்மை கருதி இரண்டாவதைச் தெரிவு செய்தோம்.

கிராமத்தில் இருந்து வெளிகளினூடான நீண்ட பயணத்தின் பின் அம்மன்குளத்தினை அடைந்தோம். பல நூற்றாண்டுகளாக கைவிடப்பட்ட இந்த குளம் இன்று தூர்ந்து மறையும் நிலையில் இருக்கிறது.

யுத்தகாலத்தில் மக்களின் இடப்பெயர்வினால் கைவிடப்பட்ட இந்த இடம் இப்போது காடாகி இருக்கிறது.

சிறிது நேரப் பயணத்தின் பின்னர் கப்பல்துறை கண்ணகி அம்மன் வழிபாட்டு இடத்தினை அடைந்தோம். 1820 ஆம் ஆண்டு கவாட்டிக்குடா காளியப்பு என்பவரால் அவருக்குச் சொந்தமான நிலத்தில் கண்ணகி அம்மனுக்கு அமைக்கப்பட்ட வழிபாட்டிடம் அது.

அவரால் அமைக்கப்பட்ட கண்ணகி அம்மன் ஆசனக்கல்லினை மையப்படுத்தி இந்த வழிபாட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இங்கிருக்கும் சிலையினை அண்மையில் சில விசமிகள் சேதப்படுத்தி விட்டதாக நண்பர் வருத்தத்துடன் கூறினார்.



வைத்திய கலாநிதி த.ஜீவராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## போட்டி போடும் சிம்பு + தனுஷ்

அஜீத்தின் திரைப்படம் வெளியாகும்போது முதல் நாள் முதல் காட்சியை பார்த்துவிடுவார் சிம்பு. அந்த அளவுக்கு அவர் தல அஜீத்தின் வெறித்தனமான ரசிகர் என்பது அனைவரும் அறிந்ததே. இந்நிலையில் சிம்பு எதை செய்தாலும் அதற்கு போட்டியாக செய்யும் தனுஷ், தீபாவளிக்கு வெளியாகவுள்ள விஜய் நடித்த கத்தி திரைப்படத்தை முதல் நாள் முதல் காட்சியை பார்க்க இருப்பதாக இன்று தனது டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

## அடுத்து கன்னடம்



கோச்சடையான் படத்திற்கு பிறகு நடிகர் ரஜினி காந்த், கே.எஸ்.ரவிக்குமார் இயக்கும், 'லிங்கா' படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தின் ஷூட்டிங் கிட்டத்தட்ட முடியும் தருவாயில் இருக்கிறது. இந்தாண்டு ரஜினி பிறந்தநாளிலோ அல்லது அடுத்தாண்டு பொங்கலுக்கு ரிலீஸாகலாம் என தெரிகிறது. இதனிடையே லிங்கா படத்திற்கு பிறகு நடிகர் ரஜினி, கன்னட படத்தின் ரீ-மேக்கில் நடிக்க இருப்பதாக கூறப்படுகிறது.



## கோடம்பாக்கத்தை தாக்கும் புயல்

முதல் படமே வெற்றி படமாக அமைந்ததால், தமிழில் ஒரு ரவுண்டு வருவார் என, எதிர்பார்க்கப்பட்டவர், மலையாள நடிகை ஓவியா. தமிழ், மலையாளம் என்ற பாரபட்சம் எதுவுமில்லாமல், கவர்ச்சியையும் வாரி இறைக்க முடிவு செய்துள்ளார். ஓவியாவின் கவர்ச்சி புயல், கோடம்பாக்கத்தை தாக்குமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

## அது நானில்லை- என்னைப்போல் ஒருத்தி



பல திரைப்படங்களில் நடித்த நடிகை லட்சுமிராயின் நிர்வாண வீடியோ ஒன்று இணையத்தில் பரவி வருவதாக வெளிவரும் செய்தியால் கோலிவுட்டில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து விளக்கம் அளித்துள்ள லட்சுமிராய், "அந்த வீடியோவில் இருக்கும் பெண் என்னை போன்ற சாயலில் இருக்கிறார். மேலும் அந்த பெண்ணின் காலில் மெட்டி உள்ளது. எனவே அவர் திருமணமானவராக இருக்கவேண்டும். இதுகுறித்து வரும் செய்திகளை எனது ரசிகர்கள் உள்பட யாரும் நம்பவேண்டாம்" என்று கூறியுள்ளார்.

## தளபதிக்கு ரசிகர்கள் கூட எதிராகின்றனரா?

கத்தி படத்தின் வியாபாரம் தற்போது பிரமாண்ட அளவில் நடைபெற்று வரும் நிலையில் டிரைலரை வெளியிட்டு, அந்த டிரைலர் நெகட்டிவ் ரிசல்ட்டை தந்தால், படத்தின் வியாபாரத்திற்கு பாதிப்பு வரும் என்று கருதிய தயாரிப்பாளர், முருகதாஸிடம் கத்தி படத்தின் டீஸை அக்டோபர் 21ஆம் தேதி வெளியிட ஒப்புதல் கொடுத்துள்ளார் என கூறப்படுகிறது. கத்தி படத்தின் டிரைலர் வெளியாகாததால் விஜய் ரசிகர்கள் படத்தயாரிப்பாளருக்கு கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

## ராம்கோபால்க்கு ஸ்ரீயில் க்ரஷ்

சாவித்ரி என்ற பெயரில் திரைப்படம் எடுத்துக்கொண்டிருந்த ராம் கோபால் வர்மா, திடீரென தனது படத்தின் பெயரை ஸ்ரீதேவி என மாற்றினார். இதற்கு கடும் கண்டனம் தெரிவித்து வக்கீல் நோட்டீஸ் அனுப்பிய நடிகை ஸ்ரீதேவிக்கு பதில் நோட்டீஸ் அனுப்பியுள்ள ராம்கோபால் வர்மா, படத்தின் பெயரை மாற்ற முடியாது. சட்டப்படி இந்த விவகாரத்தை சந்திக்க தயார் என்று கூறிவிட்டார்.




## மாட்டினாடா ஹர்சிகா

மலேசியாவில் நடந்த விருது வழங்கும் விழாவுக்கு அவர் சென்று இருந்த போது இந்த வீடியோ காட்சி பதிவு செய்யப்பட்டதாக கூறப்பட்டது. சிம்பு தங்கி இருந்த ஓட்டலில் ஒரு இடத்தில் அந்த பெண்ணை முத்திமிடுவது போன்று அப்படம் இருந்தது. சிம்பு முத்தமிடும் பெண் கன்னட நடிகை ஹர்சிகா என்று கூறப்பட்டது. இதனை சிம்புவும், ஹர்சிகாவும் ஏற்கனவே மறுத்தனர். வீடியோ படத்தில் இருப்பது நாங்கள் அல்ல என்று கூறினார்கள். ஆனாலும் தொடர்ந்து முத்த வீடியோவில் இருப்பது சிம்பு – ஹர்சிகா தான் என்று செய்திகள் வெளிவந்த வண்ணம் இருந்தன.

## சூர்யாவுக்கு ஹரியின் வாய்ப்பு

இயக்குனர் ஹரிக்கு படத்தின் புரமோஷன் வேலைகள் மட்டுமே பாக்கியுள்ள நிலையில் தற்போது அடுத்த படத்திற்கான டிஸ்கஷனில் தீவிரமாக அவர் இறங்கிவிட்டதாக கூறப்படுகிறது. ஹரி தனது படத்தில் மீண்டும் சூர்யாவுடன் இணையப்போவதாக செய்திகள் தெரிவித்து வருகின்றன. சூர்யாவுடன் இணைந்து ஆறு, வேல், சிங்கம், சிங்கம் 2 ஆகிய படங்களில் ஹரி பணிபுரிந்துள்ளார். தற்போது ஐந்தாவது முறையாக சூர்யாவுடன் மீண்டும் இணைய இயக்குனர் ஹரி முடிவு செய்திருப்பதாக கூறப்படுகிறது.




# சினிமுரசு

## திரை விமர்சனம்

### இயக்குனர் சுந்தர் சியின் அரண்மனை ஹன்சிகா நடிக்கும்



வினய் ஹன்சிகா காதல், ஆனால் அந்த காதல் நிறைவேற முடியாமல் ஹன்சிகா கொலை செய்யப்படுகிறார். அதன் பிறகு இரண்டு வருடங்கள் கழித்து ஆண்ட்ரியாவை திருமணம் செய்து கொள்கிறார் வினய். இந்நிலையில் பேயாக வரும் ஹன்சிகா, வினய்யுடன் ஒரு முறையாவது உறவு கொண்டுவிட வேண்டும் என்று துடிக்க, இந்த பிரச்சனையை தீர்த்து வைக்க வரும் வழக்கறிஞராக வருகிறார் சுந்தர் சி. இவர் எப்படி பேயை சமாளிக்கிறார் என்பதை தனது காமெடி பட்டாளங்களுடன் கலகலப்பை ஏற்படுத்தியுளார் சுந்தர் சி.

படத்தில் லாஜிக் இல்லை, பேய் என்ற பயம் இல்லை, அழுத்தமான திரைக்கதை இல்லை இருந்தாலும் சுந்தர் சியின் வழக்கமான டிரேட் மார்க்கான காமெடி படத்திற்கு பெரும் பலமாக இருக்கின்றது. கோவை சரளா, மனோபாலா, சந்தானம், காதல் தண்டபாணி, கோட்டா சீனிவாசராவ், லொள்ளுசபா சாமிநாதன், மற்றும் பலரை வைத்துக்கொண்டு ஒரு காமெடி கலாட்டை செய்த சுந்தர் சியை கண்டிப்பாக பாராட்டலாம். இந்த காமெடியை அவர் பேயின் உதவி இல்லாமல் தனது வழக்கமான கதையுடன் செய்திருந்தாலே இதே வெற்றியை பெற்றிருக்கும்.



வினய்யை இன்னும் ஒரு ஹீரோவாக ஏற்றுக்கொள்ள மனம் மறுக்கிறது. அவருடைய நடிப்பும் ரொம்ப சுமார்தான். ஆண்ட்ரியா மற்றும் லட்சுமிராய் இருவரும் கவர்ச்சியில் கலக்கியிருக்கின்றனர். ஹன்சிகாவின் மேக்கப் இல்லாத சாதாரணமான முகம், மிகைப்படுத்தப்படாத நடிப்பு மனதை கவர்கிறது.

பரத்வாஜின் இசையில் இரண்டு பாடல்கள் கேட்கும் வகையில் உள்ளது. சுந்தர் சியின் ஆஸ்தான் கேமிராமேன் செந்தில்குமார் வழக்கம்போல சிறப்பாக செய்துள்ளார்.

ஹன்சிகாவின் பேய்க்காக இல்லாவிட்டாலும், சுந்தர் சியின் காமெடிக்காக பார்க்கலாம்.



## சினிமா கிசு கிசு

- சமீபத்தில் ஆஸ்திரேலியாவை சேர்ந்த ஆண்ட்ரூ என்பவருடன் பல நாட்கள் சுற்றித்திரிந்தார் நடிகை இலியானா. இருவரும் மிக விரைவில் திருமணம் செய்து கொள்ள இருப்பதாக வதந்தி பரவியது. இந்நிலையில் தனது பாய்பிரண்டுடன் டேட்டிங் செல்வது உண்மை என்று கூறியுள்ள இலியானா, அவரை திருமணம் செய்து கொள்ளும் எண்ணம் எதுவும் இல்லை என்று கூறியுள்ளார்.
- நடிகை ஸ்ருதிஹாசனுடன் பிரபல தெலுங்கு நடிகர் ஜூனியர் என்.டி.ஆர் ரகசிய ஒப்பந்தம் செய்துகொண்டதாக டோலிவுட்டில் செய்திகள் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
- அமிதாப்பச்சன் பேத்தியுடன் 'ாருக்கான் மகன் ஆபாசமாக இருப்பதுபோன்ற புகைப்படங்கள் இணையதளங்களில் பரவி வருவதால் பாலிவுட் திரையுலகில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.
- அமெரிக்காவில் சக்கை போடு போட்ட செக்ஸ் டேப் என்ற திரைப்படம் இந்தியாவில் திரையிட அனுமதிக்கப் படாததால், அந்த படத்தின் விநியோகிஸ்தர் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளார்.
- ஜீவா நடிப்பில் வெளிவந்த 'யான் ' திரைப்படம் வெளிவந்த நாளில் அவர் சென்னையிலேயே இல்லை. கொடைக்கானலுக்கு ஓடிவிட்டாராம்.
- கருத்துச்செல்வி' என்கிற பட்டத்தை முன்பெல்லாம் குஷ்புவுக்கு தெரிவித்து வந்த சினிமா ரசிகர்கள், அந்தப்பட்டத்தை அப்படியே த்ரிஷா பக்கமும் தள்ளிவிடுவார்கள் போலிருக்கிறது. ஏனென்றால் அவர் சொல்லும் கருத்துக்கள் அப்படி.
- ஷாகித்துக்கும், ஆலியாவுக்கும் இடையே ரொமான்ஸ் காட்சியில், சில முத்தக்காட்சிகள் உள்ளதாம். ஆனால் இதை படத்தில் வைப்பதற்கு ஆரம்பத்தில் விகாஷ் தயங்கினாராம், காரணம் ஷாகித்-ஆலியாவுக்கு இடையேயான வயது வித்தியாசமாம்.
- திருமணமாகி திரையுலகை விட்டு விலகியிருக்கும் அந்த நடிகை ஏன் அந்த இயக்குனருடன் காரில் பயணித்தார் என்பதைப் செய்தியாக்கி விட்டனர். அதற்கு நடிகையோ அடுத்து நடிக்க இருக்கும் படத்தைப் பற்றிய கதையை விவாதிப்பதற்காகவே பயணித்தோம் என்றாராம். நடிகைக்கும் அவரது கணவருக்கும் பிரச்சனை ஆரம்பமாகி விட்டதாகவும் தெரிகிறது.
- மன்னர்கள் வசிக்கும் வீடு பட ரிலீசின் போது தமிழ் நாடு முழுவதும் மங்களகரமான ராய் நடிகையை வாழ்த்தி போஸ்டர் ஒட்டப்பட்டது. போஸ்டர் அச்சடித்த செலவு, ஒட்டின செலவு, சாப்பிட்ட செலவுன்னு நடிகைக்கு முறையான பில் அனுப்பி வச்சா செக் அனுப்பி வைப்பாராம்.
- பிக் அப் அண்ட் டிராப் நடிகருக்கு வீட்டில் தீவிரமாக பெண் பார்த்து வருகிறார்களாம். ஆனால் நடிகரோ திருமணத்தை தள்ளிப் போட்டுக் கொண்டே வருகிறாராம். தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதன் முறையாக ஆப்ஸ் வழியில் சிறுகதைகள்

பழம்பெரும் எழுத்தாளர் ஜெயகாந்தனின் சிறுகதைகள் தமிழ் இலக்கிய வாசகர்களிடையே பெரும் வரவேற்பு பெற்றவை என்பதை சொல்லவே தேவையில்லை. அந்த அளவுக்கு அவருடைய சிறுகதைகள் வாசகர்களின் மனதில் தங்கியிருக்கும். ஜெயகாந்தன் எழுதிய 31 சிறுகதைகள் ஆப்ஸ் வடிவில் ஆண்ட்ராய்டு போன்களில் தற்போது வலம் வந்துகொண்டிருக்கின்றது. ஸ்மார்ட்போன்களில் படிப்பதற்கு வசதியாக இந்த சிறுகதைகள் இருப்பதால் அவருடைய வாசகர்கள் மட்டுமின்றி இளையதலைமுறையினர்களும் மிகவும் விரும்பி இந்த ஆப்ஸை டவுன்லோடு செய்து படித்து வருகின்றனர்.

## ஆன்லைன் நிறுவனத்திற்கு அபராதம்

### மத்திய அரசு அதிரடி

கோடிக்கணக்கில் ஆன்லைன் மூலம் வியாபாரம் செய்யும் வர்த்தக நிறுவனமான பிளிப்கார்ட் நிறுவனத்திற்கு மத்திய அமலாக்க இயக்குனரகம், நோட்டீஸ் அனுப்பி உள்ளது. இந்த நிறுவனத்திற்கு சுமார் ரூ.1000 கோடி வரை அபராதம் விதிக்க வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது.

கடந்த 6 ஆம் தேதி, பிளிப்கார்ட் நிறுவனம் ஆன்லைன் விற்பனையில் வாடிக்கையாளர்களுக்கு அதிரடியாக புதிய சலுகைகளை அறிவித்தது. ஹதி பிக் பில்லியன் டேஹ என்ற பெயரில் வழங்கப்பட்ட இந்த சலுகை மூலம் பிளிப்கார்ட் அன்றைய ஒருதினம் மட்டும் சுமார் 600 கோடி ரூபாய்க்கு வர்த்தகம் செய்தது என்று கூறப்படுகிறது.

## அதிவேக தொழிநுட்பம்



மொபைல் சாதன உற்பத்தில் கொடிகட்டிப் பறக்கும் சம்சுங் நிறுவனம் தனது சாதனங்களில் அதிவேகம் கொண்ட Wi-Fi தொழில்நுட்பத்தினை அறிமுகம் செய்யவுள்ளதாக அறிவித்துள்ளது. இதன்படி 60 GHz அதிர்வெண்ணில் 4.6 Gbps வேகத்தில் தரவுகளைப் பரிமாற்றக்கூடியதாக இருக்கும் எனவும் 1GB கோப்பு அளவுடைய வீடியோ ஒன்றினை 3 செக்கன்களுக்குள் தரவிறக்கம் செய்யக்கூடியதாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வேகமானது தற்போது பயன்பாட்டிலுள்ள Wi-Fi தொழில்நுட்பத்தின் வேகமான 866 Mbps வேகத்திலும் 5 மடங்கு அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

## அதி வேகம்




வெறும் 2 நிமிடங்களில் 70 சதவீதம் வரை சார்ஜ் செய்யக்கூடிய Li-Ion மின்கலங்களை சிங்கப்பூர் Nanyang Technological பல்கலைக்கழக விஞ்ஞானிகள் உருவாக்கி வருகின்றனர். இந்த மின்கலங்கள் சுமார் 20 வருடங்கள் வரை பயன்படுத்தக்கூடியதாக காணப்படுவதுடன், 10,000 தடவைகள் மீண்டும் மீண்டும் சார்ஜ் செய்யக்கூடியதாக இருக்கும் எனவும் கூறப்படுகின்றது.

தற்போது காணப்படும் மின்கலங்களை விடவும் 20 மடங்கு சார்ஜ் வேகம் கூடிய இந்த மிக்லங்களை எதிர்காலத்தில் இல்த்திரனியல் வாகனங்களிலும் பயன்படுத்த முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சாரதி அற்ற ரயில்

தற்போது சாரதிகள் (டிரைவர்கள்) இன்றிய தானியங்கி வாகனங்களை தயாரிப்பதில் பல முன்னணி நிறுவனங்கள் ஆர்வம்காட்டி வருகின்றன. இவற்றின் ஒரு அங்கமாக சாரதிகள் அற்ற ரயிலை லண்டனில் 2022 இல் அறிமுகம் செய்யவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.



## விளையாட்டுப் பையன்

### KLATZ HAND SET

தற்போது ஸ்மார்ட் பிரேஸ்லெட் எனப்படும் இலத்திரனியல் கைப்பட்டிகளை பல்வேறு நிறுவனங்கள் அறிமுகம் செய்து வருகின்றன. எனினும் இவை பொதுவாக உடல் ஆரோக்கியத்தை பேணுவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டிருக்கும்.



இந்நிலையில் உடல் ஆரோக்கியத்தை பேணுவதுடன் ஸ்மார்ட் கைப்பேசிகளுக்கு பிரதியீடாகவும் பயன்படுத்தக்கூடிய klatz எனும் புதிய பிரேஸ்லெட் உருவாக்கப்பட்டுள்ளது.

LED திரையினைக் கொண்ட இந்த பிரேஸ்லெட்டின் மூலம் ஸ்மார்ட் கைப்பேசிகளுக்கு வரும் குறுஞ்செய்திகளை பார்வையிட முடிவதுடன், குரல்வழி அழைப்புக்களையும் கையாள முடியும்.

## ஆபத்திலுள்ளோர்க்கான Robot

இந்தியாவில் நவம்பர் 10ஆம் தேதி முதல் நிறுத்த உள்ளதாக மைக்ரோசாப்ட் நிறுவனம் அதிரடியாக அறிவித்துள்ளது. இந்தியாவில் உள்ள தொலைத்தொடர்பு நிறுவனங்கள் தங்களுடைய வருவாய் ஸ்கைப் வசதியால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக கொடுத்த புகாரின் அடிப்படையில் மைரோசாப்ட் இந்த அதிரடி முடிவை எடுத்துள்ளது. மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் இந்த அறிவிப்பு ஸ்கைப் இந்திய பயனாளிகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. இருப்பினும் இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்கும், வெளிநாட்டில் இருந்து இந்தியாவுக்கும் ஸ்கைப் மூலம் பேச தொடர்ந்து அனுமதித்துள்ளதால் பயனாளிகள் ஓரளவுக்கு ஆறுதல் அடைந்துள்ளனர்.

## அனைத்தும் முடியும்

சில தடை செய்யப்பட்ட இணையத்தளங்களை பார்வையிடுவதற்கு TunnelBear எனும் மென்பொருள் பயனுள்ளதாக இருக்கின்றது. இம்மென்பொருளானது iOS, Android இயங்குதளங்களைக் கொண்ட மொபைல் சாதனங்கள் உட்பட PC மற்றும் Mac ஆகிய சாதனங்களில் நிறுவி பயன்படுத்தக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் வேறொரு நாட்டிலிருந்து இணையத்தளத்தினை பார்வையிடுவது போன்ற மாயையை ஏற்படுத்த முடியும். இதன் இலவச பதிப்பினை பயன்படுத்தும் போது ஒவ்வொரு மாதமும் அதிகபட்சமாக 500MB வரையான தரவுகளையே பயன்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது




## வீடியோ SMS

வீடியோ அழைப்பு, குரல்வழி அழைப்பு உட்பட சட்டிங் மற்றும் கோப்புக்களை பரிமாறிக்கொள்ளும் வசதியை ஸ்கைப் தருகின்றது. தற்போது பயனர்களுக்கு மிகவும் பயனுள்ள மற்றுமொரு வசதியினை அறிமுகம் செய்துள்ளது.

Skype Qik என்று அழைக்கப்படும் இப்புதிய வசதியின் மூலம் நண்பர்களுக்கு அல்லது உறவினர்களுக்கு சிறிய வீடியோ மெசேஜ்ஜினை அனுப்ப முடியும்.

Windows Preview மற்றும் Mac இயங்குதளங்களைக் கொண்ட டெக்ஸ்டாப் கணனிகளுக்கான ஸ்கைப் புதிய பதிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதில் பயனர் இடைமுகத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதுடன் புதிய வசதிகள் சிலவும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### அஹிம்சை வழிப்போரின் ஆரம்பமே அஹிம்சை தொடர்பான சிறந்த விளக்கத்தைப் பெற்றுக்கொள்வதே...

# காந்தியும் பெரியாரும்

அஹிம்சாமூர்த்தி காந்தியை சுயமரியாதை இயக்கத் தலைவர் பெரியாருடன் ஒப்பிடும் இக்கட்டுரை ஆய்வுக்கானதே!

வாரம் 03



காந்தியாரின் இச்செயலை விமர்சித்து அமுக்கப்படும் அங்கீகாரம் எனும் தலைப்பில் எழுதியிருக்கிறார் இறையன்பு.

முதுகில் குத்துவது ஒருவகையான துரோகம் என்றால் ஒருவரின் முகவரியை மறைத்து அதில் தன் முத்திரையைக் குத்துவது இன்னொரு வகையான துரோகம். உழைத்தவர்களுக்குப் போய்ச்சேரவேண்டிய அடையாளத்தை மறைத்துவிட்டு தொடர்பில்லாத நபருக்குப் பெருமைகளை அள்ளி வீசுவது வியர்வையைச் சிந்தியவர்களுக்கு அயர்வைத் தருகிற அற்பச் செயல் எனத் தொடங்குகிறது அக்கட்டுரை. கேரள மாநிலம் வைக்கத்தில் கோவிலைச் சுற்றியுள்ள தெருக்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் நடக்க அனுமதிக்கப்படாததைக் கண்டித்து பொதுமக்கள் போராட்டத்தில் இறங்கினர்.

சரியான தலைமையில்லாததால் போராட்டம் முடக்கப்பட்டது. போராட்டத்தை வலுப்படுத்தும் சக்தி ஈரோட்டைச் சேர்ந்த ஈ.வெ.ராமசாமி நாயக்கருக்கே உண்டு எனக் கணித்த போராட்டக்காரர்கள், ராமசாமி நாயக்கருக்கு அழைப்புவிடுக்க, உடனடியாக அவர் வைக்கம் சென்று போராட்டத்தில் கலந்து கொண்டார். அப்போது திருவிதாங்கூர் மன்னர் மரணம் அடைய, அவரது மறைவையொட்டி கைது செய்யப்பட்டிருந்த போராட்டக்காரர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். ராமசாமி நாயக்கரின் தலைமையில் போராட்டம் விஸ்வரூபம் எடுத்து விபரீதம் ஏதும் நிகழுமோ என்று பயந்த திருவிதாங்கூர் மகாராணி காந்திக்குக் கடிதம் எழுதினார். பின்னர் அந்தத் தெருக்களில் தாழ்த்தப்பட்டவர்கள் நடக்க அனுமதிக்கப்பட்டனர். இப்போராட்டத்தின் காரணமாக வைக்கம் வீரர் என்று அழைக்கப்படும் அளவிற்கு வாகையைச் சூடிய அந்தத் தலைவர்தான் பின்னால் பெண்கள் மாநாட்டில் பெரியார் என்று பெயர் சூட்டப்பட்ட ஈ.வெ.இராமசாமி. உண்மை இப்படி இருக்க, மகாத்மா காந்தியே மகத்தான தவறு ஒன்றைச் செய்தார். வைக்கம் போராட்டம் பற்றி, காந்தி பத்திரிகை ஒன்றில் எழுதிய கடிதத்தில் பெரியாரைப் பற்றி ஒரு வரிகூட எழுதவில்லை. ஆனால் தந்தை பெரியார் அவர்களோ அதுபற்றி எதுவும் அலட்டிகொள்ளவில்லை என்கிறார் இறையன்பு.

மயிலாடுதுறை முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் சுதந்திரப் போராட்ட, வீரருமான தியாகி நாராயணசாமி நாயுடு அவர்கள் தன் வாழ்நாள் அனுபவங்களைப் பற்றிச் சொல்கையில் 1930களில் மயிலாடுதுறையில் சுயமரியாதைக்காரர்களின் கை ஓங்கியிருந்ததாகக் குறிப்பிட்டிருக்கிறார். மயிலாடுதுறையில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தலைவர் எஸ்.சீனிவாச அய்யங்கார் கூட்டத்தில் கலாட்டா. வரதராஜுலு நாயுடு கூட்டத்தில் அடிதடி. சத்தியமூர்த்தி கூட்டமே நடத்த முடியாத நிலை. காந்திக்குக் கருப்புக்கொடி. நேருவுக்குக் கருப்புக்கொடி. கதர்கட்டி பட்டமங்கலத்தெரு, மணிக்கூண்டு தாண்டினால் கதர் கட்டியவர்கள் சென்றால் அடிவிழும் நிலை என்று குறிப்பிட்டுள்ளார்.

தியாகி நாராயணசாமி கூறியதையும், 1934இல் காந்தி வருகைக்கு மக்கள் ஆதரவு குறைந்திருந்ததையும் ஒப்பிடுகையில் தந்தை பெரியார் காங்கிரஸில் இருந்தபோது, தமிழ்நாட்டில் காந்திக்கு இருந்த ஆதரவு, பெரியார் காங்கிரசை விட்டு வெளியேறிய பின் காந்திக்கு இல்லை என்பதையும், காந்தி தமிழ்நாட்டிற்கு வரும்போதெல்லாம் பெரியாரின் கொள்கை நிலைப்பாட்டை ஒட்டியே பேச முடிந்திருக்கிறது என்பதையும் தெளிவுபடுத்துகிறது.

மேலும் காந்தி 1925க்கு முன்னர் தமிழ்நாட்டிற்கு வருகை தந்த போதெல்லாம் பார்ப்பனர்கள் வீட்டுத் திண்ணையில் அமர்ந்தே சென்றிருக்கிறார். 1925இல் பெரியார் சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்த பின்னரே காந்தியாரால்கூட பார்ப்பனர்கள் வீட்டு அடுப்பங்கரை வரை செல்ல முடிந்திருக்கிறது. இதை, காந்தியே தனது சுயசரிதையில் குறிப்பிட்டிருக்கிறார்.

தந்தை பெரியார் அவர்கள் காந்தியாரைச் சந்தித்தபோது நான் சொல்லுகிறேன், தாங்கள் மன்னிக்க வேண்டும். இந்து மதத்தை வைத்துக் கொண்டு தங்களாலேயே நிரந்தரமாக ஒன்றும் செய்துவிட முடியாது. பிராமணர்கள் அவ்வளவு தூரம் விட்டுக் கொண்டிருக்க மாட்டார்கள். தங்கள் கருத்து அவர்களுக்கு விரோதமாகச் சற்று பலிதமாகிறது என்று கண்டால் உடனே எதிர்க்க ஆரம்பித்து விடுவார்கள். இதுவரை எந்த ஒரு பெரியாராலும் இந்தத் துறையில் எந்தவிதமான மாறுதலும் ஏற்பட்டதில்லை என்பதோடு, அப்படிப்பட்ட ஒருவரையும் பிராணர்கள் விட்டுவைத்துக் கொண்டிருக்க மாட்டார்கள் என எச்சரித்தார்.

தந்தை பெரியார் அவர்கள் எச்சரித்ததைப் போலவே 1948இல் ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தைச் சேர்ந்த நாதுராம் கோட்சே என்கிற பார்ப்பனரால் காந்தி கொல்லப்பட்டார். நாடே கொந்தளித்திருந்த சூழலில் இந்திய நாட்டிற்கு காந்தி நாடு என பெயர் சூட்டப்பட வேண்டும் என்று அரசுக்கு பெரியார் வேண்டுகோள் விடுத்தார். அவர்தாம் பெரியார்!.

முற்றும்.. ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வியல் -23 கண்ணனை சந்திப்போமா!!


(வி.என்.சந்திரகாந்தி)

மகாபாரதத்தின் மக்கள் மனதை கவர்ந்த மூன்று பிரதான கதாபாத்திரங்களாக பீஷ்மர், துரோணர், கர்ணன் ஆகியோர் திகழ்கிறார்கள். இவர்கள் மூவருமே கௌரவர்கள் சார்பில் சேனாதிபதிகளாக குருஷேத்திர யுத்தத்தில் பங்குபற்றி மடிகிறார்கள். மாவீரர்களான இவர்களின் இறப்புக்கு பாண்டவர்கள் தரப்பில் அரிச்சுனனின் தேரோட்டியாக இருந்த கண்ணனின் பங்களிப்பு மிக மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. முறையே பிதாமகர் என்றும் ஆச்சாரியார் என்றும் கொடைவள்ளல் என்றும் அஸ்தினாபுர குரு வம்சத்தால் பாராட்டி போற்றப்பட்ட இம்மூன்று பாத்திரங்களும் மரணத்திற்கு முன்னர் கண்ணனால் நேருக்கு நேர் குற்றம் சுமத்தப்பட்டு தமது தவறுகளை ஏற்றுக்கொண்டு மரணத்தை சுவீகரிக்க சித்தமாகின்றார்கள்.

பத்தாம் நாள் யுத்தத்தில் பீஷ்மர் தன்னால் இந்த அகிலத்தையே அழித்துவிட முடியும் என்று சவால் விட்டு அஸ்திரங்களை பொழிகிறார். கண்ணன் அதை தடுக்கிறான். அப்போது, தான் யார் என்பதை அவருக்கு உணர்த்துகின்றான்.

'நான் வாசுதேச கிருஷ்ணனல்ல எந்த வம்சத்தை சேர்ந்தவனுமல்ல, மானுடனுமல்ல, நான் பரப்பிரம்மம் ஆவேன். நான் சத்தியம், ஞானம், தர்மம் ஆவேன். என் அனுமதி பெற்றே இந்த யுத்தம் நடக்கிறது. என் அனுமதியோடுதான் மரணம் உம்மை நெருங்கும் !

பீஷ்மர் அதிர்ந்து விடுகிறார்...

'தங்கள் உண்மையான சொரூபத்தை அறியாமல் இருந்துவிட்டமைக்கு என்னை மன்னித்தருளுங்கள் வாசுதேவ கிருஷ்ணரே. அதற்கு காரணமான என் தோஷங்களை எடுத்தியம்புவீர்களா?" என வினவி பணிகிறார்.

கண்ணன் கூறுகிறான்.

'அஞ்ஞானமே தமது தோஷம். தாம் தர்மத்தின் உண்மையை அறியவில்லை. தமது தியாகம் பற்றியே சிந்தித்தீர், தந்தைக்காக பிரமச்சரியம் ஆற்றினீர், இந்த அகிலத்துக்காக என்ன செய்தீர்? தாம் தமது கடமைளை ஆற்ற தவறினீர். இந்த யுத்தத்தை, அழிவை தடுக்கவில்லை. கர்மத்துடன் இணையவில்லை, பாண்டுவின் இராஜ்யாபிஷேகம் தம்மால் சிபார்சு செய்யப்பட்டதல்ல. திருதராஷ்டினனது காந்தாரியுடனான விவாகம் தம்மாலானதல்ல. திருதராஷ்டினனதும் துரியோதனனதும் அநியாயங்களை தடுக்க தவறினீர். சூது விளையாட்டையும் திரௌபதி துகில் உரிதலையும் தடுக்கவில்லை. தமது தியாகம், பிரதிக்ஞை அனைத்துமே சுயநலமானது. அவற்றால் அகிலமே நன்மை பெறுமாயின் மட்டுமே அது போற்றற்குரியது.

பீஷ்மர் தமது தவறை உணர்ந்து மரணத்தை சுவீகரிக்க சித்தமானார். சிகண்டி அவர் மேல் தனது அஸ்திரத்தை செலுத்தினாள்! அர்ச்சுனன் அம்பு மழை பொழிந்தான். பீஷ்மனின் வீழ்ச்சியை அடுத்து சேனாதிபதியான துரோணர் தனது மகனான அசுவத்தாமன் இறந்தான் என்ற செய்தியை யுதிஷ்ரர் வாயிலாக கேட்டு நம்புகின்றார். அதனால் கோபம் கொண்டு, "பரசுராமர் தனக்கு அளித்த அஸ்திரங்களால் அகிலத்தையே அழிப்பேன்" என சூழுரைக்கின்றார்.

அப்போ கண்ணன் பிரசன்னமாகி துரோணரது தவறுகளை அவருக்கு எடுத்துரைக்கின்றான். 'நற்கருமங்கள் புரிபவன் கூட துஷ்கருமங்கள் புரிபவனுடன் இணைந்து வாழ்ந்தால் அவனை துஷ்டனாகவே உலகத்தார் கணிப்பிடுவர். நீர் திருதராஷ்டிரனதும் துரியோதனதும் தவறுகளுக்கு சாட்சியாக சபையில் இருந்தவர். திரௌபதி துகிலுரியப்படுவதை உம்மால் தடுக்க முடியவில்லை. யுத்தம் முடிவானதையிட்டு என்ன செய்தீர்? அன்பை பற்றி அறியாதிருந்தீர். அன்பு, சரி எது தவறு எது என்ற ஞானத்தை தரவல்லது. அன்பினை அறிந்திருந்தால் தாம் அதர்மவலையில் சிக்கியிருக்கமாட்டீர். தமது புதல்வனும் அதர்மக் கடலில் மூழ்கியிருக்கமாட்டான். அன்பு கருணையிலிருந்து பிறப்பது. மோகம் அகங்காரத்தில் இருந்து பிறப்பது. அன்பு பொதுநலத்துக்கு முக்கியத்துவம் வழங்குவது. ஆனால் மோகம் சுயநலமே முக்கியமானது என எண்ணுவது. அன்பானது முக்தியை வழங்கும். மோகமானது பேராசையை அளிக்கும். அன்பு தர்மமாகும். ஆனால் மோகம் அதர்மமாகும். ஞானம், தர்மம், சக்தி பற்றி தமது புதல்வனுக்கு புகட்ட தவறினீர். அதனால் அவனும் அழிவுக்கு காரணமாகிறான். நீர் உமது மகனைப் பற்றியே சிந்தித்தீர். அகிலத்தவரை அழிக்க தயாரானீர். உமக்கு முக்தி எப்படி சாத்தியமாகும்? துரோணர் அதிர்ந்து விடுகிறார். மரணத்தை சுவீகரிக்க தயாராகிறார். அஸ்திரங்களை துறக்கிறார்.

துரோணரது வீழ்ச்சியை தொடர்ந்து கர்ணன் சேனாதிபதியாகிறான். கொடைக்கு பெயர் போனவன். பரசுராமனின் சீடன். கவச குண்டலங்களையும் திவ்ய அஸ்திரங்களையும் கொண்டவன். துரியோதனன் நட்பை பெற்றவன். அதனால் அங்கதேசத்து அரசனுமானவன். அஸ்தினாபுர இராஜ்ஜியத்தின் வெற்றிக்காக கௌரவர் பக்கம் இணைந்து உழைத்தவன். வில் வித்தையில் மாவீரன்! அர்ச்சுனனை இன்றே கொல்வேன் என துரியோதனனுக்கு வாக்களித்து களம் இறங்குகிறான். ஆனால் அவனது ரதத்தின் சக்கரம் பூமியில் புதைகிறது. சக்கரத்தை மீட்க முனைகையில், வில்லேந்தாத நேரத்தில் அர்ச்சுனன், கர்ணனை வதைக்க சந்தர்ப்பம் கிட்டுகிறது. பரசுராமரின் சாபம் காரணமாக அவன் கற்ற வித்தை உரிய நேரத்தில் கைகொடுக்க தவறுகிறது.

அந் நேரம் கண்ணன் பிரசன்னமாகி கர்ணனுக்கு நேர்ந்த அந்த இக்கட்டான நிலைக்கு காரணம் கூறுகின்றான். 'வித்தையை நீ அகிலத்துக்காக கற்கவில்லை. அர்ச்சுனனை கொல்லவேண்டும் என்ற பழி உணர்வே வியாபித்திருந்தது. நீ உன்னுடைய மனதை பொதுநலத்துக்கு சமர்ப்பிக்கவில்லை. அதர்மத்தின் மறு வடிவமான துரியனிடம் நீ உன்னை சமர்ப்பித்தாய். ஆணவம் கொண்ட அவன் காட்டிய வழியில் நடக்க தொடங்கினாய். பாஞ்சாலி துகிலுரிகையில் அவள் மானம் காக்க தவறினாய். ஈன்ற தாயான குந்தியின் வேதனையை உணரத்தவறினாய். உன் சகோதரர்களுக்கு பிறந்த புத்திரனான அபிமன்யுவையும் கடோத்கஜனையும் மண்ணில் சாய்த்தாய். அகிலத்துக்காக நீ வாழவில்லை. அதனால் யுத்தத்துக்கும் குருஷேத்திரத்தில் உண்டான அழிவுகளுக்கும் காரணமானாய். ஞானம் என்பது ஆத்மாவின் மற்றொரு வடிவம் என்பதையும் நீ அறிய தவறியதால் முக்திக்கான சந்தர்ப்பத்தை இழந்தாய்! கர்ணன் தனது தவறுகளை உணர்கிறான். அர்ச்சுனனின் அஸ்திரம் அவனது உயிரை பறிக்கிறது.

சரி, இப்போ எமது பக்கம் பார்வையை திருப்புவோம். எமது வாழ்வின் அந்தத்தில் இறைவன் எம் முன் பிரசன்னமாவது நிச்சயத்தின் மேல் நிச்சயம் என்றாகிவிட்டது! எமது மனச் சாட்சியை தொட்டு சிந்திப்போம். நாம் வாழும் விதத்தில் கண்ணனை எதிர்கொள்ள நாம் தயாரா?

# தேசிய SMS செய்திகள்

- **தமிழக மீனவர்கள் விரட்டியடிப்பு**

நடுக்கடலில் மீன்பிடித்த இராமேஸ்வரம் மீனவர்கள் மீது இலங்கை கடற்படை வீரர்கள் சரமாரியாக கல்வீசி தாக்குதல் நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

- **இலவச மூக்குக் கண்ணாடி வழங்கி வைப்பு**

ஜனநாயக மக்கள் முன்னணியின் கம்பஹா மாவட்ட அமைப்பு செயலாளர் எஸ். சசிகுமாரினால் ஏற்பாடு செய்யப்பட்ட மருத்துவ மற்றும் கண் சிகிச்சை மற்றும் இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வு அண்மையில் வத்தளை நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

- **விமல் - மஹிந்த சந்திப்பு**

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும் தேசிய சுதந்திர முன்னணியின் முக்கியஸ்தர்களுக்கும் இடையில் நேற்று வெள்ளிக்கிழமை முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. தேசிய சுதந்திர முன்னணி சமர்பித்துள்ள யோசனைகள் சில குறித்து கலந்துரையாடவே இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

- **கஞ்சா வைத்திருந்தவர் கைது**

யாழ். பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், குருநகர் - சின்னக்கடை பகுதியிலுள்ள குறித்த நபரின் வீட்டில் சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது, 18 கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இவை சுமார் 9 ஆயிரம் ரூபா பெறுமதியானவை என்று தெரியவருகின்றது

- **புதிய விஞ்ஞான பாடத்திட்டம்**

2015 ஆம் ஆண்டில் புதிய விஞ்ஞான பாடத்திட்டத்தினை தரம் 6 முதல் 10 வரையான மாணவர்களின் நலன் கருதி புதிய விஞ்ஞான பாடத்தினை அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இதற்கிணங்க நாடு தழுவிய ரீதியில் விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கு இப்புதிய பாடத்திட்டம் தொடர்பான செயலமர்வுகளை கல்வி அமைச்சு முன்னெடுத்து வருகின்றது.

- **தினக்குரல் ஊடகவியலாளருக்கு இலங்கை மருத்துவ சங்கத்தின் விருது**



இலங்கை மருத்துவ சங்கத்தின் 2014 ஆம் ஆண்டுக்கான சிறந்த மருத்துவக் கட்டுரைகளுக்கான விருதில் தமிழ்மொழிமூல சிறந்த கட்டுரைக்கான விருதுக்கு தினக்குரல் ஊடகவியலாளரான மொஹமட் "ஹசைன் பாத்திமா "ஹஸ்னா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

- **படையினருக்கு பிரெஞ்**

இராணுவத்தினருக்கு பிரெஞ் மொழியினை கற்பதற்கு, பிரெஞ் தூதுவராலயத்தின் உதவியை இலங்கை இராணுவம் கோரியுள்ளது.

- **தடையை நீக்கியது ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம்**

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது விதிக்கப்பட்ட தடையை ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் நீக்கி தீர்ப்பளித்துள்ளது.

- **ஒரு தொகுதி தற்காலிக வீடுகள் அமைக்க நிதியுதவி**

மன்னார் மாவட்ட முசலி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட முள்ளிக்குளம் கிராமத்தில், ஒரு தொகுதி தற்காலிக வீடுகள் அமைக்க நிதியுதவி வழங்குவதாக வட மாகாண மீன்பிடி, போக்குவரத்து, கிராமிய அபிவிருத்தி மற்றும் வர்த்தக வாணிப அமைச்சர் பா.டெனிஸ்வரன் தெரிவித்துள்ளார்.

- **5 தடவையும் மகிந்தவால் போட்டியிட முடியும்: அமைச்சர் சுசில்**

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மூன்று முறையல்ல 5 முறை கூட ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட எந்த தடையுமில்லை என அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

- **அரச ஊழியர்களின் சம்பளத்தை 10,000 ரூபாவால் அதிகரிக்க வேண்டும்**

2015 வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளத்தை 10 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்க வேண்டுமெனவும் அதற்குச் சமாந்தரமாக தனியார் துறை ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு அரசு பணிப்புரை விடுக்க வேண்டுமெனவும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி அரசை வலியுறுத்தியுள்ளது.

- **ஜனாதிபதி செயலகத்தின் பேரில் போலி கடிதம்**

பேராதனை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கீழ்மட்ட ஊழியர்களுக்கு இருபத்தையாயிரம் 'ரூபா பெறுமதியில் முச்சக்கரவண்டிகளைப் பெற்றுத் தருவதற்கு அரசு தீர்மானித்திருக்கின்றது என்ற தகவலுடன் ஜனாதிபதி செயலகத்தை பிரதானப்படுத்தி அனுப்பப்பட்டிருந்த சுற்று நிருபம் போலியானது என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

- **வடக்கிற்கான அதிவேக பாதை**

வட பகுதிக்கான அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணப்பணிகள் எதிர்வரும் நவம்பர் மாதம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

- **தூத்துக்குடி கப்பல் சேவை மீண்டும்**

தூத்துக்குடிகொழும்பு இடையே மீண்டும் பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவையைத் தொடங்க, தூத்துக்குடி வஉசி துறைமுகம் திட்டமிட்டுள்ளது.

# நிகழ்வுகள்

## தேசிய ஓய்வூதிய தினம்

திருகோணமலை மாவட்ட ஓய்வூதியம் பெறுவோர் சங்கத்தினர். தேசிய ஓய்வூதியம் பெறுவோர் தினமாகிய ஐப்பசி மாதம் 8ம் திகதி சங்கப் பணிமனையில் சங்கத்தலைவர் திரு.கோ.கைலாயநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் சங்கத்தின் மூத்த உறுப்பினர்கள் வண.BAJ.காசிநாதர், திரு.B.சங்கரப்பிள்ளை, திரு.N.V.பாய்வா ஆகியோர்களுக்கு பிரதம விருந்தினர் அருளானந்தம் அவர்களால் மாலை அணிவித்து கௌரவித்து பொற்கிளிகள் வழங்கப்படுவதையும் சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோருடன் கௌரவிக்கப்பட்டவர்கள், கலந்துரையாடலில் கலந்துகொண்ட ஒரு பகுதி ஓய்வூதியம் பெறுவோர்களையும் காணலாம்.



## காவடிச் சிந்துகள் - இறுவெட்டு வெளியீடு

கடந்த 12ஆந் திகதி சல்லியம்பாள் வித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலாபூசனம் அ.சித்திரவேலாயுதம் ஐயாவினால் பாடப்பட்ட தெய்வீகக் காவடிச் சிந்துகளை உள்ளடக்கிய இறுவெட்டு, தரிசனம் பிரிவின் முயற்சியால் வெளியிடப்பட்டது.

இந்நிகழ்வானது முன்னாள் அஞ்சல் அதிபரான திரு.இ.சிதம்பரநாதன் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் முதன்மை விருந்தினராக முன்னாள் த.தே.கூ வின் பா.உ க.துரைரெட்ணசிங்கம் அவர்களும், கௌரவ விருந்தினர்களும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் மலைமுரசு ஆசிரியரால் தரிசனம் பணிப்பாளர் அவர்களும், கலாபூசனம் அ.சித்திரவேலாயுதம் ஐயாவும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்ட








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 03

1. ஒருவரின் மாதாந்த வருமானம் ரூபா 36000 ஆகம். இதில் 1/3 பங்கினை உணவுக்கும், 2/6 பங்கை மருத்துவச் செலவுக்கும் செலவிட்டார். மீதியை போக்குவரத்துக்காக செலவிட்டார். இவர் போக்குவரத்துக்காக செலவிட்ட பணம் எவ்வளவு?

2. இரு கார்கள் ஓரிடத்திலிருந்து புறப்பட்டு அவை ஒவ்வொன்றும் எதிர்த்திசையில் 100மீ தூரம் சென்றன. பின்னர் ஓர் கார் வலது பக்கமும், மற்றைய கார் இடது பக்கமும் திரும்பி ஒவ்வொன்றும் 200மீ தூரம் சென்றன. இப்போ இரு கார்களுக்கும் இடையிலான தூரம் என்ன?
   1. 600மீ 2. 300மீ 3. 200மீ

3. அருகில் தரப்பட்டுள்ள உருவின் சுற்றளவு யாது?
   1. 20மீ 2. 26மீ 3. 28மீ




4. ஒரு பூந்தோட்டத்தில் ரோசா, மல்லிகை, லில்லி, சாமந்தி எனும் பூஞ்செடிகள் ஒழுங்கு முறைப்படி மாறிமாறி நடப்பட்டுள்ளன. இதில் 31வது பூஞ்செடி எது?
   1. மல்லிகை 2. சாமந்தி 3. லில்லி

5. 416 தோடம்பழங்கள் பெட்டிகளில் சமமாக அடைக்கப்பட்டது எனில், எத்தனை பெட்டிகளில், எத்தனை பழங்கள் வீதம் அடைக்கப்பட்டது?
   1. 8, 14 2. 6, 114 3. 4, 104

6. எந்தவித மணத்தையும் கொண்டிராத பூ எது?
   1. எக்சோரா 2. பவளமல்லிகை
   3. தாழம்பூ 4. ரோசா

7. வித்து முளைத்தலுக்கு அவசியமல்லாத காரணி எது? 1. நீர் 2. வெப்பம் 3. வளி 4. சூரியஒளி

8. கஞ்சி தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் இலை வகையாக அமையாதது?
   1. வல்லாரை 2. சிறுநாரத்தை இலை
   3. கோப்பை இலை 4. வட்டுக்கத்தரியிலை

9. சிங்கள, தமிழ் புத்தாண்டுக்காலம் நெருங்கி வருவதை முன்னறிவிக்கும் பிராணி எது?
   1. காகம் 2. ஆட்காட்டி குரவி
   3. குயில் 4. மலைக்காகம்

10. சுற்றாடலில் சேரும் அழுக்குகளை உண்டு சுற்றாடலை சுத்தமாக்கும் பிராணி எது?
   1. நாய் 2. பன்றி 3. காகம் 4. கோழி

11. கிராமப்புற மக்கள் பலாச்சுளைகளை பாதுகாத்து வைக்கும் விதம் எது?
   1. உலர்த்துதல் 2. உப்பிடுதல்
   3. சீனிப்பாகில் அமிழ்தல் 4. குளிர்சாதனப்படுத்தல்

12. பின்வருவனவற்றில் புரதமிக்க உணவு எது?
   1. கரட் 2. சோயா 3. கீரை 4. பசளி

13. எலுமிச்சைப்பழச் சாற்றில் அதிகளவில் உள்ள போசணைப் பதார்த்தம்?
   1. கொழுப்பு 2. புரதம் 3. கல்சியம் 4. விற்றமின்சீ

14. எல்லே விளையாட்டில் ஒரு குழவில் உள்ள விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை?
   1. 9 2. 11 3. 15 4. 16

15. இலங்கையில் மேல் மாகாணத்திலிருந்து இரு பிரதான ஆறுகள் கடலுக்குள்ளே பாய்கின்றன. அவை எவை? 1. மகாவலி கங்கை, வளவை கங்கை
   2. வளவை கங்கை, களனி கங்கை
   3. களனி கங்கை, களு கங்கை
   4. கிங்கங்கை, களு கங்கை

16. இலங்கை அரசாங்க இலச்சினையில் நிலைத்திருப்பதைக் குறிப்பது
   1. தர்ம சக்கரம் 2. நிறைகுடம் 3. பூவிதழ்கள்
   4. சூரியனும் சந்திரனும்

17. துருப்பிடித்த ஆணி காலில் குத்துவதால் ஏற்படக் கூடிய அபாயகரமான நோய் எது?
   1. குக்கல் 2. ஏற்புவலி 3. காக்காவலி
   4. மாரடைப்பு

# சிறுவர் முரசு




**சிந்திக்க .. ..**

சாத்தியம் என்கிற
வார்த்தைதான்:
அசாத்தியம் என்பதன் அஸ்திவாரம்!

## பாட்டுப் பாடும் வெட்டுக்கிளி!!!

**குட்டிக்கதை**



அது ஒரு அடர்ந்த காடு. அந்த காட்டில் ஒரு இரக்கமற்ற ஆந்தை வாழ்ந்து வந்தது. ஒரு நாள் மதிய வேளையில் மரப்பொந்து ஒன்றில் ஆந்தை தூங்கிக் கொண்டிருந்தது. அந்த நேரத்தில் புல்தரையின் கீழ் வெட்டுக்கிள ஒன்று பாட்டுப் பாடிக் கொண்டே வந்தது. வெட்டுக்கிளியின் பாட்டுச்சத்தம் ஆந்தையின் தூக்கத்தை கெடுத்தது. உடனே ஆந்தை அந்த வெட்டுக்கிளியிடம், கொஞ்சம் பாடுவதை நிறுத்து என்று கேட்டது.

வெட்டுக்கிளியோ அதைக் கேட்காமல் அந்த மரத்தின் கீழே பாடிக் கொண்டிருந்தது. மேலும் ஆந்தையைப் பார்த்து நீ கண் தெரியாத குருட்டுப் பறவை. பகலில் வருவது கிடையாது. எல்லோரும் இரவில் தூங்கிய பிறகு தான் நீ வெளியே வருவாய். என்று திட்டியது.


தினமும் ஒரே மாதிரியான உணவினை சாப்பிட்டு வந்த ஆந்தைக்கு அந்த வெட்டுக்கியையும் சாப்பிட வேண்டும் என்ற ஆசை வந்தது. தந்திரத்தால் தான் அவ் வெட்டுக்கிளியை அடக்க வேண்டும் என்று தீர்மானித்தது. நண்பனே! என்னை தூங்கவிடாமல் நீ செய்ய விரும்பினால் நீ செய்து விட்டு போ ஆனால் விழித்துக் கொண்டிருப்பவர்களுக்கு இனிமையாய் இருக்கும் பொருட்டு உன் சங்கீதம் உபயோகப் படட்டுமே. உன் சங்கீதம் இனிமையானதே. அதை இன்னும் மெரு கேற்ற என்னிடம் ஓர் அமிர்தம் இருக்கிறது. அந்த அமிர்தத்தை இரண்டு துளி நீ சாப்பிட்டால் போதும், உன் குரலும் அமிர்தமாய் போகும். மேலே வா தருகிறேன் என்றது ஆந்தை.



ஆந்தையின் நயவஞ்சக பேச்சைக் கேட்டு மயங்கிய வெட்டுக்கிளி மரத்தில் ஏறி ஆந்தையின் அருகில் சென்றது.

அருகில் வந்த வெட்டுக்கிளியை ஆந்தை நசுக்கிக் கொன்று தின்றது.

**- பயமுறுத்தலைவிட நயவஞ்சகம் பலமானது -**



செல்வன்.என்.நிதீஷ்
90 வித்தியாலயம் வீதி,
திருகோணமலை

## தம்பி நீ வாழ்ந்து காட்டு

பள்ளியில் படிக்கும் பிள்ளை
படிப்பினில் கருத்தை யூன்றி
தெள்ளமுதனைய கல்வி
செம்மையாய் பதியு முண்மை
கள்ளனாய் கவனம் விட்டு
கருத்தினை சிதற விட்டால்
உள்ளத்தில் ஒன்றும் நில்லா
ஓடியே ஒழியுந் தானே!

பற்றுவை தாய் தந்தைமீது
பக்தி கொள் தெய்வம் மீது
கற்றிடு உயர்ந்த கல்வி
கசடறக் கற்றுத் தேறு
உற்ற நற்புத்தி கேட்டு
உத்தமனாக வாழு
தற்பெருமை விட்டு - தம்பி
தரணியில் வாழ்ந்து காட்டு!

- சேனையூரான் -

# குறுக்கெழுத்து புதிர் 031

முடிவுத் திகதி : 23.10.2014

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | வு | 2 | 16 | 3 வ | | ■ |
| 4 | 5 | 19 | ■ | | | | 17 | ■ |
| வு | | ப | 6 | | | | | 18 |
| 7 | 20 | | | | ■ | க | க | |
| ■ | | ■ | | 8 | 21 | | | |
| ■ | | 22 | ■ | ■ | ண் | 9 | | |
| 10 | | 11 | | | | | ■ | 23 |
| ■ | ■ | 12 | | தி | | 15 | | ண் |
| 13 | | | | 14 | | | | |

### இடமிருந்து வலமாக

1. தோண்டி எடுப்பதைக் குறிக்கும் சொல்
2. இம்மாதம் வரவிருக்கும் கொண்டாட்டம்
3. தாவரத்தின் பச்சையத்திற்கு இதுவும் தேவையானது.
4. இது மிரண்டால் சுனாமி தான் - திரும்பியுள்ளது.
5. இந்தியாவில் இம்மாதத்தில் மலிவு விற்பனைக்கு குறையிருக்காது.
6. இதற்காகத் தானே இத்தனை பாடும்.
7. செய்யும் வேலையை சிறப்பாக செய்தால் இது தானே தேடி வரும்
8. தொழிற்சாலையை இவ்வாறும் அழைப்பர் - திரும்பியுள்ளது.
9. உயரமானது, பெறாமலே இதுவும் பிள்ளை தான். - ஈரெழுத்து மாறியுள்ளது.
10. புலியினங்களில் ஒன்று
11. சிவாவின் பிரபலமான பாடலொன்றின் முதலெழுத்து - திரும்பியுள்ளது.
12. சூரியநாராயணரிடமிருந்து வரம்பெற்ற பெண்
13. மலைமுரசின் ஆதரவுடன் 25,000 புத்தகங்களை திரட்டும் முயற்சி எங்கு நடைபெறுகின்றது?
14. இக்கால வழக்கத்தில் ...................... சிக்கிட்டான்டா!
15. தூளை இவ்வாறும் கூறுவர்.

### மேலிருந்து கீழாக

1. சுனாமி இதனை ஏற்படுத்தக்கூடியது.
2. இது சாதாரணமாக இல்லாமல் பெரும் குழம்பானால் அழிவுதான்.
3. கண்டவுடன் கூறப்படுவது.
5. இது அடித்தே மரங்கள் வெட்டப்படும்.
6. மழை காலத்தில் முளைப்பது.
9. இந்தியாவிலிருந்து இலங்கையின் திசை
16. பாரம்பரிய ஆடை ............... , தாவணி
17. ரஜனியின் ரிலீஸாக இருக்கும் படம்.
18. கப்பலோட்டியை இவ்வாறு அழைக்கலாம்.
19. விஜயை தூக்கி விட்ட த்ரிஷாவுடனான படம்.
20. சிநேகா இதற்கு அரசி
21. பச்சைக்கிளியுடன் வீற்றிருப்பவள்
22. மகாபாரத யுத்தத்தில் இதை ஊதியே யுத்தம் தொடங்குவர்
23. பூக்கொத்தை பூ............ என்றும் கூறலாம்

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

*விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :*
*மலைமுரசு. இல - 159ஏ,*
*கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.*

## புதிர் 030 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 க | ர் | ண | ன் | ■ | 2 அ | கோ | ரி | ■ |
| 3 ந் | 16 ப | த | ய | ம் | 4 ர | 17 ங் | 18 கோ | லி |
| 5 தை | ய | ல் | 6 யா | ன் | ங் | கை | ழை | 19 ப |
| 7 ம் | ண | 20 ம | று | 21 ந | கு | த | 8 கை | லி |
| ■ | ம் | ந் | 9 க | ளி | று | ■ | லா | ■ |
| 10 ச | ந் | தி | ள | ன் | 11 வி | ஜ | ய | ன் |
| ■ | 12 தா | 22 ர | வ | ம் | 13 லா | பு | ம் | ■ |
| ■ | தி | ம் | ம் | 14 நை | ட் | ரை | ட | ர் |
| 15 கே | ப் | பா | பி | ல | வு | ■ | ■ | ■ |

### பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்:

*செல்வன். பிரதீஷன். பெ*
*அ/20, புளியங்குளம், திருகோணமலை.*

*திரு. அகமட் லெஸ்னி*
*15, வித்தியாலயம் வீதி, திருமலை.*

*செல்வன். எம். குமரகுரு*
*10, தேவா நகர், திருகோணமலை.*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. சுருக்குக. $\frac{x}{(x-3)} + \frac{x}{(x+3)}$

02. 3 ற்கும் -7 இற்கும் இடையிலுள்ள கூட்டலிடையைக் காண்க.

03. $-6xy + 8xy^2$ என்பதை மறைப் பொதுக் காரணியாக வேறாக்குக.


04. மனிங் அன் கம்பனியின் ரூபா 10 பங்குகளை கொள்வனவு செய்வதற்கு ஒருவர் ரூபா 10,800ஐ முதலீடு செய்கிறார். அவர் கொள்வனவு செய்த பங்குகளின் எண்ணிக்கை 900 எனின், ஒரு பங்கின் சந்தைப் பெறுமதியைக் காண்க.

05. காரணி ஒன்றின் $1000m^2$ பரப்பளவுள்ள பகுதியொன்றின் விலை ரூபா 80,000 எனின், காணியின் $900m^2$ பரப்பளவுள்ள பகுதியின் விலையைக் காண்க.

06. $S = Ut + \frac{1}{2} ft^2$ என்னும் சூத்திரத்தில் $U = 7, t = 3, f = 4$ எனின், s இன் பெறுமதியைக் காண்க.

07. சமன்பாடு $3x + y = 2$ இனால் காட்டப்படும் நேர்கோட்டின் படித்திறனையும், வெட்டுத் துண்டையும் காண்க.

08. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு செவ்வகத்தினதும் 3cm உம் அதன் நீளம் 4cm, 5cm, 6 cm என அதிகரித்துக் கொண்டு செல்கிறது.




இதே ஒழுங்கின் படி

அ. இச்செவ்வகங்களின் பரப்பளவுகளை ஒழுங்காக எழுதும் போது எவ்வகையான விருத்தி பெறப்படும்?

ஆ. இதில் 16வது செவ்வகத்தின் பரப்பளவு எத்தனை சதுர சென்ரிமீற்றர் எனக் காண்க.


இ. $36cm^2$ பரப்பளவுள்ள செவ்வகம் எத்தனையாவதாக காணப்படும்

ஈ. முதல் 10 செவ்வகங்களினதும் பரப்பளவுகளின் கூட்டுத்தொகையைக் காண்க.

09. ரூபா 50,000 பெறுமதியான தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றை வாடகைக் கொள்வனவு முறையில் கொள்வனவு செய்ய முடியும். முதலில் 10,000 ரூபாவை செலுத்தி மீதியை 10 சம மாத தவணைக் கட்டணங்களாக செலுத்தி வாங்க குமார் முடிவு செய்தார். ஆண்டு வட்டிவீதம் 15 ஆகம்.

1. செலுத்துவதற்கு எஞ்சி நிற்கும் தொகை என்ன?
2. மாத அலகுகளின் எண்ணிக்கை என்ன? 3. ஒரு மாத அலகிற்கான வட்டி?
4. மொத்த வட்டி என்ன? 5. ஒரு மாத தவணைக்கான கட்டணம் என்ன?

10. PQRS ஓர் இணைகரம்
$PQ = 8cm$
$PT = 14 cm$
$PS = 10 cm$ எனின்,




அ. RT இன் நீளத்தைக் காண்க. ஆ. PQRS இன் பரப்பைக் காண்க

இ. முக்கோணி QRT இன் பரப்பளவைக் காண்க.

**திருமலையின் பிரபல ஆசிரியர் T. Kumanan 0772975953**
**23. Sivan st Trinco.**

## பாடம் : விஞ்ஞானம்

01. பங்கசு இனமும், அல்கா இனமும் ஒன்று சேர்ந்து இலைக்கனை உண்டாக்குகின்றன. இலைக்கனில் அவ்விரு அங்கி இனங்களுக்கு இடையே உள்ள தொடர்புக்கு வழங்கும் பெயர்?
 1. ஒன்றிய வாழ்வு 2. ஒட்டுண்ணியியல்பு 3. ஒரட்டிலிலுண்ணல்
 4. இரைகொன்னுண்ணல்

02. குரதிக் கலங்களில் குரதி உறையாத போதிலும் குரதிக் கலன் தகர்வுறும் போது குருதியுறைகிறது. பின்வரும் எக்கூற்று இந்த அவதானிப்பை விளக்குகிறது?
 1. உடலில் இருந்து குரதி வெளியே வரும் போது மாத்திரம் குரதி உறைதல் நடைபெறுகிறது
 2. குருதிக்கலன் தகர்வுறும் போது மாத்திரம் சிறு தட்டுக்கள் செயற்பட்டு குருதியுறைதல் நடைபெறுகிறது.
 3. குரதிச் சிறு தட்டுக்கள் கட்டி போல் சேர்ந்து அதனைச் சுற்றி மற்றைய கலன்கள் படிவதன் மூலம் குருதியுறைதல் நடைபெறுகிறது.
 4. குரதிக் கலன்கள் உயிர்க்கலன் ஆகையால் உடலில் உறையாத போதிலும் வெளியில் உயிரற்று இருப்பதனால் உறைதல் நடைபெறுகின்றது.

03. தாவர இலைகளில் காணப்படும் சில இசைவாக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன.
 அ. அவிழ்ந்த இலை வாய்கள் இருத்தல்
 ஆ. மிகவும் மெல்லிய புறத்தோல் இருத்தல்
 இ. மேற்றோல் மயிர்கள் இருத்தல்.

இவற்றில் ஆவியுயிர்ப்பு வீதத்தை குறைப்பதற்கு உதவும் இசைவாக்கங்கள் யாவை?
 1. அ, ஆ ஆகியன மாத்திரம் 2. அ, இ ஆகியன மாத்திரம்
 3. ஆ, இ ஆகியன மாத்திரம 4. அ, ஆ, இ ஆகிய எல்லாம்

04. ஒளியின் மூன்று அடிப்படை நிறங்களாக கருதப்படுவன யாவை?
 1. சிவப்பு, மஞ்சள், பச்சை ஆகியன 2. சிவப்பு, பச்சை, நீலம் ஆகியன
 3. சிவப்பு, மஞ்சள், நீலம் ஆகியன 4. நீலம், பச்சை, மஞ்சள் ஆகியன

05. நீர், காற்று, விலங்குகள் ஆகியவற்றின் மூலம் பரம்பலடையும் வித்துக்கள் முறையே
 1. வாதுமை, முருங்கை, மரமுந்திரிகை 2. அல்லி, ஆடையொட்டி, பருத்தி
 3. தென்னை, இறப்பர், மா மரம் 4. எருக்கலை, ஓகிட், ஒட்டுப்புல்

06. ஒளித்தொகுப்புப் பற்றி கற்கும் மாணவன் ஆய்வுகூடப் பரிசோதனையைக் கொண்டு ஒளித்தொகுப்பிற்கு தேவையான எக்காரணி செய்து காட்டல் கடினமாக இருக்கும்?
 1. ஒளி 2. நீர் 3. பச்சையம் 4. காபனீரொட்சைட்டு

07. ஒரு குறித்த மூலகக் கூட்டத்திற்குப் பொதுவான சில இயல்புகள் கீழே காணப்படுகின்றன.
- அறை வெப்பநிலையில் திண்ம நிலையில் இருக்கின்றது.
- வெப்பத்தை நன்றாக கடத்துகிறது
- மூல ஒட்சைட்டுகளை உண்டாக்குகிறது

இம்மூலகக் கூட்டம் 1. உலோகங்களாகும் 2. அல்லுலோகங்களாகும்
 3. உலோக அல்லலோகங்களாகும் 4. விழுமிய வாயுக்களாகும்

08. ஒரு சோடியங் குளோரைட்டு கரைசலின் அமைப்பு $58.5g\ dm^{-3}$ ஆகும். அக்கரைசலின் அமைப்பை வேறு விதத்தில் சரியாக எடுத்துரைக்கும் விடை யாது? ($NA = 23, Cl = 35.5$)
 1. $58.5\ mol\ dm^{-3}$ 2. $5.85\ mol\ dm^{-3}$ 3. $1\ mol\ dm^{-3}$ 4. $0.1\ mol\ dm^{-3}$

## பாடம் : வரலாறு

01. கி.பி 1505 இலிருந்து 1796 வரை போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் இலங்கையின் கரையோரத்தை ஆட்சி செய்த காலத்தில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி சென்றுள்ளார்.

i. A - இலங்கைக்கு கி.பி 1505ல் லோரன்சோ த அல்மேடா வரும் போது கண்டியின் ஆட்சியாளன்
 B – 1795ல் இலங்கைக்கு வருகை தந்த றொபட் அன்றூஸ் என்ற ஆங்கிலேயரை சந்தித்தவன்
 C - இலங்கையை ஆண்ட இறுதி அரசனாக இருத்தல்
 மேலே ABC என்ற ஒழுங்கில் தரப்பட்டுள்ளவற்றிற்கு பொருத்தமான கண்டி ஆட்சியாளர்களை எழுதுக.

ii. பின்வரும் படையெடுப்பை மேற்கொண்ட போர்த்துக்கேய தளபதிகளை A,B,C,D ஒழுங்கில் தருக
 A – தந்துரே B – பலன
 C – ரந்தெனிவெல D- கண்ணொறுவ

iii. இலங்கையில் கண்டியை ஆண்ட நாயக்க மன்னர்களுள் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் சமய ரீதியாக முக்கியத்துவம் பெறும் விதத்தை இரு விடயங்கள் ஊடாக விளக்குக

iv. இலங்கையில் போர்த்துக்கேயர் ஆட்சியினால் ஏற்பட்ட விளைவுகளை மூன்று விடயங்கள் கொண்டு உதாரணத்துடன் விபரிக்குக.

02. 2ம் உலகமகாயுத்தத்தில் பேரழிவினை சந்தித்த ஜப்பான் இன்று துரித வளர்ச்சி கண்டுள்ளது.

I. ஜப்பானின் கைத்தொழில் வளர்ச்சிக் கட்டங்கள் மூன்றையும் தருக.

ii. 1947ம் ஆண்டு புதிய யாப்பின் படி பேரரசின் பெயரளவு அதிகாரங்கள் இரண்டை தருக.

iii. 1950ன் பின் ஜப்பானின் கைத்தொழில் ரீதியான ஏற்பட்டுள்ள முன்னேற்றத்துக்கு பங்களித்த காரணிகள் இரண்டை சுருக்கமாக விளக்குக.

iv. 1945ம் ஆண்டின் பின்னர் ஜப்பானில் பல துறைகள் முன்னேற்றம் கண்டுள்ளது என்பதை கைத்தொழில் துறையின் ஊடாக விளக்குக.

03. I. உலக சமாதானத்தை நிலைநாட்ட உருவாக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் காரண கர்த்தாக்களை பின்வரும் A,B,C ஒழுங்கில் தருக.
 A – ஐக்கிய அமெரிக்கா B – பிரித்தானியா
 C – ரஷ்யா

ii. ஐக்கிய நாடுகள் சபையின் பிரதான அங்கங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

iii. அணிசேரா நாடுகளின் உருவாக்கத்திற்கு ஜவகர்லால் நேரு முன்வைத்த பஞ்சசீலக் கொள்கையில் இரண்டை விளக்குக

iv. ரஷ்யாவில் சுதந்திர பொருளாதார கொள்கை அறிமுகம் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டமைக்கு பங்களித்த காரணிகள் மூன்றை சுருக்கமாக விவரிக்குக.

04. கீழே A,B,C,D ஆகியவற்றின் கீழ் தரப்பட்டுள்ள வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புடையவர்கள் முறையே அடைப்புக்குள் இருந்து தெரிந்து எழுதுக.
 A – கி.பி இரண்டாம் நூற்றாண்டில் இலங்கைக்கு தப்ரபேன் என பெயரிட்ட கிரேக்கர்
 B – கி.பி 1344ல் இலங்கை வந்த அரேபிய தேச சஞ்சாரி
 C – கலிங்கமகானிடம் இருந்து நாட்டை மீட்டல்
 D - இலங்கையிலிருந்து போர்த்துக்கேயரை விரட்ட ஒல்லாந்தரை அழைத்தல்

(மெகஸ்தனிஸ் , தொலமி , மார்க்கோ போலோ , இப்னுபதூதா , 1ம் பராக்கிரமபாகு, 2ம் பராக்கிரமபாகு, 2ம் இராஜசிங்கன், இராஜாதி இராஜசிங்கன்)

ஆசிரியர் : அகிலன்

## Grammar

Ex 01: Write questions with how long and when.

1. It's raining.
 (how long?) <u>How long has it been raining?</u>
 (when?) <u>When did it start raining?</u>

2. Kate is learning Italian.
 (how long / learn?) ........................................
 (When / start / learn?) ........................................

3. I know Martin.
 (how long / know?) ........................................
 (When / first / meet) ........................................

4. Bob and Alice are married.
 (how long?) ........................................
 (When?) ........................................

Ex 02: What has happened in these situations?

1. Jack had a beard. Now he hasn't got a beard. .
 <u>He has shaved off his beard.</u>
2. Linda was here five minutes ago. Now she's in bed.
 She ........................................
3. The temperature was 25 degrees. Now it is only 17.
 The temperature ........................................
4. The light was off. Now it is on. Somebody
 ........................................
5. The tree was only three metres high. Now it is four.
 ........................................
6. The plane was on the runway a few minutes ago. Now it is in the air. ........................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பாறை.....

கிழக்கின் முதலமைச்சர் பதவியை முஸ்லிம் காங்கிரஸ்' இடம் கையளிக்க அரசு தயாராகி வருகின்றது. ஆனால் அம்பாறையை தனியான கரையோர மாவட்டமாகப் பிரகடனப்படுத்த அரசு தயாராகவில்லை. அவ்வாறான நிலையில் அப்பதவியை ஒரு போதும் ஏற்கத் தயாரில்லை என ஜமீல் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணசபைக்கான தேர்தல்கள் நிறைவுற்ற பின்னர் யாருடன் கூட்டு வைத்துக்கொள்வது என்ற பேச்சுக்களின் பேது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைய வேண்டுமாயின் நிறைவேற்றபபடவேண்டிய பல்வேறு நிபந்தனைகளை காங்கிரஸ் முன்வைத்தது. அவற்றுள் அம்பாறையில் தனியானதொரு கரையோர மாவட்டம் உருவாக்கப்படவேண்டும் என்பதே எமது மிக முக்கிய கோரிக்கையாக இருந்தது. எமது நிபந்தனைகள் அனைத்தையும் அன்று ஏற்றுக்கொண்டு கூட்டாட்சியைக் கிழக்கில் உருவாக்கிய அரசு தற்போது வரை எந்தவிதமான நிபந்தனைகளையும் பூர்த்திசெய்யவில்லை.

கரையோர மாவட்டம் என்பது முஸ்லிம்களுக்கான பிரச்சனையைத் தீர்த்துக்கொள்வதற்கான நிரந்தரத் தீர்வாக அமையும் என அவர் தெரிவித்துள்ளார்.

## மக்கள் மடக்கி.....

சுமார் 27 வயது மதிக்கத்தக்க இக் கொள்ளையன் காத்தான்குடியைச் சேர்ந்தவன் எனவும் அனுராதபுரம் சந்தியில் அண்மையில் திறக்கப்பட்ட உணவுக்கடையில் வேலை பார்த்து வருபவன் என்றும் மடக்கிப் பிடித்த மக்களுக்கு அளித்த வாக்குமூலத்தில் அவன் தெரிவித்துள்ளான்.

கடந்த மாதமளவில் கொள்ளையடிக்க முனைந்த ஒருவன் தப்பியோடியுள்ளதாகத் தெரிவித்த மக்கள் கள்வன் ஊருக்குள் நுழையும் வழியைத் தெரிந்துகொண்ட தினத்தில் அவனை மடக்கிப் பிடிக்கத் தயாராக இருந்ததாக மலைமுரசிற்குத் தெரிவித்தனர். களவு எடுக்கவரும் கள்வன் முதலில் வீடுகளுக்கு கல் எறிந்துவிட்டு நடமாட்டங்கள் எதுவுமில்லாதிருப்பதை உறுதிப்படுத்திக்கொண்டே வீடுகளுக்குள் நுழைவதை வழக்கமாகக் கொண்டிருந்ததாகவும் தெரிவித்தனர். அன்றைய தினத்தில் மதிலேறிப்பாய்ந்த கள்வனைத் துரத்திச் சென்று அவனைப்பிடிக்க முயன்ற இளைஞனும் காயமடைந்துள்ளார். எனினும் அவனைப் பிடித்து கட்டியதை அடுத்து தான் காத்தான்குடியைச் சேர்ந்தவன் எனத் தெரிவித்த கள்வன் அனுராதபுரம் சந்தியில் அண்மையில் திறக்கப்பட்டுள்ள இரவு பகல் உணவுக் கடையில் பகலில் பணியாற்றுவதாகவும் அக்கடையின் உரிமையாளரின் கட்டளைக்கு அமைய இரவில் களவெடுக்க வருவதாகவும் மக்களிடம் தெரிவித்துள்ளான். தன்னுடன் களவிற்கு வரும் மற்றையவர் பெயர் நஜீப் என அவன் தெரிவித்துள்ளான். இரவு 11.30 மணியளவில் பிடிக்கப்பட்ட இக் கள்வனை குச்சவெளிக் காவல்துறையினர் இரவு 12.00 மணியளவில் அழைத்துச் சென்றுள்ளனர். அந் நேரத்தில் அங்கு வருகைதந்திருந்த குறித்த உணவுக்கடையின் உரிமையாளர் என சந்தேகிக்கப்படும் ஒருவர் கள்வனுக்கு வடை சாப்பிடக் கொடுத்ததாகவும் காவல்துறையில் இருந்து அவனை வெளியே விடுவிப்பதாகக் கூறியதாகவும் தெரிவித்தனர். ஆனால் 15ம் திகதி கிராம மக்களுக்குக் கிடைத்த தகவல்களில் குறித்த கள்வன் தான் களவெடுக்க வரவில்லையென்றும் தவறான நடவடிக்கையொன்றுக்கு வந்ததாகத் தெரிவித்ததாகவும் தகவல் பரவியுள்ளது. காவல்துறை மேற்படிக் கள்வனின் கைத்தொலைபேசியைக் கைப்பற்றியுள்ள போதும் அத் தொலைபேசியில் இருந்து யாருடன் அவர் தொடர்புகளைப் பேணினார் என்பதை ஏன் கண்டுகொள்ள முயலவில்லை என்ற சந்தேகமும் எழுந்துள்ளது. அச் சந்தேகத்தையடுத்து மக்களைச் சந்தித்த பங்குத் தந்தை வண.மதுராங்கன் குரூஸ் மற்றும் மலைமுரசின் ஆசிரியர் ஸ்ரீ ஆகியோரின் முயற்சியால் விடயம் மாவட்டக் காவல்துறை அத்தியட்சகர் மார்க் அவர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்விடயத்தை உரியமுறையில் விசாரணை செய்து நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக காவல்துறை அத்தியட்சகர் உறுதியளித்துள்ளார். அதேவேளை பிரசைகள் குழுத் தலைவரான அன்புவழிபுரம் பிள்ளையார் ஆலய குரு வண. சுப்ரமணிய சர்மா அவர்களும் இவ்விடயத்தை குச்சவெளி காவல்துறைப் பொறுப்பாளருடன் கலந்தாலோசித்து அவர்களிடம் இருந்தும் உரிய நடவடிக்கைகள் எடுக்க்கப்படும் என்ற உறுதிமொழியைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

## மு என்றால் ....

மு.விக்னேஸ்வரன் என்று விளித்திருந்தார். அத்துடன் மு.விக்னேஸ்வரன் என்றால் முட்டாள் விக்னேஸ்வரன் என்று அர்த்தமல்ல முதலமைச்சர் விக்னேஸ்வரன் என்பதே என்றும் வியாக்கியானம் செய்திருந்தார்.

இவ்வியாக்கியானங்களை அடுத்து சி.வி.விக்னேஸ்வரன் தனது கருத்தைப் பின்வருமாறு பதிவு செய்திருந்தார். "அமைச்சர் ஒருவர் கருடா சௌக்கியமா என்று கேட்கத் தலைப்பட்டுள்ளார். தான் யார்? எங்கு இருக்க வேண்டியவர் என்பதை மறந்து பேசியுள்ளார். மு.விக்னேஸ்வரனை ஜனாதிபதியின் நிகழ்வுகளுக்கு அழைத்தோம். ஆனால் அவர் வரவில்லை. மு.விக்னேஸ்வரன் என்றால் முட்டாள் விக்னேஸ்வரன் என்று நான் கூறவில்லை. முதலமைச்சர் விக்னேஸ்வரன் என்றே கூற வந்தேன் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானாந்தா கிளிநொச்சியில் கிண்டல் அடித்துள்ளார். நண்பர் டக்ளஸ் அவர்கள் கெட்டிக்காரர் என்பதை நான் ஒத்துக்கொள்கின்றேன். தென் இந்தியாவில் பாதுகாப்பாக ஒரு தனியிடத்தில் இருத்தப்பட வேண்டியவர். தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் எல்லாவற்றையும் முட்டாள்கள் ஆக்கி அவற்றில் அங்கம் வகித்து தனக்கெதிராக தென்னிந்தியாவில் விடுக்கப்பட்ட பகிரங்க பிடிவிராந்தில் இருந்து இது வரையில் அவர் தப்பி இருந்து வருவது அவரின் கெட்டித் தனத்தைக் காட்டுகிறது. அதற்காக அவர் எவரை வேண்டுமானாலும் அடி வருடி, அவர்களுக்கு அடிமையாகச் செயற்பட்டு தனது காரியத்தினைச் சாதித்து வருவதையும் நான் அறிவேன். ஆனால் சில நேரங்களில் தம்மைக் கெட்டிக்காரர்களாக அடையாளம் காண்பவர்கள் தாமே முட்டாள்கள் ஆகின்றார்கள். அப்படி ஏதாவது நண்பர் டக்ளஸ்க்கு நடந்தால் இந்தியாவிற்குக் கொண்டு செல்லப்பட்டால் நான் அவரை முட்டாள் என்று அழைக்கமாட்டேன். முதலமைச்சர் என்றும் அழைக்கமாட்டேன். முற்றிலும் முடியாத பரிதாபத்துக்குரிய முன்னாள் அமைச்சர் என்று தான் குறிப்பிடுவேன். சிலரை எக்காலமும் ஏமாற்றலாம். பலரை ஒரு சில தருணங்களில் ஏமாற்றலாம். ஆனால் எல்லோரையும் எல்லாக் கால்மும் ஏமாற்ற முடியாது என்பதை நண்பர் அறிந்து வைத்திருத்தல் நல்லது"

## மட்டக்களப்பை.....

தேர்தல் நடைபெறவுள்ளது. இந்த தேர்தலில் மாநகர மேயர் பதவிக்காக நடைபெறும் தேர்தலில் போட்டியிடும் போனி ச்ரோம்பிக் (Bonni Crombie) இத்தேர்தலில் தான் வெற்றி பெற்றால் இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பை தான் தத்தெடுக்கப்போவதாக வாக்குறுதியளித்துள்ளார். மிச்சிச்சுகா நகரில் இலங்கைத் தமிழர்கள் பலர் செறிந்து வாழ்கின்றனர். இந்த நிலையில் அந்த பகுதியில் மேற்கொண்ட தேர்தல் பிரச்சாரங்களின் போதே மட்டக்களப்பைத் தத்தெடுப்பது என்ற வாக்குறுதி அவரால் வழங்கப்பட்டது.

## மேலதிக ஆசிரியர்களை.....

கடந்த 11ம் திகதி மாலை 5 மணியளவில் சேனையூர் மத்திய கல்லூரி அதிபர். இரத்தினசிங்கம் தலைமையில் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் பழைய மாணவர்கள் எனப் பதினைந்து பேரைக் கொண்ட குழுவினர் கிழக்கு மாகாண முதலமைச்சரைச் சந்தித்தது இவ்விடயத்தைப் பேசியுள்ளனர். கிழக்கு மாகாண முதலமைச்சரின் தகப்பனார் அமரர் ஏ.எல். அப்துல் மஜீத் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த போது தொடங்கி வைத்த இன நல்லுறவை மேலம் தொடரவேண்டும் என்ற கோரிக்கையும் இதன் போது முன்மொழியப்பட்டுள்ளதுடன் விடயங்களை அடக்கிய கோரிக்கைக் கடிதமொன்றும் முதலமைச்சரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் நுண்கலை ஆசிரியர்கள் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் மேலதிக ஆளணியினராக இருக்கின்ற போதும் கிராமியப் பாடசாலைகளில் நுண்கலைக்கான ஆசிரிய வெற்றிடங்கள் நிலவுவது குறிப்பிடத்தக்கது.

## மண்ணை வாரிக் ....

தெரிவித்த அவர் சைவத் தமிழ் மரபில் வறுத்தபொரி, நெல், அரிசி ஆகியவற்றை மஞ்சளுடன் கலந்து மரண ஊர்வலத்தில் விதைப்பதே தமிழரின் கலாசாரம் எனத் தெரிவித்தார்.

இவ்வாறு தூவப்படுபவற்றை நிலத்திலுள்ள உயிரினங்களும் பறவைகளும் உண்டு இறந்த ஆத்மாவுக்கு நிம்மதி கிடைக்கப் போற்றும் என்ற ஐதீகமே தமிழரின் ஐதீகம் எனத் தெரிவித்த அவர் தெருக்களில் மண்ணைக்கொட்டி மக்களின் கண்களில் மண்ணை வீழ்த்தி இறந்த ஆத்மாவை மேலும் வேதனைக்குரியதாக்கும் செய்பாடுகள் கண்டிக்கத்தக்கன என்றும் தெரிவித்தார்.

மண்ணைவாரிக்கொட்டி கலாசாரத்தை அழிக்காதீர்கள் எனத் தெரிவித்த அவர் இவ்விடயத்தை திருகோணமலை நகரசபையின் கவனத்திற்குக் கொண்டு வந்ததாகவும் அனைத்துத் தமிழ் நகரசபை அங்கத்தவர்களுக்கும் தனது கோரிக்கையை கடிதம் மூலம் பல மாதங்களுக்கு முன்னரே அறிவித்திருந்ததாகவும் தெரிவித்தார். எனினும் நகரசபை இதனைத் தடைசெய்யும் முயற்சிகளில் ஈடுபடாமலிருப்பது ஏன் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

அண்மையில் திருகோணமலை நகரில் நடைபெற்ற ஊடகவியலாளர் ஒருவரின் தந்தையின் இறுதி ஊர்வலத்தில் நிலத்தில் நீர் ஊற்றிச் சென்றமையைப் பலர் பாராட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்கை இயற்கை .....

ஐரோப்பிய ஒன்றியத்தினதும், நோர்வே அரசினதும் நிதிஉதவியுடன் கிழக்கின் மூன்று மாவட்டங்களிலும் இத்திட்டம் முன்னெடுக்கப்படவிருப்பதாக நெசனல் ஜியோகிராபிக் மப் பிரிவு அறிவித்துள்ளது.

இம்மாவட்டங்களில் வாழும் மக்களின் உதவியுடன் வெளித்தெரியாது மறைந்திருக்கும் கலாசார, வரலாற்று எச்சங்களை வெளிக்கொணர்ந்து அவற்றைப் பற்றிய விபரங்களை உலகலாவிய ரீதியில் வெளிப்படுத்தி உல்லாசப் பயணிகளின் வருகையை அதிகரிக்கும் முயற்சியாகவே இது கருதப்படுகின்றது.

## தடுக்கி விழுந்தாரா?

மஹிந்த ராஜபக்சவிடம் கோரியுள்ளது.

கடந்த செப்டம்பர் மாதம் 30ம் திகதி தம்மை வீட்டுக்கு அழைத்த பிள்ளையான் மற்றும் அவரது ஆதரவாளர்கள் தாக்கி வடிகான் ஒன்றில் தள்ளிவிட்டதாக நிசர்டீன் தெரிவித்துள்ளார்.

திட்டமிட்டமிட்ட முறையில் தம்மை வீட்டுக்கு அழைத்து அருகில் நிர்மானிக்கப்பட்டு கொண்டிருக்கும் வடிகாண் ஒன்றை பார்வையிடச் செய்வது போன்று அழைத்துச் சென்று தள்ளிவிட்டதாக நிசர்டீன் முறைப்பாடு செய்துள்ளார்.

உரிய விசாரணை நடத்தப்படாவிட்டால் பிள்ளையான் மற்றும் அவரது சகாக்கள் பங்கேற்கும் எந்தவொரு நிகழ்வுகளிலும் பங்கேற்கப் போவதில்லை எனவும் தொழிற்சங்க நடவடிக்கை எடுக்க நேரிடும் எனவும் பொறியியலாளர் தொழிற்சங்க ஒன்றியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பொறியியலாளர் நிசர்டீன் காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

## கிழக்கு மாகாண .....

எதிர்வரும் 19ம் திகதி மூதூர் இந்துக் குருமார் சங்கத் தலைவர் சிவஸ்ரீ பாஸ்கரன் குருக்கள் அவர்களால் கிளிவெட்டி இடைத்தங்கல் முகாமில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வு அன்று காலை 9.30 மணிக்கு கிளிவெட்டி இடைத்தங்கல் முகாமின் முன்பள்ளிப் பாடசாலையில் நடைபெறும் என இந்துக்குருமார் சங்கச் செயலாளர் சிவஸ்ரீ சு. வேலுப்பிள்ளை அர்ச்சகர் தெரிவித்தார். அன்றைய தினம் கிழக்கு மாகாண இந்து ஆலயங்களின் அறங்காவலர் ஒன்றியப் பிரதிநிதிகள் கற்றல் உபகரணங்கள் உட்பட ஏனைய தேவையானவற்றையும் வழங்கிவைப்பர் எனவும் அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பெருநாள் தொழுகை திடலில் செய்ய வேண்டுமா?

பள்ளியில் இடம் போதாமையினால்தான் நபியவர்கள் திடலில் தொழுதார்கள் என்று சிலர் கூறுகிறார்க்ள்.
இது தனது அறியாமையின் காரணமாக கூறுகிறார்கள்.
நபியவர்கள் காலத்தில் ஆண்களும், பெண்களும், ஒரே நேரத்தில் தான் ஐவேளை தொழுகைகளையும் ஜமாத்துடன் தொழுது வந்தனர். அப்போது மட்டும் பள்ளி தாராளமாக இடம் இருந்தது. ஆனால் பெருநாள் தொழுகைக்கு மட்டும் இடம் போதாமல் போய் விட்டதா? எனவே நாமாக தவறான காரணத்தைக் கூறி சரியான சுன்னாவை புறக்கணித்த குற்றத்திற்கு ஆளாகிவிடக் கூடாது. நபியவர்கள் காட்டிய வழியில் நமது பெருநாள் தொழுகையை நடைமுறைப் படுத்தி இறை பொருத்தத்தை பெறுவோமாக.!

முற்றும் -- --

## ஹஜ், உம்றாவில் தொங்கோட்டம் ஓடுதல் (அல்குர்ஆன் விளக்கம்)



'நிச்சயமாக 'ஸ.்.பா' உம் 'மர்வா' உம் அல்லாஹ்வின் அடையாளச் சின்னங்களில் உள்ளவையாகும். எவர் இவ்வீட்டை ஹஜ் அல்லது உம்ரா செய்கிறாரோ அவர் மீது அவ் விரண்டுக்குமிடையில் சுற்றி வருவது குற்றமில்லை. எவர் மேலதி கமாக நன்மை செய்கின்றாரோ நிச்சயமாக அல்லாஹ் நன்றியுடையவனும், நன்கறிந்தவனுமாவான்.' (2:158)

க.்.பாவுக்கு அருகில் ஸ.்.பா-மர்வா என்று இரண்டு மலைகள் உள்ளன. ஹஜ் அல்லது உம்றாச் செய்பவர்கள் இந்த மலை களுக்கிடையே ஏழு முறை 'ஸஈ' செய்வது (தொங்கோட்டம் ஓடுவது) கட்டாயமானதாகும். ஸ.்.பாவில் ஆரம்பித்து மர்வாவை அடைவது ஒரு ஓட்டமாகவும் பின்னர் மர்வாவில் இருந்து ஸ.்.பாவுக்கு வருவது இரண்டாம் ஓட்டமாகவும் கணிக்கப்படும். இந்த வசனத்தை மேலோட்டமாகப் பார்க்கும் போது ஹஜ், உம்றா செய்பவர் அவ்விரண்டு மலைகளையும் சுற்றுவது குற்றமில்லை என்றுதான் கூறுகின்றது. இதை வைத்துச் சுற்றுவது குற்றமில்லை, சுற்றாமல் விடுவதே நல்லது என்று கூட சிலர் நினைக்கலாம்.

தொடரும் -- --




## வாரமொரு ஜோக்

- அருணன் -

கிராமத்திலிருக்கும் தனது அண்ணாவை காண்பதற்காக மிக நீண்ட நாட்களுக்குப்பின் தம்பி வந்திருந்தான். அவனை அன்புடன் வரவேற்ற அண்ணி உபசரித்தபின் உங்கள் அண்ணா வயலிலிருந்து இன்னும் வீடு திரும்பவில்லை. நான் மதிய உணவு தயார் செய்கின்றேன், அதுவரை நீங்கள் சற்று ஓய்வெடுங்கள் என அன்புடன் வேண்டினாள். தம்பியும் அவ்வாறே அங்கிருந்த கட்டிலில் தூங்க தொடங்கும் போது அதன் கீழே ஏதோ சரசரவென சத்தம் கேட்கவே அது என்னவென்று அண்ணியாரிடம் வினவினான். அது கறி சமைப்பதற்காக உங்கள் அண்ணா பிடித்துவந்த உடும்பு என பதிலளித்தாள் அண்ணி. அப்படியா காது அரிக்கிறது குடைய அந்த உடும்பிலிருந்து ஒரு இறகு பிடுங்கி கொடங்களேன் என கேட்டான்.
தனது கொழுந்தனாரின் அபார அறிவை எண்ணி மனதுக்குள் நகைத்த அண்ணி உடும்புக்கெல்லாம் இறகு கிடையாது என கூற தம்பி அசடு வழிந்தான். அண்ணா வயலிலிருந்து வீடு திரும்பினார். தனது தம்பியை கண்டு மகிழ்ந்தார். மதிய உணவாக உடும்பு இறைச்சியுடன் அண்ணி பரிமாறிய உணவை உண்டபின் அன்று மாலை தம்பியும் மகிழ்வுடன் ஊர் திரும்பினான்.
இரவு தூங்கபோகும் போது மனைவி தன் கணவரை பார்த்து என்ன உங்கள் தம்பி இவ்வளவு அசடாக இருக்கிறானே, நீங்கள் கறி சமைப்பதற்காக பிடித்து வைத்திருந்த உடும்பிலிருந்து இறகு பிடுங்கி தருமாறு கேட்டார். ஆள் வளர்ந்த அளவுக்கு அறிவு வளர வேண்டமா என கேட்டாள். அப்படியா என கேட்டுவிட்டு பெரிதாக சிரித்த அண்ணன் அறிவு கெட்டவன் அதை ஆமை என நினைத்து கேட்டிருக்கிறான் போலிக்கிறது என்றார். இதை கேட்ட மனைவி தன் தலையை சுவரில் அடிக்காத குறை ஒன்றுதான் பாக்கி.

**ஹா! ஹா! ஹா!**

பிச்சைக்காரன்: ஐயா பிச்சை போடுங்கய்யா.
வீட்டுக்காரர்: வந்திருவீங்களே. திருவோட எடுத்துக்கிட்டு!!!. காலம் மாறினாலும் நீங்க மாற மாட்டீங்களா?
பிச்சைக்காரன்: சரி. இந்தாங்கய்யா! என் நம்பர்.
வீட்டுக்காரர்: என்ன? என்ன நம்பர் இது?



## பாத வறட்சியை போக்க

**ஆலிவ் ஒயில்** : ஆலிவ் ஆயிலில் அழகுக்கான நிறைய நன்மைகள் அடங்கியுள்ளன. அதில் ஒருவகையான நன்மைகள் தான் குதிகால் வெடிப்பு மற்றும் பாத வறட்சி. அதற்கு ஆலிவ் ஆயிலை வெதுவெதுப்பாக சூடேற்றி, அதில் சிறிது பாதாம் எண்ணெய் சேர்த்து, 15 நிமிடம் மசாஜ் செய்து, பின் குளிர்ந்த நீரில் கழுவினால், பாதங்கள் மென்மையாகவும், வறட்சியின்றி அழகாகவும் இருக்கும்.

**உப்பு** : வீட்டில் இருக்கும் பொருட்களில் ஸ்கரப் செய்வதற்கு சிறந்ததாக இருப்பது உப்பு. அதிலும் பாதங்களை பராமரிப்பதற்கும் உப்பு ஒரு சிறப்பான பொருள். எனவே வெதுவெதுப்பான நீரில் உப்பை சேர்த்து, கால்களை அதில் 10 நிமிடம் ஊற வைத்து, பின் மெருகேற்ற உதவும் கல்லை வைத்து பாதங்களை தேய்த்தால், பாதங்களில் உள்ள இறந்த செல்கள் நீங்கி, வெடிப்புகள் ஏற்படாமல் பொலிவோடு இருக்கும்.

**தேன்** : இது ஒரு சிறந்த மாய்ச்சுரைசர்கள். ஆகவே வெதுவெதுப்பான நீரில் கால்களை ஊற வைத்து, பின் மெருகேற்ற உதவும் கல்லை கொண்டு, சிறிது நேரம் தேய்த்தால், பாதங்களில் உள்ள இறந்த செல்கள் நீங்கும். பின் தேனில் சிறிது பாலை சேர்த்து, கலந்து, கால் மற்றும் பாதங்களில் தடவி மசாஜ் செய்து கழுவ வேண்டும். இதனை தினமும் செய்து வந்தால், ஒரு நல்ல பலனை பெறலாம்.



**திராட்சை விதை எண்ணெய்** : இவை குதிகால் வெடிப்பு மற்றும் கால்களில் ஏற்படும் வறட்சிக்கு சிறந்த தீர் வைத் தரக்கூடியது. அதற்கு கால்களில் திராட்சை விதை எண்ணெ ய் மற்றும் ஆலிவ் ஆயிலை தடவி சிறிது நேரம் மசாஜ் செய்து, பின் வெது வெதுப்பான நீரில் 15 நிமிடம் ஊற வைக்க வேண்டும். இதனை குதிகால் வெடிப்பு நீங்கும் வரை செய்ய வேண்டும்.

**வாஸ்லின்** : சருமத்திற்கு ஒரு சிறந்த மாய்ச்சுரைசர் என்றால் அது வாஸ்லின் தான். குறிப்பாக கால் மற்றும் பாதங்களில் உள்ள வறட்சிகளை நீக்குவதில் சிறந்தது. எனவே இதனை வைத்து தினமும் சிறிது நேரம் மசாஜ் செய்ய, நல்ல பலன் கிடைக்கும்.

## மீன் பிரியாணி

### தேவையான பொருட்கள்

மீன் - 1/4 கிலோ, அரிசி - 2 சுண்டு, வெங்காயம் - 150 கிராம், தக்காளி - 150 கிராம், இஞ்சி, பூண்டு விழுது - 2 தே.கரண்டி, புதினா, கொத்தமல்லி இலை - 1/4 கட்டு, மிளகாய்த்தூள் - 1 தே.க, தனித்தூள் - 1 தே.க, மஞ்சள்தூள் - 1/4 தே.க, தயிர் - 1 கப், உப்பு - தேவையான அளவு, எண்ணெய் - 1/2 குழிக் கரண்டி



### செய்முறை

மீனை சுத்தம் செய்து துண்டுகளாக்கவும். பின் வெங்காயம், தக்காளியை பொடியாக நீள வாக்கில் நறுக்கவும். மிளகாயைக் கீறிக்கொள்ளவும். ஒரு அகலமான பாத்திரம் அல்லது குக்கரில் எண்ணை ஊற்றி காய்ந்ததும் பட்டை, லவங்கம் சேர்த்து தாளிக்கவும். வெங்காயம், இஞ்சி, பூண்டு விழுது, தக்காளி, புதினா, கொத்தமல்லி இலை இவற்றை ஒன்றன் பின் ஒன்றாகச் சேர்த்து வதக்கவும். தயிர் மற்றும் போதுமான அளவு உப்பு சேர்த்து மீனை வதக்கவும். தொடர்ந்து மிளகாய்த்தூள், தனியாத்தூள், மஞ்சள் தூள் சேர்க்கவும். பின் பாசுமதி அரிசி ஒன்றரை பங்கும், சாதா அரிசி 2 பங்கும் சேர்த்து வேக வைக்கவும். பாத்திரத்தில் ஆவி போகாமல் மூடி வைத்து சிறிது நேரத்தில் இறக்கவும். குக்கரில் ஒரு விசில் வந்ததும், குறைந்த தீயில் வைத்திருந்து அடுப்பை அணைத்து விடவும்.




## மாதவிடாய் பிரச்சினையா?


தினசரி நாம் உண்ணும் உணவில் முறையான உணவுப் பொருட்களை சேர்த்துக் கொள்வதன் மூலம் ஆரோக்கியமான வாழ்வை மேற்கொள்ளலாம்.



- மாதவிடாய் பிரச்சனை நீங்க: அத்திப்பழம் தேனில் ஊற வைத்து சாப்பிட மாதவிடாய் பிரச்சனை வயிற்று வலி குறையும். ஊமத்தன் பூவை பிழிந்து சாறு எடுத்து இரு துளிகள் காதில் விட்டால் காதுவலி குணமாகும்.
- பித்தம் குறைய: விளாம்பழம் கிடைக்கும் காலங்களில் தினசரி ஒன்று சாப்பிட பித்தம் குறையும். எலுமிச்சை சாற்றில் தேன் கலந்து குடிக்க வறட்டு இருமல் சரியாகும்.
- வாந்தி நிற்க: கறிவேப்பிலை மிளகு சேர்த்து நெய்யில் வறுத்து சுடுநீர் ஊற்றி அரைத்து குழந்தைகளை குளிப்பாட்டிய உடன் கொடுக்க மாந்தம் குறையும். பசி எடுக்கும். துளசி சாறு கல்கண்டு சேர்த்து சாப்பிட வாந்தி நிற்கும்.
- ஆரோக்கியமான் கல்லீரல்: தினமும் ஒரு கொய்யா பழம் சாப்பிட கல்லீரல் பலப்படும். இதில் வைட்டமின் சி மற்றும் இரும்பு சத்து அதிகமாக இருக்கிறது.
- இதயத்திற்கு பலம்: மாதுளை சாறுடன் தேன் கலந்து சாப்பிட ஈரல், இதயம் வலுவடையும். ஜீரண சக்தி அதிகரிக்கும்.
- தூக்கமின்மையை போக்க: நெல்லி முள்ளி, தான்றிக்காய், கடுக்காய் மூன்றையும் குடிநீரில் ஊற வைத்து காலையில் வாய் கொப்பளிக்க வாய் துர்நாற்றம் சரியாகும். வெங்காயத்தை நசுக்கி அதன் சாற்றை ஒரு சொட்டு கண்ணில் விட தூக்கம் வரும்.
- சிறுநீர் எரிச்சல் போக்க: அரச இலை கொழுந்தை மோருடன் அரைத்து மோருடன் கலந்து குடிப்பதன் மூலம் வயிற்று கடுப்பு குணமாகும். அன்னாசி பழச்சாறு சாப்பிட சிறுநீர் எரிச்சல் சரியாகும். கோவைப்பழம் தினசரி ஒன்று சாப்பிட சர்க்கரை நோய் கட்டுப்படும்.
- குடல் புண் நீங்க: வேப்பம் பூவை வறுத்து பொடி செய்து பருப்பு ரசத்துடன் கலந்து குடிப்பதன் மூலம் வயிற்று கடுப்பு நீங்கும். வேப்பம் கொழுந்தை பசுமோர் விட்டு அரைத்து தீப்பட்ட புண் மீது பூச புண் ஆறும். மணத்தக்காளி கீரை சாப்பிட்டால் குடல் புண் குணமாகும்.








**மேஷம்** : தாய்வழி சொந்தங்களின் உதவி கிடைக்கும். வேலையில் முன்னேற்றம் காண்பர்.
**ரிஷபம்** : இல்லறத் துணையின் கூடுதல் அன்பு, பாசம் மனதில் நெகிழ்ச்சி தரும்.
**மிதுனம்** : வீட்டில் மகிழ்ச்சி நிலவும். உடல் நலத்திற்கு ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம்.
**கடகம்** : தொழில், வியாபாரம் வளர தேவையான உதவி கிடைக்கும்.
**சிம்மம்** : பேசும் வார்த்தையின் வசீகரம் சில நன்மை பெற்றுத் தரும்.
**கன்னி** : புதியவரை நண்பராக ஏற்பதில் கவனம் வேண்டும்.
**துலாம்** : தொழில் வளர்ச்சிக்கு, நல்லோரின் உறுதுணை கிடைக்கும்.
**விருச்சிகம்** : மனதில் தெளிவு, செயலில் உற்சாகம் மிகுந்திருக்கும்.
**தனுசு** : இரக்க சிந்தனையுடன் எவருக்கும் உதவுவீர்கள். பணிகளில் முழு அளவிலான நன்மை கிடைக்கும்.
**மகரம்** : எதிரியின் கெடு செயல் உணர்ந்து அனுகூலம் தற்காத்துக் கொள்வீர்கள்.
**கும்பம்** : புத்திரர், நற்செயல்களால் பெருமை தேடித் தருவர். எதிர்மறையான வி'யங்கள் சமரச தீர்வுக்கு வரும்.
**மீனம்** : நண்பருக்கு இணையாக கருத்துக்களை பகிர்ந்து கொள்வர். எதிரி உங்களை குறைத்து மதிப்பிட இடம் தரக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 2014ம் ஆண்டிற்கான தேசிய மட்ட மெய்வல்லுனர் போட்டி

2014ம் ஆண்டிற்கான தேசிய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டியில் திருகோணமலை மாவட்டம் ஒரேயொரு பதக்கம் பெற்றுள்ளது.



கனகரெட்னம் உமாசுதன் அமிர்தகுலசிங்கம் கோகுலன்

தி/ இ.கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி மாணவன் செல்வன் அமிர்தகுலசிங்கம் கோகுலன் 21 வயதுக்குட்பட்ட பிரிவில் குண்டு போடுதல் நிகழ்ச்சியில் 11.63m தூரத்தினை எறிந்து வெள்ளிப் பதக்கத்தினை பெற்றதுடன், இந் நிகழ்ச்சிக்கு நிர்ணயிக்கப்பட்ட பெறுபேறான 11.20m ஐக் கடந்ததன் மூலம் இவ் ஆண்டிற்கான Colors award ஐயும் பெற்றுக்கொண்டார். 2013ம் ஆண்டு இதே நிகழ்சியில் வெண்கலப்பதக்கத்தினை பெற்றார் என்பதும், இவருக்கான பயிற்சிகளை கடந்த இரண்டு வருடகாலமாக விளையாட்டு பயிற்றுனர் கனகரெட்னம் உமாசுதன் வழங்கி வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இறுதிப் போட்டிக்கு தெரிவானது ஜமாலியா வி.க

-:.பஹ்மி யூஸூப் -

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 26வது தேசிய விளையாட்டு விழா - 2014 இன் உதைப்பந்தாட்டப் போட்டியில் திருகோணமலை மாவட்ட மட்டப் போட்டியில் பங்குபற்றி முதலாம் இடம் பெற்ற ஜமாலியா இளைஞர் விளையாட்டுக் கழகம் திருகோணமலை தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவி பணிப்பாளர் ஏ.ஹமீர் அவர்களின் வழிகாட்டலில் திருகோணமலை பிரதேச இளைஞர் சேவைகள் அதிகாரி ஏ.எல்.அலாவுதீன் பாபு அவர்களின் தலைமையில் சென்று ஒக்டோபர் மாதம் 11, 12ஆம் திகதி பதுளையில் நடைபெற்ற போட்டிகளில் குருநாகல் 02 : 00, வவுனியா 02 : 00, யாழ்ப்பாணம் 02 : 01, அம்பாறை 02 : 00 என்ற அடிப்படையில் வெற்றி பெற்று நவம்பர் மாதம் ஹம்பாந்தோட்டை பெலியத்த விளையாட்டு அரங்கில் ஜனாதிபதி தலைமையில் நடைபெறவுள்ள இறுதிப் போட்டியில் பங்கேற்பதற்கு தெரிவாகயுள்ளது.



## நான்காவதாண்டு நிறைவையொட்டி விளையாட்டுப் போட்டி



மட்டக்களப்பு, மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட பன்சேனை உதய ஒளி விளையாட்டுக் கழகம் தனது நான்காவது ஆண்டு நிறைவையொட்டி, பன்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த சனி மற்றும் ஞாயிறு (11, 12) ஆகிய இரு தினங்களும் நடைபெற்றன. இதில் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகிய முதலைக்குடா விநாயகர் விளையாட்டுக் கழகமும் முனைக்காடு இராமகிருஷ்ணா அணியும் மோதின. இப்போட்டியில் முதலைக்குடா விநாயகர் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

இறுதி நிகழ்வில் பன்சேனை பாரி வித்தியாலய அதிபர் வ.சுந்தரநாதன், முதலைக்குடா மகா வித்தியாலய அதிபர் சி.அகிலேஸ்வரன் மற்றும் கிராம அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

## அமரர்.சீதாராம் தயாகரன் நினைவுக் கிண்ணம்



அம்பாறை திருக்கோவில் பிரதேசத்தில், திருக்கோவில் சுப்பர்ஸ்டார் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட அமரர் சீதாராம் தயாகரன் நினைவுக் கிண்ணத்திற்கான உதைப்பந்து சுற்றுப்போட்டியில் திருக்கோவில் உதயசூரியன் விளையாட்டுக் கழகம் கிண்ணத்தை வென்று சம்பியனானது. இந்த உதைப்பந்து சுற்றுப்போட்டியின் இறுதி நாள் போட்டிகள் ஞாயிற்றுக்கிழமை(12) திருக்கோவில் சுப்பஸ்டார் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இவ் உதைப்பந்தாட்ட சுற்றுப்போட்டிகள் கடந்த இரண்டு வராங்களாக இடம்பெற்று வந்ததுடன் இதில் அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த 20 உதைப்பந்தாட்டக் கழகங்கள் பங்கு கொண்டிருந்தன. இச் சுற்றுப்போட்டியில் திருக்கோவில் சுப்பர்ஸ்டார் உதைப்பந்தாட்டக் கழகமும் திருக்கோவில் உதயசூரியன் விளையாட்டுக் கழகமும் இறுதி சுற்றுக்கு தெரிவாகியிருந்தது.

இறுதி போட்டி நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு உயர் தொழில் நுட்பக் கல்லூரி பணிப்பாளர் மற்றும் அரச அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மென் பந்து கிரிக்கட் சுற்றுப் போட்டி

களுவாஞ்சிகுடி, மிலேனியம் விளையாட்டுக் கழகத்தின் 7ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மாபெரும் மென்பந்து கிரிக்கட் சுற்றுப் போட்டியானது ஞாயிற்றுக்கிழமை(12) களுவாஞ்சிகுடி பொது விளையாட்டு மைதானத்தில் நடத்தப்பட்டது.

லீக் முறையிலான சுற்றுப்போட்டியில் 16 விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றின. இச்சுற்றுப் போட்டியின் வெற்றிக் கிண்ணத்தை தேற்றாத்தீவு உதயம் விளையாட்டுக் கழகம் சுவீகரித்ததுடன் இரண்டாம் கிண்ணத்தை குருமன்வெளி ரொபின் விளையாட்டுக் கழகம் பெற்றுகொண்டது. இந்நிகழ்வில் இப் பிரதேச வாழ்நாள் சாதனையாளர்கள் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது


## சர்வதேசச் செய்திகள்

### • ஆசிரிய மாணவ பேராட்டம்

ஹாங்ஹாங்கில், ஜனநாய சீர்திருத்தம் செய்ய கோரிக்கை விடுத்து மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஜனநாயக அமைப்புகள் கடந்த சில வாரங்கலாக போராட்டம் நடத்தி வருகின்றனர்.

### • மெக்டொனல்ஸில் அதிர்ச்சி சம்பவம்!

சுடச் சுட இருந்த கோப்பியை குடித்து முடிந்தவுடன் அதில் செத்த எலி ஒன்று கிடப்பதை கண்ட நபர் ஒருவர் அதிர்ச்சியடைந்து உடனடியாக கடை நிர்வாகத்திடம் முறைப்பாடு செய்த பரபரப்பான சம்பவமொன்று கனடாவில் உள்ள மெக்டொனல்ஸ் கோப்பி கடையில் இடம்பெற்றுள்ளது.



### • ஆடையில் இந்துமத படங்கள்

பெண்கள் அணியும் லெக்கிங்ஸ் (டநபபபைெள) என்ற உடையில் இந்து கடவுள்களின் படங்களை கொண்டு தயாரித்த அமேசான் நிறுவனத்திற்கு இந்துமத அமைப்புகளிடம் இருந்து கடும் கண்டனங்கள் எழுந்துள்ளன.

### • கட்டாய திருமணம்

கஜகஸ்தானின் அக்மோலா பகுதியை சேர்ந்த பெண் ஒருவரை கட்டாயமாக தனது கணவன் வீட்டிற்கு அழைத்து செல்ல, மணமகன் வீட்டின் உறுப்பினர்கள் காரில் வந்து. பெண்ணை இழுத்து சென்றபடி காரில் அமரவைத்து, தங்களது வீட்டிற்கு சென்று கட்டாய திருமணத்தை செய்து வைத்துள்ளனர்.

### • மரணித்த பெண்ணுக்கு எம்.ப்.ஏ பட்டம்

உக்ரைனின் எல்லைப்பகுதியில் சுட்டு வீழ்த்தப்பட்ட மலேசிய விமானத்தில் பயணித்து பலியான பெண் ஒருவருக்கு முதுகலை பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

### • எபோலா தொற்று – ஆபத்து

லைபீரியாவில் எபோலா வைரஸ் தாக்குதலுக்கு உள்ளாகி மரணிப்போரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கிறது. அந்நாட்டில் இதுவரை 4 ஆயிரத்து 33 பேர் இவ்வைரஸ் தொற்று காரணமாக உயிரிழந்துள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது ள்ளதுடன் 8 ஆயிரத்து 399 பேர் தொற்றுக்கு இலக்காகியுள்ளமை கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.

### • ஜெயலலிதாவிற்கு பிணை கிடைக்குமா?

ஜெயலலிதாவின் பிணை மனு உச்சநீதிமன்றத்தின் முதலாவது அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மீதான சொத்து குவிப்பு வழக்கில் அவருக்கு 4 ஆண்டு சிறைத் தண்டனையும், ரூ.100 கோடி அபராதமும் விதித்து பெங்களூரு சிறப்பு நீதிமன்றம் கடந்த மாதம் 27ஆம் தேதி தீர்ப்பு வழங்கியது குறிப்பிடத்தக்கது.

### • பெண்களை பாலியல் அடிமைகளாக்கும் ஐஎஸ்ஐஎஸ்

ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் யாஸிதி இனப் பெண்கள் மற்றும் குழந்தைகளை பாலியல் அடிமைகளாக்கி விற்பனை செய்கின்றனர். இதுவரை 7,000 பெண்களை பாலியல் அடிமையாக்கியுள்ளதாக ஐ.நா தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

### • அமைதிக்கான நோபல் பரிசு

நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நோபல் குழுவின் தலைவர் தோர்ப்ஜோயெர்ன் இன்று அமைதிக்கான நோபல் விருதுகள் பற்றிய அறிவிப்பை வெளியிட்டார்.

278 பேர் பெயர் அமைதிக்கான நோபல் பரிசுக்கு பரிசீலிக்கப்பட்டது. இறுதியாக இந்தியரான கைலாஷ் சத்யார்த்தி, பாகிஸ்தான் சிறுமி மலாலா ஆகியோருக்கு நடப்பாண்டின் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### • சிங்கப்பூர் தமிழ் கவிஞருக்கு உயர்ந்த விருது

சிங்கப்பூரை சேர்ந்த தமிழ்க்கவிஞர் ஒருவருக்கு சிங்கப்பூர் அரசு அந்நாட்டின் மிக உயர்ந்த விருது வழங்கி கௌரவித்துள்ளது. இதனால் சிங்கப்பூர் தமிழர்கள் சார்பில் அரசுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

### • வாடகைத் தாய் மோசடி

பெங்களூரில் வாடகை தாய் மூலமாக குழந்தை பெற்றுத்தர ஏற்பாடு செய்வதாக தம்பதிகளிடம் பணம் பெற்றுக்கொண்டு, கடத்தி வரப்பட்ட குழந்தைகளை அவர்களுக்கு அளித்த பிரபல மருத்துவமனை டாக்டர் பெங்களூரில் கைது செய்யப்பட்டார்.

### • நடுவானில் விமானத்தில் விரிசல்

நடுவானில் பறந்த அமெரிக்கன் எயார் லைன்ஸ் விமானமொன்றின் சுவர்களில் விரிசல் ஏற்பட்டு அது மோசமாக குலுங்க ஆரம்பித்ததையடுத்து அந்த விமானம் அவசர கால நிலைமையின் கீழ் தரையிறக்கப்பட்டுள்ளது.

### • குழந்தைக்கு தாய்ப்பாலுடன் மதுவைக் கொடுத்த தாய்

சீனாவைச் சேர்ந்த 27 வயது பெண் ஜாங் ஜின். சம்பவத்தன்று இவர் தன்னுடைய 3 வயது குழந்தைக்கு தாய்ப்பால் கொடுத்தார். குழந்தைக்கு பால் கொடுக்கும் முன்னர் இவர் அளவுக்கு அதிகமாக மது குடித்திருந்தார். குழந்தை மது கலந்த பாலை குடித்ததால் திடீரென அலர்ஜியாகி முகம் முழுவதும் சிவந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது.

### • நான் இறக்க விரும்பவில்லை

அமெரிக்காவினை பிரிட்னி மேனார்ட்க்கு கடந்த ஜனவரியில் அவருக்கு மிகுந்த தலைவலி ஏற்படவே, அவரது கணவர் டேன் அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றுள்ளார். பரிசோதனையில் பிரிட்னிக்கு மூளையில் கட்டி இருப்பதும் எதிர்பார்க்காத வகையில் கட்டி உயிர்கொல்லி புற்றுநோயாக மாறி பிரிட்னியின் உயிரை விழுங்கி கொண்டிருந்துள்ளது.

இதனால் அவர் 14 மாதங்களுக்கு மட்டுமே உயிருடன் இருப்பார் என மருத்துவர்கள் தெரிவித்தது, பிரிட்னியின் தாய் மற்றும் கணவனை பேரதிச்சியில் ஆழ்த்தியுள்ளது. இதுகுறித்து பிரிட்னி கூறுகையில், எதிர்வரும் 30ம் திகதி வரவிருக்கும் என் கணவனின் பிறந்தநாளை மட்டும் கொண்டாடிவிட்டு, நவம்பர் 1ம் திகதி தூக்க மாத்திரை சாப்பிட்டு தற்கொலை செய்து கொள்ளப்போகிறேன் என தெரிவித்துள்ளார். மேலும் எனது மரண படுக்கையில் இசை ஒலிப்பதுடன், என் கணவரும் தாயும் இருக்க வேண்டும் என்றும் அவர்களின் மடியில் நான் இறக்க வேண்டும் எனவும் கண்ணீர் பொங்க கூறியுள்ளார்.

### • மன உளைச்சலினால் 38 பேர் கொலை

இத்தாலியில் உள்ள நர்ஸ் ஒருவர் தனது வீட்டில் குடும்பத்தகராறில் ஈடுபட்டு மன உளைச்சலுடன் மருத்துவமனைக்கு வந்து இதுவரை சுமார் 38 நோயாளிகளை கொலை செய்துள்ளதாக தெரிய வந்துள்ளது. இந்த திடுக்கிடும் சம்பவம் காரணமாக இத்தாலியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

### • கடல் நீர் மட்டம் சில மில்லிமீற்றர்களால் அதிகரிப்பு

இதுவரை காலமும் இல்லாத வகையில் கடல் நீர் மட்டம் வேகமாக அதிகரித்து வருவதாக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். 6,000 ஆண்டுகளில் இல்லாத வகையில் கடந்த 150 ஆண்டுகளாக கடல் நீர் மட்டம் வேகமாக உயர்ந்து வருவதாக விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். உலக நாடுகள் பலவற்றில் தொழில்மயம் ஏற்படத் துவங்கியதை அடுத்து, கடந்த 150 ஆண்டுகளாக ஆண்டுக்கு சில மில்லி மீற்றர் கடல் மட்டம் உயரத் தொடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுக்கி விழுந்தாரா? அல்லது தள்ளிவிடப்பட்டாரா?

## பொறியியலாளரைத் தாக்கியதாகப் பிள்ளையான் மீது முறைப்பாடு

கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் பொறியியலாளர் ஒருவரை தாக்கிய சம்பவம் குறித்து பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மட்டக்களப்பு பிராந்திய பிரதம பொறியியலாளர் ஏ.சீ. நிசர்டீன் என்பவரை பிள்ளையான் மற்றும் அவரது ஆதரவாளர்கள் தாக்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்பட வேண்டுமென வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொறியியலாளர் ஒன்றியம் ஜனாதிபதி 13



## சி.வியின் நிகழ்ச்சி நிரலைப் புலம்பெயர்ந்தோரே தயாரிக்கின்றனர் - அருண் தம்பிமுத்து



இலங்கையில் நடக்காத விடயங்கள் தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வெளிநாடுகளில் பொய் கூறுவதாக, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் அருண் தம்பிமுத்து குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்..

கிளிநொச்சியில் ஜனாதிபதி மேற்கொண்ட விஜயம் தொடர்பிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

புலம்பெயர்ந்தவர்களின் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலேயே வடக்கு முதலமைச்சர் ஜனாதிபதியின் நிகழ்வை புறக்கணித்ததாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.



மலைமுரசு
MALAIMURASU
மலைமுரசு வாராந்தப் பத்திரிகை ஸ்ரீராம் பிரதர்ஸ் (குனி) நிறுவனத்தால் 159 A, கடல்முக வீதி, திருகோணமலையில் இருந்து .10.2014ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது
உங்கள் கையடக்கத் தொலைபேசியை மீள் நிரப்ப வேண்டுமா? செய்திகளை எமக்குச் சொல்லுங்கள் நாங்கள் மீள் நிரப்புகின்றோம் 0777 555 738
சுதந்திர நிருபர்களாக எம்முடன் இணையுங்கள்

# சைவ ஆலயங்கள் உடைப்பு

## இந்துக்குருமார் சங்கம் கடும் கண்டனம்

கடந்த வாரத்தில் மூதூர்பிரதேசத்தில் இரண்டு சைவக் கோவில்கள் உடைக்கப்பட்டதையிட்டு தமது கடும் கண்டனத்தை மூதூர் இந்துக் குருமார் சங்கம் வெளியிட்டுள்ளது.

கடந்த வாரத்தில் மட்டும் பாலத்தடிச்சேனையிலுள்ள ஸ்ரீமுருகன் ஆலயம் மற்றும் ஸ்ரீநாகதம்பிரான் ஆலயம் ஆகியவை உடைக்கப்பட்டுள்ளன. காவல்துறையின் ரோந்துகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே கொள்ளையர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

ஸ்ரீமுருகன் ஆலயத்தின் கொடித்தம்பப் பிள்ளையார் சிலை சேதமாக்கப்பட்டுள்ளதுடன் பீடமும் உடைத்தழிக்கப்பட்டுள்ளது.. நாகதம்பிரான் ஆலய நீர்ப்பம்பி உடைத்துக் களவாடப்பட்டுள்ளது.

காவல்துறை விசாரணைகளை முன்னெடுத்துள்ள போதும் தற்போதுவரை சந்தேக நபர்கள் கைதுசெய்யப்படாமலிருப்பது கொள்ளையர்களுக்கு மேலும் வலுச் சேர்க்கும் என மக்கள் தெரிவித்துள்ளனர்.



## கிழக்கு மாகாண இந்து ஆலய அறங்காவலர் ஒன்றியத்தின் பங்களிப்புடன் கிளிவெட்டி இடைத்தங்கல் முகாமில் அறநெறிப்பாடசாலை

கிளிவெட்டி இடைத்தங்கல் முகாமில் அறநெறிப்பாடசாலையொன்றை அமைக்கும் முயற்சியில் மூதூர் இந்துக்குருமார் சங்கம் ஈடுபட்டுள்ளது.

இதற்கான முதற்கட்ட அனுமதியை மூதூர் பிரதேசச் செயலகக் கலாசார உத்தியோகத்தர் வழங்கியுள்ளார்.

இதற்கமைய கிழக்கு மாகாண இந்து ஆலய அறங்காவலர் ஒன்றியத்தின் நிதிப் பங்களிப்புடனும் மலைமுரசின் பிரதம ஆசிரியரின் ஆலோசனைகளுடனும் இப் பாடசாலை 13

## கிழக்கை இயற்கை எழில் கொஞ்சும் இடமாக்குவோம்!




இலங்கையின் கிழக்கு மாகாணத்தை இயற்கைக்கலாசார மையமாக மாற்றப் போவதாக சர்வதேச அமைப்பான நெசனல் ஜியோகிராபிக் மப் தெரிவித்துள்ளது. (National Geographic Maps Division)

கிழக்கின் பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கும் நோக்குடன் உல்லாசப் பயணத்துறை அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு செயல் திட்டங்களை முன்னெடுக்க நெசனல் ஜியோகிராபிக் மப் ஆலொசனை செய்துவருகின்றது.

சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்தினால் நிதியளிக்கப்பட்டுவரும் நெசனல் ஜியோகிராபிக் மப் பிரிவானது விஞ்ஞான மற்றும் கல்வி அபிவிருத்தியை இலக்காகக் கொண்டியங்கும் ஓர் இலாபநோக்கற்ற நிறுவனம் ஆகும். 13

## "மண்ணை வாரிக் கொட்டி மத கலாசாரத்தை அழிக்காதீர்கள்"



மரணச் சடங்கு ஊர்வலத்தில் மண்ணை வாரிக் கொட்டி சைவ சமயக் கலாசாரத்தினைத் திரிபு படுத்தாதீர்கள் என சமூக சேவகர், சமாதான நீதிவான் திரு வி.செல்வராசா மக்களைக் கோரியுள்ளார்.

தனது சொந்தச் செல்வில் துண்டுப் பிரசுரங்களையும் பதாதைகளையும் தயாரித்து இவ்விடயம் தொடர்பான விழிப்புணர்வினை மக்களிடையே ஏற்படுத்த அவர் அயராது பாடுபட்டு வருகின்றார்.

திருகோணமலையில் சைவ மக்களின் மரணச் சடங்கு ஊர்வலத்தில் கடல் மண்ணை தெருக்களில் வீசுவது ஒரு பண்பாக உள்ளது. ஆனால் இப்பண்பு உண்மையிலேயே சைவசமய கலாசார பிணைப்புடையது அல்ல என 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org